# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்



பெருமையுடன் கூடிய ஒரு பயணத்தின்
நீங்காத நினைவுகள்

# சுனிலா

Women and Media Collective
Established 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

இரண்டாம் அரையாண்டு - 2013
ISSN 1391-958X

---

**கௌரவ ஆசிரியை**
குகநிதி குகநேசன்

---

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

---

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு - 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045/5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org
facebook.com/womenandmediacollective
twitter.com/womenandmedia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சொல்ல விரும்புவது...

சொல்லின் இவ்வருடத்தின் இரண்டாம் காலாண்டாகிய இவ்விதழ் "வேலை செய்யும் பெண்கள்" என்ற தொனிப்பொருளில் வெளி வருகின்றது. நாளாந்தம் பெருகிச் செல்கின்ற விலைவாசிகள், உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாமை, மீள்குடியேற்றப் பகுதிகளில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் என பலவாறான விடயங்களை இத்தொனிப் பொருள் உள்ளடக்குகிறது. இன்றைய கால கட்டத்தில் அதாவது போருக்குப் பிந்திய இக்காலத்தில் பெண்கள் தொழில் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை நிலவுகின்றது. குடும்பத்தில் தனியொருவரின் வருமான ஈட்டல் அக்குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. ஆகவே, தற்போது பெண்கள் தொழில் புரியச் செல்வதென்பது அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றாகி விட்டது. இதனால் பெண்கள் புலம்பெயர்ந்தும், சுதந்திர வர்த்தக வலையம் நோக்கிச் செல்வதும் அதிகரித்தும் வருகின்றது. அவ்வாறு தொழில் செய்யச் செல்கையில் அவர்கள் மீது குடும்பம் மற்றும் பொருளாதார ஈட்டல் என்கின்ற இரட்டைச் சுமை சுமத்தப்படுகின்றது. இதனால் பெண்கள் மீது பாரிய பொறுப்புத் திணிக்கப்படுகின்றது. அத்துடன் குடும்ப மட்டத்தில் பெண்கள் எவ்வித ஊதியமும் இன்றி குடும்பத்தின் அத்தனை தேவைகளையும் நிறைவு செய்கின்ற பால்நிலை பாரபட்சம் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை நிலவுகின்றது. பெண்களது குடும்ப ரீதியான உழைப்பு பெறுமதி வாய்ந்த ஒன்றாகக் கணிக்கப்படுவதில்லை. இலங்கையில் இவ்வாறான நெருக்கடி நிலையை அனைத்துப் பகுதிப் பெண்களும் எவ்வித வேறுபாடும் இன்றி அனுபவிப்பது வெளிப்படையான உண்மையாகும். எனவே, இம்முறை சொல் இதழ் வேலை செய்யும் பெண்கள் தொடர்பான பல கேள்விகளை உள்ளடக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு அண்மையில் நோயுற்றிருந்து காலமான மனித உரிமை ஆர்வலரும், பெண்ணியவாதியுமாகிய சுனிலா அபேசேகர பற்றியும் அவர்களது நினைவுத் தடங்கள் தொடர்பான விடயங்களையும் இச்சொல் தாங்கி வருகின்றது. இவர் ஆரம்ப காலத்தில் இருந்து சொல் இதழில் இடம்பெறுகின்ற "சொல் விடுக்கும் அறைகூவல்" பகுதியில் தனது பெண்ணிலைவாதம் தொடர்பான விடயங்களையும், "விஷ்வப்பிரியா" என்ற பெயரில் சினிமா விமர்சனங்களும் எழுதியுள்ளார். அவர் பெண்கள் தொடர்பாகச் செய்த செயல்வாதங்கள் பற்றியும், இலங்கையில் பெண்ணிலைவதம் தொடர்பாக குரல் எழுப்பியமை மற்றும் கலைத்துறையில் அவர் கொண்ட ஈடுபாடு பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சுனிலா இலங்கையின் அனைத்துப் பகுதிப் பெண்களுடனும் இணைந்து செயலாற்றியுள்ள ஒருவராவர். அவரது இழப்பு பெண்கள் செயற்பாட்டாளர்களாகிய எமக்கு ஓர் பேரிழப்பாகும். அவர் தொடர்பில் விரிவான பார்வையை இங்கு ஆக்கங்களை எழுதிய எழுத்தாளர்கள் செலுத்தியுள்ளார்கள். அவை சுனிலா அபேசேகர அவர்கள் எம்மிடையே விட்டுச் சென்ற நினைவுகளாகவும் அமைந்து விடுகின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அறைகூவல்!

இக்காலத்தின் அதிசிறந்த அரசுத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு உலகம் அஞ்சலி செலுத்தியதுடன் 2013 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. சுதந்திரப் போராளியிலிருந்து ஓர் அரசியல் சிறைக் கைதியாகி தேசியத்தின் ஜனாதிபதி என்றளவிலான அவரது பயணத்தில் அவர் இன ஒதுக்கீட்டு கொடுங்கோலில் இருந்து விடுதலையளித்தார். இன ஒதுக்கல் என்பது தென்னாபிரிக்காவில் உறுப்புரிமையுடைய ஒரு சிறுபான்மையினராகிய வெள்ளை இனத்தவர் பெரும்பான்மை கறுப்பு மக்களுக்கு எதிராக கொடூரமாகப் பாரபட்சம் காட்டியமை ஓர் பிரித்து வைக்கும் அரசியல் முறைமையாக இருந்தது. மண்டேலா ஊக்க உயிர்ப்பு, நல்லிணக்கம் நீதி என்பவற்றின் பூரண உதாரணமாகத் திகழ்கிறார். பிரான்ஸ் ஜனாதிபதி கூறியவாறாக அவர் தொடர்ந்தும் சுதந்திரப் போராளிகளைத் தூண்டுவதுடன் தம் காரணங்கள் மற்றும் உலகளாவிய உரிமைகளின் பாதுகாப்புக்காக உள்ள மக்களுக்கு நம்பிக்கையை அவர் தொடர்ந்தும் கொடுப்பார்.

புரட்டாதி மாதத்தில் இலங்கையில் மனித உரிமைகளுக்கான கருணையுள்ள போராளியும், மதிப்பிற்குரிய நண்பியுமான சுனிலா அபேசேகரவை நாம் இழந்துள்ளோம். அய (அவள்) சிங்கள சஞ்சிகையில் அதன் அறைகூவலிற்கு எழுதுவதனூடாக அவர் தவறாது தனது பெண்ணிலை அரசியல் பார்வையை வெளிப்படுத்தினார். அத்துடன் ஓர் கிரமமான திரைப்பட விமர்சனம் எழுதுவதில் அவரது நினைவு, அவரது வாழ்க்கை நிலைமை, மனிதத்தன்மை, மனிதநேயம் போன்ற விடயங்களை அர்ப்பணித்துள்ளார். சுனிலா முதலும் மேன்மையுமான பெண்ணிலைவாதி. அவர் தனது பெண்ணிலைவாதத்தை தனது வேலைக்குள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், காப்பதற்குமாகக் கொண்டு வந்திருந்தார். அவர் தனது வாழ்வினை பல சமூக இயக்கங்களின் நீதி மற்றும் மனித உரிமைகளைப் பெண்கள் சார்பாகவும் மற்றும் அவர்கள் இனம், வகுப்பு, பால்நிலை அல்லது பாலியல் போன்றவற்றின் அடிப்படைகளின் நிமித்தம் பாரபட்சம், இடைவிடாது நீதிக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடும் பல சமூகங்களின் முன்னணியாகவும் கையாண்டார். அவர் யுத்தத்தின் காரணங்கள், விளைவுகள் பற்றியும் யுத்தம் முடிந்த தன்மை பற்றியும் அக்கறை கொண்டிருந்தார். வெலிக்கடை மற்றும் வவுனியா சிறைகளின் கொலை குறித்தும், நாடு பூராகவும் பத்திரிகையாளர்கள் இலக்கு வைக்கப்படுவது குறித்தும், ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவது குறித்தும் அவர் சமஅளவு அக்கறை கொண்டிருந்தார். எழுந்துவரும் சமய சகிப்புத்தன்மை இன்மை தொடர்பாகவும், அவர் மிகவும் மதிக்கும் அடிப்படை சமய நிலைகளுக்கு எதிராக இடம்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுபலசேனவினால் தூண்டப்பெற்ற முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு எதிரான தாக்குதல் குறித்தும் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

நெல்சன் மண்டேலாவின் நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான நெடுங்கதை குறித்து இக்கட்டுரையின் ஆரம்பத்திலே பேசினோம். எவ்வாறாயினும் அரசியல் வன்முறை அடக்குமுறைக்குப் பின்னான தேசிய கட்டியெழுப்புதலில் அவரின் பங்களிப்பு பெரிதாக இருந்தது. அரசியல் அமைப்பு உத்தரவாதங்களில் உள்ள வேறுபாடுகளின் மீதான மரியாதையுடன் பெண்கள் உட்பட்ட அனைவருக்குமான சமாதான சமத்துவத்தை அவரது நெடுங்கதை உள்ளடக்கியுள்ளது.

புதிய அரசியலமைப்பின் ஊடாக அவரும் அரசானது நீதியற்ற முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இனம், பால்நிலை, பால், கர்ப்பநிலை, திருமண நிலை, இன அல்லது சமூக பூர்வீகம், நிறம், பாலியல் நிலை, வயது, இயலாமை, மதம், மனச்சாட்சி, நம்பிக்கை, கலாசாரம், மொழி மற்றும் பிறப்பு போன்ற ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைகளிலோ யாரின் மீதோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசானது நீதியற்ற முறையில் பாரபட்சம் காட்டக்கூடாது என புதிய அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தினார்.

நெல்சன் மண்டேலாவின் இறப்பு மீதான அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ "அவரது வாழ்வும் தத்துவவியலும் எனக்கு ஆழமாக உள்ளுணர்வு உடையதாக இருப்பதுடன், ஜனாதிபதி மண்டேலாவின் இறப்பானது தனிப்பட்ட முறையில் எனக்கு பெரிய இழப்பாக உள்ளதை உணர்வதாகத்" தெரிவித்தார். நெல்சன் மண்டேலாவின் வாழ்வும் தத்துவவியலும் சட்டஒழுங்கிற்கான நீதியையும், மரியாதையையும் உள்ளடக்கியிருந்தது. அவர் தண்டனையிலிருந்து விலக்கீடு பெறும் உரிமைக் கலாசாரத்தை வேரோடு அழிப்பதுடன் ஆளுகையினரின் அல்லது ANC யினரின் கடந்த குற்றச் செயல்களுக்கு பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்துவதுடன் அமைதியுடனும் நீதியுடனுமான நல்லிணக்கத்தை இயலச் செய்யும் முறைமைகளை அவர் கட்டினார். இந்த மரவுரிமைப் பண்பையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்த வேண்டியிருப்பதுடன் இலங்கையானது உண்மையில் 35 வருட யுத்தத்திலிருந்தும் மனித உரிமை, வன்முறை, பாரபட்சம் என்பவற்றில் இருந்து திருந்தி உண்மையில் மீட்சி பெறுவதாயின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்த வேண்டிய சவாலை எதிர்கொள்ள வேண்டிய மரபுரிமை இதுவாகும்.

பெண்களுக்கான தீவிரமான அக்கறைகளுடன் நாங்கள் ஒரு புதுவருடத்தை தொடங்குகிறோம். இலங்கையின் பலவீனமான மனித உரிமை பதிவுகள் ஜனநாயக ஆட்சியின் விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கு தொடர்ச்சியாக அரசியல் விருப்பு இல்லாமை என்ற நிலையிலும் பொதுநலவாயத்திற்கு தலைமைதாங்கும் கௌரவப் பதவிநிலையினை, இவ்வாறான எல்லா சலசலப்புகளுக்கும் இடையிலும் இலங்கைக்கு கொடுக்கும் சோகம் மகாநாடு ஆரம்பித்த முதல் நாளிலேயே, சிறுவர் விருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த MTV தொலைக்காட்சியில் இது வெறுமனே "கற்பைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத பெண்களே பால்நிலை சமத்துவம் தொடர்பாகக் கதைக்கிறார்கள்" எனக் குறிப்பிட்டதைக் கேட்டு நாம் அதிர்ச்சியடைந்தோம். அமைச்சரே MTV தொலைக்காட்சியிலும், சிலநாட்கள் கழித்து பாராளுமன்றத்திலும் தானே ஏற்றுக்கொண்டவாறாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வன்முறை விகிதம் அதிகரிப்பது குறித்தான ஒரு பாரதூரமான கேள்வி எழுந்துள்ளது. அவர் தரும் புள்ளிவிபரங்கள் உயர்வாக உள்ளன. திஸ்ஸ கரலியத்த பல சமயங்களில் பொதுவாக இலங்கைப் பெண்களை கீழ்மைப்படுத்தும் கடுமையான பாலியல் கருத்துக்களை, தான் ஒரு அமைச்சரவையின் பெண்கள் சிறுவர் விவகார அமைச்சர் என்ற பொறுப்புணர்வு எதுவும் இன்றி வெளியிட்டுள்ளார். ரேணுகா ஹேரத், அமரர் சிறிமணி அத்துலத்முதலி, அமர பியசீலி ரத்நாயக்க மற்றும் சுமேதா ஜயசேன போன்ற பல முன்னாள் பெண் அமைச்சரவை அமைச்சர்களை நாம் கடந்த காலத்திலே கொண்டிருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கவனத்துடன் அமைச்சரவைப் பொறுப்பை கொண்டிருப்பவர்களாக, பொறுப்புடன் தமது வகிபங்கை ஆற்றியிருந்தனர். அவர்கள் பால்நிலை சமத்துவ நியமங்களை சாதிப்பதை நோக்கியும் பெண்கள் மற்றும் ஆண்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கும் பணியாற்ற முயற்சித்தனர். அரச பொறுப்புக்களைக் கொண்டிருப்பவர்களின் விழுமியங்களில் சீர்கெடுவதானது ஒரு அதிர்ச்சிதரும் சுட்டிக்காட்டியாக உள்ளதுடன் முதலாவது பெண்கள் விவகார ஆண் அமைச்சர் இலங்கைப் பெண்களை குறைத்து மதிப்பிடுவதும், அடையாளங் காணப்பட்ட பெண்கள் குழுக்களை துஷ்பிரயோகம் செய்யும் சிறுமைப்படுத்தும் பொதுக்கூற்றுக்களை வெளியிடக்கூடியதாக உள்ளது. அமைச்சரின் கூற்றானது இந்தப் பொறுப்புக்களை அவர் அறியாதிருப்பதை மிகவும் தெளிவாகக் காட்டுவதுடன், தனது தனிப்பட்ட மற்றும் பொதுவாழ்வில் பால்நிலை சமத்துவத்தின் பெறுமானங்களை மறுப்பதையும் காட்டுகிறது.

பெண்கள் விவகாரத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் இழிவான ஒரு 0.008% ஆக உள்ள நேரத்தில் இவ்வாறான கூற்று வருகிறது. பெண்களின் சமூக பொருளாதார உரிமையை நிறுவிக்கொள்வதற்காக வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் முக்கியத்துவத்தினை நாம் இன்னும் குறைத்து மதிப்பிட முடியாது. பால்நிலை பார்வை நோக்கில் வரவு செலவுத்திட்டங்களை பகுப்பாய்வு செய்வதற்கு நாம் தொடங்க வேண்டும். பால்நிலை சமத்துவத்தை முன்கொண்டு செல்ல, பெண்களின் உரிமைகளின் மீது நுண்பொருளாதாரக் கொள்கைகள் தாக்கம் ஏற்படுத்தும் வழிக்கு கவனத்தை ஈர்ப்பதற்கு, பால்நிலை சமத்துவத்தை முன்கொண்டு செல்லும் ஒரு தெரிவை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒவ்வொரு வரவு செலவுத்திட்டமும் எவ்வளவுக்கு உள்ளது என்பதை கேட்பதற்கு பால்நிலை பார்வைநோக்கிலிருந்து வரவு செலவுத்திட்டத்தை பகுப்பாய்வு செய்ய நாம் தொடங்க வேண்டும். பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாரபட்சமின்மையை மிகவும் பாரதூரமாக எடுத்தல் போன்ற விடயங்களை எடுத்துக்கொள்வதற்காக நாம் ஜனாதிபதியை சந்திக்க வேண்டுமென்பதுடன் இலங்கையின் அரசியலமைப்பில் பொதியப்பட்டுள்ள சமத்துவத்திற்கான பெண்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு உயர்மட்டத்திலான அரசியல் விருப்புக்காகவும் அழைப்பு விடுக்கத் தொடங்க வேண்டும். ஜனநாயகத்திற்கும் சமத்துவத்திற்கும் பல்வகைத் தன்மையை மதிப்பதற்குமான ஒரு போராட்டம் இதுவாகும். இப்போராட்டமானது பெண்களின் பொறுப்பு மாத்திரமானதல்ல. மனித உரிமைகளுக்காகவும், மனித மகத்துவத்திற்காகவும் பணியாற்றும் எல்லோரும் ஆண்களும் பெண்களும் சேர்த்து நடத்த வேண்டிய போராட்டம் இதுவாகும். இது தான் சமூகத்தை மாற்றுவதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மகத்துவத்தை பேணுவதற்குமான எமது ஒரே வழியாகும். பெண்கள் சுதந்திரம் பெறும் வரைக்கும் அவர்கள் மகத்துவத்துடன் நடத்தப்படும் வரைக்கும் எந்த சமூகமும் சுதந்திரம் பெறாது. ■

**குமுதினி சாமுவேல்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனிலா

உன் குரலின் இனிய இறக்கைகள் உடைந்தனவா?
உள்ளத்தினுள்ளே இருள் மட்டுமே நிரம்பியதே
புன்னகையின் சுகந்தத்தை துடைத்தெடுத்து விலகினையோ
தனித்துச் சுதந்திரமாய் இருந்திட விரும்பினையோ?

கத்திக் கரைகின்ற காகங்களின் இரைச்சலினால்
காதுகள் தவிப்பதை யாரிடம் உரைத்திட
பாய்ந்தோடி வரும் வேளை உன்குரலோசை
சூரியனேயானாலும் முழந்தாளிட்டு வீழ்ந்திடும் நிலவே உன்னிடம் வந்து

கன்னக் குழியெழுந்திட விழிகளைச் சிறிதாக்கி
இரகசியங்களை வெளிக்கொணரும்
மனிதாபிமானத்தை உன்னிடம் கண்டோம்
களைப்பு மிகைத்துக் கனவுகளிடம் காவலிருக்கும்

நீள இரவிது உதயமொன்று இனிப் புலருமோ?
கண் இமைகள் இன்னுமே மூடாமல் வெறித்திருக்கும்
போகும் வழியை சற்றுத் திரும்பிப் பார்த்திடலாமோ
சுவாசப்பைகளையும் பகிர்ந்தளித்தல் சகோதரி
கண்ணீரினூடே புன்னகைத்திட ஏன் முடியாது

சாகடித்துக் கொள்ளும்போது
காரிருள் சூழ் வனாந்தரத்தினுள்ளே
சகித்துக் கொண்டிருக்க முடியாத திக்கில்
சந்தனச் சிதை உள்ளது
நித்தமும் கதை நிகழ்ந்திட அழைக்கும் வேளை
விழிகளை மெல்லத் திறந்து எழுந்து வருவாயா?

துயிலாத நதி துயில் கொண்டு விட்டது
எமைக் கரைதனில் கிடத்தி
பிரார்த்தனைகளைச் சுமந்திருந்தாலும்
நெஞ்சு கொள்ளாமல் வெடித்திடும்
இனி எங்கு செல்வதென நாமறியோம்
உதும்பரா உன் புன்னகையழிந்து போன இப்பிறவியில்

**மஞ்சுல வெடிவர்தன**

*தமிழில் - ஃபஹீமா ஜஹான்*
*மூலம் - "உயிர்நிழல்" 2013*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருமையுடன் கூடிய
ஒரு பயணத்தின் நீங்காத
நினைவுகள்

# சுனிலா அபேசேகர

1952 - 2013 புரட்டாதி 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குத் தெரிந்த அமரத்துவம் அடைந்த தோழி சுனிலா அபேசேகரவின் அரசியல்

*(1952-2013)*

"இது ஒவ்வொருநாளும் மிகவும் பாரதூரமாகிறது என நான் நம்புகிறேன். இனவாதம், புதிய பாசிச வாதத்தின் எழுச்சி, புலம்பெயர்ந்தவர்கள் மீதான நடாத்துகை, புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான இயக்கங்களின் எழுச்சி என்பன இப்பொழுது இடம்பெறுவதை நாங்கள் காண்கின்றோம். 2009 இன்றைய சூழமைவில், இந்த எண்ணத்துடன் பத்து வருடங்களுக்கு முன்பு நாம் பணியாற்றத் தொடங்கியபொழுது எமக்கு இருந்ததை விட, ஊடு கடந்த தன்மை மிகவும் முக்கியமாகிறது. கடந்த காலத்திலே இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீனியப் பெண்கள் ஒன்றாகப் பணியாற்றுவதற்கு முயற்சித்த வழிகளை நீங்கள் பார்ப்பீர்களாயின் அல்லது இலங்கையில் சிங்கள, தமிழ் பெண்கள் அவ்வாறு ஒன்றாகப் பணியாற்றுவதற்கு முயற்சித்த வழிகளை நீங்கள் பார்ப்பீர்களாயின், முரண்பாடு முனைப்படையும் பொழுதெல்லாம், துருவப்படுத்தல் கூர்மையடைகிறது. அத்துடன் உதவி செய்வதற்கான இயலுமை, இரக்கம் கொள்ளுதல், உங்களது பேரால் செய்யப்படுபவைகளின் அளவின் முகத்தில் அடக்கமாக இருத்தல் என்பன இல்லாத அளவிற்கு சுருங்கிப் போகிறது. நான் ஒரு சிங்கள இனத்தை சேர்ந்தவள். இலங்கை அரசாங்கம் இந்த யுத்தத்தை சிங்களவர்களைப் பாதுகாக்கும் பெயரில் நடாத்துகிறது. இவ்வண்ணமான சூழமைவில் பெண்ணிலைவாதிகள் என்ற வகையில், எமக்கு ஒரு பொதுநோக்கு இருப்பதால், அந்த எண்ணத்தில் செயற்பட்டுக் கொண்டு இருப்பது அநேகமாக இயலாத விடயமாக இருப்பதுடன், இந்த நம்பிக்கையில் நாம் செயற்படுவது முக்கியமானதாகிறது."

- சுனிலா அபேசேகர



இந்த மேற்கோளானது தோழி சுனிலா அபேசேகரவின் அரசியல் சிந்தனையைப் பொருத்தமான வகையில் பொழிப்பாக்குகிறது. அவரது வாழ்வின் 40 இற்கும் மேற்பட்ட வருடங்கள், சில வேளைகளில் நேரடி அரசியலில், வேறு காலங்களில் அவ்வாறு நேரடி அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடாத காலங்களாகவும், உள்ளன. அவரது அரசியல் வகிபங்குகள் பல வகைகளை எடுக்கின்றன. ஆனால் புகழ்பெற்ற, இரக்கமுள்ள, அர்ப்பணிப்புள்ள, ஒருவராக அவர் பார்க்கப்படுகிறார். அவரது வாழ்க்கைக் காலத்தின்பொழுது, அவர் ஒரு அரசியல் செயற்பாட்டாளராக, மனித உரிமை செயற்பாட்டாளராக, பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளராக, கலைஞராக பல வகிபங்குகளை ஆற்றியுள்ளார். அவர் இலங்கையில் உள்ளூரிலும், உலகளாவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியிலும், மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகளுக்காக கடுமையாகத் தன்னை அர்ப்பணித்திருந்தார். அவரது அடிப்படை அரசியல் தத்துவமானது, எல்லா நபர்களும், அவனதோ அல்லது அவளதோ சமூக, பொருளாதார, அரசியல் பின்புலங்களைக் கருத்தில் எடுக்காது, அவர்களின் வாழ்வுரிமை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்ற பார்வை நோக்கிலிருந்து எழுகிறது. அவரது இறப்பு வரை அவர் தான் நம்பிய அரசியல் கொள்கைகளில் நிலைநின்றதுடன், இலங்கையில் உள்ள பாரதூரமான சட்டம் ஒழுங்கு நிலைகள் குறித்துக் கேள்வி எழுப்பினார்.

ஜனநாயக மறுப்பே பலவாறான முரண்பாடுளுக்குப் பெரிதும் காரணமாக இருப்பதுடன், இலங்கையில் பின்தொடர்ந்த அழிவுகளுக்கும் காரணமாக இருந்தது என சுனிலாவால் அரசியல் ரீதியாக பகுப்பாய்வு செய்து அடையாளம் காண முடிந்தது. ஜனநாயகம், பங்குபற்றுகை மற்றும் மக்கள் உரிமைகள் சமத்துவமாக இருத்தல் என்பன மறுக்கப்படும்பொழுது அடையாளத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் மேற்கிளம்புகிறது. இது நீண்டகாலப் போக்கில் பாரதூரமான பின்விளைவுகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய பிரிவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. தெற்கு மற்றும் வடக்குப் புரட்சியானது ஓர் பெரும்பான்மை அரசாங்கத்தின் வடிவத்தில் காலனித்துவவாதிகளால் விதிக்கப்பட்ட காலனித்துவ சார்பு ஒழுங்கு முறைமை ஆளுகையின் விளைவாக ஏற்பட்டதாகும். இவ்வண்ணமான முரண்பாடுகளின் விளிம்பிலிருந்து வெளியேறுவதற்கு, புதிய ஜனநாயகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு இட்டுச் செல்லும், அதிகார பங்கீடுகள், பரவலாக்கல் அவசியமானது என அவர் நம்பினார். அவ்வண்ணமான ஒரு ஏற்பாடானது, தீவிலுள்ள சனசமூகங்களுக்கிடையிலான, உறவினை வரைவிலக்கணம் செய்யும் காரணியாக உள்ள சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்ற நடைமுறையிலுள்ள பிரிவை சமூகத்திலிருந்து இல்லாது போக்கும்.

எழுபதுகளில் இருந்து ஒன்றுக்குப் பின் ஒன்றாக வந்த இலங்கை அரசாங்கங்களானவை, தெற்கு மற்றும் வடக்கில் இருந்தான, இளைஞர் போராளிகளுக்கு, அடக்குமுறைச் சட்டவாக்கங்கள், ஏதேச்சாதிகாரமான கைதுகள், தடுத்துவைப்புகள், சித்திரவதைகள் மற்றும் தணிக்கை உட்பட வெளிப்படுத்தல் சுதந்திரத்தை அடக்குதல் என்பன மூலம் பதிற்செயற்பாடு காட்டி வந்தன. சுனிலாவின் வாழ்வில் ஒரு முக்கியமான கணமாக இருந்தது 1971 இல் ஜேவிபி யின் கிளர்ச்சியாகும். இவ்விடயமானது, இவ்விளம் பெண்கள் சமூக அநீதி குறித்த பலமான உணர்வையும், கவனிப்பாரற்ற நிலையிலுள்ள மக்கள் மற்றும் வறிய கிராம சனசமூகங்களிலிருந்தான இளையோர் உட்பட்டோரின், கவனிப்பாரற்ற நிலை குறித்த உத்வேகத்தையும், ஊட்டியது. அவர் கூறுவதன் பிரகாரம், இப்புரட்சியில் ஈடுபட்ட இவ்விளம் ஆட்கள், இம்முறைமைக்கு எதிராக சவால்விடத் துணிந்துள்ளனர். ஆகவே அவரும், ஏனைய இளம் தோழமையுள்ளோருடன், இளம் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ள ஆரம்பித்ததுடன், படிப்படியாக அவர்களின் சட்டரீதியான பாதுகாப்பு அரசியலிலும் ஈடுபடலாயினர்.

அவர் இறக்கும் வரை பல உள்ளூர் விடயங்களில் ஈடுபட்டதன் காரணமாக, இலங்கையின் அரசியலுடன் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தார். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அயராது பணியாற்றியதுடன், தேசிய பிரச்சினைக்கு ஒரு பேச்சுவார்த்தையின் உடனான அரசியல் தீர்வுக்கு அவர் ஆதரித்து உரைத்தார். மனிதத்தின் அடிப்படை உரிமைகளுக்காக அவர் தனது அர்ப்பணிப்பையும், கடமைப் பொறுப்பையும், ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை. இந்த வழியில் அவர் ஒரு சுயாதீனமான ஆனால் முன்னேற்றகரமான நிலைப்பாட்டை, மனித உரிமை மீறுகைகளை மேற்கொள்ளும் எந்தத் தரப்புக்கு எதிராகவும் பேசுவதில் இந்த விதமான சுயாதீனமான, ஆனால் முன்னேற்றகரமான நிலையை எடுக்கக்கூடியதாக இருந்தது. அவர் திண்ணைப் பேச்சு உரையாடல்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட ஒரு மேற்தர அரசியலையும் வெறுமனே விரும்பியவர் அல்ல. ஆனால் மக்களிடம் சென்று மக்களோடு அவர்களின் விருப்புக்களுக்காகப் பணியாற்ற விரும்பினார்.

அவர் ஒரு பெரும் துணிவுடைய, தூண்டுதல் அளிக்கும், பெண் அரசியல் செயற்பாட்டாளர் ஆவார். ஒரு சிறந்த பெண் பாடகியாக, விடுதலைப் பாடல்கள் பாடகர் குழாமில் இருந்து கொண்டு, போராட்ட விடுதலைப் பாடல்களை ஏனைய பாடகர்களுடனும் இசைக் கலைஞர்களுடனும் சேர்ந்து கொண்டு, சாதாரண மக்களுக்காக வீடுகளிலும் நகரங்களிலும் பாடினார். "றெட் பவர்" என்ற இதழுக்கான எழுத்தாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் அவர் இருந்தார். கொழும்பு மாவட்டங்களுக்கான அரசியல் நடவடிக்கைகளில், மத்திய கீழ் மற்றும் மத்திய வகுப்புக்களுக்காக, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும்பொழுது, அவருடன் அரசியல் செயற்பாடுகளை, வீட்டுக்கு வீடு பிரசாரம், புதினப்பத்திரிகை விற்றல், தனிப்பட்ட மற்றும் குழுக் கலந்துரையாடல்களை நடத்துதல், சுவரொட்டிகளைப் போடுதல், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், பொது அரசியல் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் என்பவற்றில் ஈடுபடக் கிடைத்தது.

ஜேவிபியிலிருந்து விலகியதிலிருந்து, நேரடியான முறையில் பெண்கள் உரிமைகளானவை மனித உரிமைகள் என விளக்கம் செய்து, அவர் நேரடியான முறையில் தனது அரசியல் செயற்பாட்டைத் தொடர்ந்தார். அடையாளத்துவத்தின் அடிப்படையிலான அரசியல் உருவாக்கங்களாவன, அநேகமாக ஆணாதிக்கத்தில் காணபடுவதுடன், அதன் நிமித்தமாக பெண்கள், இனப்பெருக்க வகிபங்கு (சமூக ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும்) மற்றும் அவர்களின் நடமாட்டம் மற்றும் வெளிப்பாட்டுக் கருத்து தெரிவு செய்தல் சுதந்திரம், விசேடமாக திருமணம் மற்றும் பிள்ளைகளின் விடயத்தில், அவர்களின் சுதந்திரங்களில் வரையைறைகளை விதித்து, அநேகமாக பெண்களை இவற்றுக்குள் குறுக்கியதன் நிமித்தமாகவே, பெண்ணியவாத அடிப்படையிலான அரசியல் சிந்தனை மேற்கிளம்பியது. மூலதத்துவ போராளி நிறுவனங்களில் கூட, பெண்களின் வகிபங்குகளானது, ஆணாதிக்க நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்டவாறாக, சனசமூகங்களில் பெண்களின் வகிபங்குகளை ஒத்தனவாகவே உள்ளன

காலனித்துவவாதிகளால் ஜனநாயக முறை கொண்டு வரப்பட்ட நாடுகளில், பிரஜா உரிமை தொடர்பாக, சமூகமானது எந்த சமூக ஒப்பந்தத்தையும் அனுபவிக்கவில்லை. சமூக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பாலியல் ஒப்பந்தத்தை உருவாக்கும் பெண்ணியவாத எண்ணத்தை உள்ளடக்குவதற்கு சுனிலா இதனை விஸ்தரித்திருந்தாள். சமூக ஒப்பந்தமானது ஒரு பாலியல் ஒப்பந்தமாக இருந்ததுடன், ஜனநாயகத்தின் முழு எண்ணமுமே, உரிமைகளை உலகத்தின் ஒரு ஆணாதிக்க புரிந்துணர்வுக்குள் அமைத்ததுடன்,

**சுனிலா எதிர்கொண்ட பல சவால்களாவன புலனாய்வு முகவர்களின் கேள்விகள் மற்றும் அவருக்கு அரசாலும் எதிர் அரசியல் குழுக்களாலும் முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரங்கள், சாவு அச்சுறுத்தல்கள் என விஸ்தரிக்கப்பட்டிருந்தன**

பிரஜா உரிமை தொடர்பாக ஆண்கள் மற்றும் பெண்களின் வேறுபட்ட வகிபங்குகளும் இருந்தன. அரசியல் சூழமைவில் பெண் பிரஜைகளின் வகிபங்கு தொடர்புடையவற்றில் பெண்களுக்கு இரண்டாம் தரப் பிரஜா உரிமை வழங்கப்பட்டிருப்பதே அவரது கேள்வியாக இருந்தது.

அவர் எதிர்கொண்ட பல சவால்களாவன புலனாய்வு முகவர்களின் கேள்விகள் மற்றும் அவருக்கு அரசாலும் எதிர் அரசியல் குழுக்களாலும் முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரங்கள், சாவு அச்சுறுத்தல்கள் என விஸ்தரிக்கப்பட்டிருந்தன. அவரது சொந்தப் பாதுகாப்பின் மீது விடுக்கப்பட்ட இடர்களை அவர் அசட்டை செய்தார். சாவு அச்சுறுத்தல்களின் நிமித்தம் 1987இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இலங்கையை விட்டுச் சென்றார். அவர் இலங்கையின் எதிரியாகவும் காட்டிக் கொடுப்பவராகவும் பெயர் சூட்டப்பட்டார். அமரர் கலாநிதி மனோராணி சரவணமுத்து அவருடன் சேர்ந்து, அவர் காணாமற்போன ஆட்களின் தாய்மார்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அன்னையர் முன்னணியின் சார்பாகப் பொதுக்கூட்டங்களில் பகிரங்கமாகப் பேசினார். பொது அளவிலான கட்டாய காணாமலாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபொழுது, பலர் அச்சமூட்டப்பட்டு அமைதியாக இருந்த நிலையில் தெற்கில் பயங்கரம் நிலவிய காலப்பகுதியில், ஒரு பகிரங்க பேச்சாளராக அவரை ஆக்கிய அவரது துணிவு, அரசியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்கது.

இராணுவமயமாக்கல், முரண்பாட்டு நிலைமாற்றம், சமாதானத்தைக் கட்டியெழுப்பல் போன்ற விடயங்களைப் பார்ப்பதில், ஒரு பெண்ணிலைப்பார்வை நோக்கின் மீதான அடிப்படையில், பல செயற்பாடுகளில் அவர் பணியாற்றி இருந்தார். இலங்கையில் நல்லிணகத்திற்கும் பொறுப்புக்கூறலுக்கும் அழைப்பு விடுத்த 2012 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தீர்மானத்திற்கான அவரின் ஆதரவிற்காக, அரசகட்டுப்பாட்டு ஊடகங்கள் அவரைக் காட்டிக் கொடுப்பவராக அடையாளப்படுத்தியதன் நிமித்தமாக, அவர் நாட்டிற்கு வெளியே வாழ மீண்டும் கட்டாயப்படுத்தப்பட்டார்.

சுனிலா தனக்குச் சொந்தமான விசேடித்த வழியில் உலகிற்கு எடுத்துக்கூறியதுடன், அதன் பிரகாரம் இதனை மாற்றவும் முயற்சியெடுத்தார். அவர் இதனை செய்தது தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியும். ஆனால் சந்தேகமற்ற முறையில் தான் விரும்பிய, தான் ஆதரித்து வாதாடிய, மற்றும் செயற்படுத்திய, நோக்கங்கள், கொள்கைகளுக்காக தனிப்பட்ட மற்றும் சனசமூக மட்டத்தில் உறுதியுடன் தன்னை அர்ப்பணித்திருந்தார். இதனால் தான் அவரை எமது காலத்தின் மிகவும் நேர்மையான உண்மையான அரசியல் செயற்பாட்டாளர்களில் ஒருவர் என நான் நம்புகின்றேன்.

பல்வகைத் தன்மையின் ஒரு புரிந்துணர்வும், முடியுமானவரைக்கும் அனைத்தையும் உள்ளடக்கிக்கொள்வதும் மிகவும் முக்கியமானது என அழுத்தியுரைத்தார். அவர் தனது முடிவை சுருக்கமாகப் பின்வருமாறு கூறினார். "ஒன்றாக ஒரே நேரத்தில் நாம் எமது சொந்த அடையாளத்தை உரிமை கோருகிறோம். இருந்தும் இதனை நாம் ஏனைய அடையாளத்துவங்கள் மற்றும் அவற்றின் ஏனைய தாக்கங்களின் எமது அங்கீகாரத்தை விலக்காத வகையில் அதை நாம் செய்ய வேண்டும்." இதன் ஒளியில் நாம் எல்லா வேறுபாடுகளுக்கிடையிலும் எவ்வாறு ஒன்றாகப் பணியாற்ற முடியும் வேறுபாடுகளை மதிக்கும் ஒரு சூழலில் அனைத்தும் உள்ளடங்கியதில், நாம் எவ்வாறு மகிழ்வு காண முடியும் வேறுபாடுகளுக்கிடையில் ஒரு கூட்டமைப்பைக் கட்ட உதவும். ஒருவிதமான ஐக்கியத்தை எவ்வாறு நாம் உருவாக்க முடியும் என எம்மைத் தேடி ஆராயுமாறு அவர் விரும்பினார். இவ்வாறு அவர் சிந்தித்தது சர்வதேச ஐக்கியத்தைப் பற்றியதாக இருந்ததுடன், ஒருவர் மற்றொருவருடன் பங்காண்மையாகவும், ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதையும் பற்றியதாகும். ஆகவே ஊடுகடந்த அரசியல் எண்ணமானது, எமது சொந்த இடத்தில் நாம் யாராக இருக்கிறோம் என்பதை அனுமதிப்பதுடன், ஏனைய இடங்களில் பல சூழமைவுகளில் வாழும் ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கிய மாற்றத்திற்கான ஒரு பெரிய கணத்தின் ஒரு பகுதியாக நாம் இருப்பதையும் உணர்ந்துகொள்ளவும், கொள்கை விடயங்களில் நாம் ஒன்றாக நிற்கவும் வேண்டும் என அவர் கூறினார்.

சுதந்திரம் நீதிக்கான காரணங்களில் நாம் இன்னும் நம்பிக்கையுடையோராக இருப்போமானால், நாம் இன்னமும் அவரது அரசியல் வாழ்வை நினைவுகூர்வதுடன், எமது தீர்மானங்களானவை அரசியல் அராஜகத்தை எதிர்த்து நிற்பதுடன், மனித மகத்துவம் மற்றும் சமத்துவமான நடத்தை விழுமியங்களுக்கு மதிப்பளிப்பது, எதிர்காலத் தலைமுறையில் சமூக நீதியை ஏற்படுத்துவதற்காக அசையாத அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். ■

**லயனல் போபகே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1992 இல் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற இடம்பெயர்ந்த பெண்களின் கலாசார நிகழ்வின்பொழுது சுனிலா

# சுனிலாவை நினைவுகூர்தல்

இது சுனிலாவை நினைவுகூர்வதற்கான ஒரு கூட்டுமுயற்சியாகும். இக்கட்டுரையானது, 1991 இலிருந்து சூரியா மற்றும் பூரணி நிலையத்தின் பாகமாக இருந்த பெண்களிடையே இடம்பெற்ற முறைசாராக் கலந்துரையாடல்களின் ஒரு தொகுப்பாகும். நாம் அவரைப் பற்றியும், மனித உரிமைகள் வேலை, அமைதி சமாதான வேலை, பெண்கள் உரிமைகள் வேலை என்பவற்றுக்கான அவரது ஆதரவு, பெண் செயற்பாட்டாளர்களின் இயலுமையைக் கட்டியெழுப்புதல் உள்ளூர்ப் பெண்கள் குழுக்களுக்கான நிதி திரட்டல், அவளுடைய அன்பு, பலம் என்பன குறித்துப் பேசினோம்.

**சுனிலா தனது கொள்கைக்காக வாழ்ந்தார். அவரது வாழ்க்கை ஜனநாயகத்தின் அவரது விழுமியங்களை பிரதிபலித்தது. அவரது வாழ்வு தான் அவரது செய்தி.**

## பூரணி பெண்களுடனான சுனிலாவின் ஈடுபாடு ...

1980 களின் ஆரம்பத்தில் சுனிலா யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அவர் அவளது தந்தை சாள்ஸ் அபயசேகரவுடனும் இனங்களுக்கிடையிலான அமைதியும் சமத்துவத்திற்குமான இயகத்துடனும் வருவது உண்டு. ராஜினி திராணகமவின் மரண வீட்டிற்கும் சுனிலா வந்திருந்தார். பின்னர் 1989 இல் அவரது மகன் சஞ்சயாவுடன் வந்தார்.

அந்த நேரத்தில் பூரணி நிலையத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பெண்கள் சுனிலாவை அறிந்து கொண்டனர். பூரணியானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒரு பாதுகாப்பான இடமாகவும், பயிற்சி நிலையமாகவும் இருந்தது. 1991 இல் பூரணி எல்.ரி.ரி.ஈ ஆல் பொறுப்பெடுக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈ பெண்கள் தமது வேலைகளுக்கு பூரணியின் நிதியைக் கொடுக்கும்படி அழுத்தம் கொடுத்தனர். பூரணிப் பெண்கள் அதன் நிதியை வழங்குனருக்குத் திருப்பிக் கொடுக்கத் தீர்மானித்ததுடன், நிலையத்தையும் மூடிவிட்டுக் கொழும்புக்குச் சென்றனர்.

சூரியாவின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இந்த வருடம் கனடாவில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில் பேசும்பொழுது இவ்வாறு குறிப்பிட்டார். "1990களின் பொழுது யாழ்ப்பாணத்தில் நிலவிய பாதுகாப்பற்ற நிலைமைகளின் நிமித்தம் அங்கிருந்து நான் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டேன். கொழும்பிலே பொலிசாரிடம் பதிவு செய்துகொள்வது சிரமமாக இருந்தது. சுனிலா என்னோடு பொலிசாரிடம் வந்து எனக்காக விடயங்களை சுலபமாக்கினார். இந்த நேரத்தில் பல எண்ணிக்கையான தமிழர்களும் முஸ்லிம்களும் இலங்கையின் வடக்குக் கிழக்கிலிருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்தனர். நான் 1992 இல் கைது செய்யப்பட்ட நேரத்தை நினைவுகூருகிறேன். அவர் எனது விடுவிப்பிற்கு உதவ பொலிஸ் நிலையத்திற்கு வந்தார். இவ்விதமான விடயங்கள் கொழும்பில் அடிக்கடி இடம்பெற்றன. சுனிலா எங்களுக்கு எப்பொழுதும் உதவத் தயாராக இருந்தாள்."

இந்தக் காலத்தை ஏனையோரும் நினைவு கூருகிறார்கள் - "இந்தக் காலத்தின்பொழுது இரண்டு பூரணி அமைப்பின் பெண்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினரில் சிலரும் தெகிவளை பொலிசாரால் கைது செய்யப்பட்டு 3 வாரங்களாக சிறையில் வைக்கப்பட்டு இருந்தனர். அவர்களுக்கு உணவு வழங்க ஒரு குழுவை அமைக்க நாம் முயற்சித்துக் கொண்டிருந்தோம். நாங்கள் வெளிநாட்டவர்கள், முஸ்லிம்கள் தமிழர்கள், சிங்கள ஆண்கள், பெண்களைக் கொண்ட ஒரு கலப்பான குழுவை ஒழுங்கு செய்தோம். ஆகவே இச்சம்பவம் குறித்துப் பல ஆட்களுக்கு தெரிய வந்துவிட்டது என்பதையும் இப்பெண்களின் பாதுகாப்புக் குறித்து அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்பதையும் பொலிசார் அறிந்து கொண்டனர். பெண்கள் பொலிஸ் நிலையத்தில் வல்லுறவு கொள்ளப்பட்டது குறித்து நாம் கேள்விப்பட்டிருந்ததுடன் இப்பெண்களின் பாதுகாப்புக் குறித்து நாம் கவலையடைந்திருந்தோம். அவர்களை விடுவிப்பது குறித்து சுனிலா மிகவும் துடிப்பாக இருந்ததுடன் பொலிஸ் நிலையத்திற்கு ஒழுங்காகச் சென்று வந்தார்.

வடக்குக் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து வந்த பெண் செயற்பாட்டாளர்களுக்கும், சுனிலா போன்ற கொழும்பை ஆதாரமாகக் கொண்ட செயற்பாட்டாளர்களுக்கும் இடையே பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. சூரியாவின் ஆரம்பகால ஸ்தாபக உறுப்பினர் ஒருவர் கூறுகையில் "நாம் ஒரு முச்சக்கரவண்டியை எடுத்துக்



2005 இல் மட்டக்களப்பில் சுனாமிக்குப் பிந்திய சூழமைவில் பெண்கள் உரிமை விடயங்கள் மீதான கலந்துரையாடல்கள்

கொண்டு கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த ஆட்கள் தங்கியுள்ள பல்வேறு முகாம்களுக்கு சென்றோம். நாங்கள் எதனைச் செய்ய முடியும் என்பது குறித்து நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அந்த நேரத்தில் இந்த முகாம்களுக்கு EPDP பொறுப்பாக இருந்தது. நாங்கள் அவர்களுடன் உணவு நிவாரணம் மற்றும் பெண்களுக்கான அடிப்படை சேவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கினோம். எமக்கு அலுவலகம் இருக்கவில்லை. பெண்கள் ஊடகக் கூட்டமைப்பின் பின்பக்கத்தில் ஒரு சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடத்தைப் பெற்றுக்கொண்டு வேலை செய்யத் தொடங்கினோம்."

### சுனிலாவின் அரசியல் ...

சுனிலா தனது கொள்கைக்காக வாழ்ந்தார். அவரது வாழ்க்கை ஜனநாயகத்தின் அவரது விழுமியங்களை பிரதிபலித்தது. அவரது வாழ்வு தான் அவரது செய்தி. நாட்டின் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களிடையே அவர் ஓர் வெளியாளாகப் பார்க்கப்படவில்லை. வேறுபட்ட சனசமூகங்களிடையே அவருக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அவர் வடக்கிற்கும் கிழக்கிற்கும் பயணம் செய்யக் கடினமாக இருந்த காலங்களில் எல்லாம் அவர் அடிக்கடி விஜயம் மேற்கொண்டார். பாதிக்கப்பட்டவர்களின் கதைகளைச் சேகரிப்பதற்காகத் தூரக் கிராமங்களுக்கும் அவர் பயணித்தார். மனித உரிமைகள் மீறுகைகள் என்ற அவரின் ஆவணப்படுத்தல்களுக்கு மனித பரிணாமத்தை இது கொடுத்தது. அவர் இன முரண்பாட்டின் காரணமே ஒரு இனக்குழுவிற்கான சமஉரிமையையும் மகத்துவத்தையும் மறுத்தமை என்ற நோக்கைப் பேணிவந்தார். எல்லாப் பிரஜைகளினதும் உரிமைகள் மதிக்கப்படும் ஜனநாயகப் பழக்கங்கள் நிலைநிறுத்தப்படும் ஒரு நாடாக இலங்கை இருக்க வேண்டுமென அவர் கனவு கண்டார். ஓர் ஜனநாயகப் பார்வை நோக்கில் இருந்து இனப்பிரச்சினையை நோக்கினார். அவர் பெரும்பான்மை, சிறுபான்மை எண்ணக்கருவை ஏற்றுக்கொள்ளவில்லை. சுனிலாவைப் பொறுத்த மட்டில் எல்லாத் தனிநபர்களும் சுதந்திரமும் உரிமையையும் கொண்டிருக்க வேண்டும் என விரும்பினார். சுனிலாவின் அரசியலில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் அரசால் உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை எடுத்துக்காட்டினார். தமிழ் ஆயுதக் குழுக்கள், எல்.ரி.ரி.ஈ உட்பட்டவற்றின் வன்முறைகளுக்கு கண்டனம் தெரிவித்தார். தமிழர்களின் உரிமைகளுக்கான அவரது தடுமாறாத நிலைப்பாட்டிற்காக சுனிலா விலைகொடுக்க வேண்டி ஏற்பட்டது.

நாட்டினைக் காட்டிக் கொடுப்பவராக சுனிலா முத்திரை குத்தப்பட்டதுடன் அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. இனப்பிரச்சினைக்கு தீர்வு குறித்து சுனிலா எப்பொழுதும் பேசினார். வன்முறையையும் இராணுவவாதத்தையும் கண்டித்தார். சமாதானத்தைக் கட்டியெழுப்புதலுக்கான ஓர் பெண்ணிலைப் நோக்கை அவர் கொண்டு வந்தார்.

### பயணங்கள் – அவரின் மனித உரிமையின் வேலையின் சில பார்வைகள் ...

1987 முதல் கிழக்கிலே காணாமற்போனவர்கள் குறித்து சுனிலா ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார். அவர் வெறுமனே நகரங்களுக்கு மாத்திரம் வரவில்லை. கிழக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புறப்பகுதியில் உள்ள சில கிராமங்களுக்கும் விஜயங்களை மேற்கொண்டார். 2008 இல் பல மாதங்களாக இடம்பெயர்ந்து இருந்த மக்கள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்ட பிற்பாடு விசேடமாக தனிமையில் இருக்கும் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதாகவும், சுற்றிவளைப்பின் பொழுதும் பெண்கள் இரவில் வீட்டுக்கு வீடான பரிசோதிப்பின் போதும் துன்புறுத்தப்படுவதாக கதைகள் பரவின. சுனிலா அந்த நேரங்களில் விஜயங்களை மேற்கொண்டார். அவர் முன்னணிக் குரலாக நின்று சவால்களை

சூரியாவிலிருந்து பெண்கள் முதற் தடவையாக சர்வதேச கூட்டங்களுக்கு செல்லும்பொழுது அவர்களில் கவனம் செலுத்தினார். அவர்களுடைய சமர்ப்பணத்தைக் கலந்துரையாடியதுடன், எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும், எழுப்ப வேண்டிய விடயங்கள் என்ன? என வழிகாட்டுதல் வழங்குவார்.



மட்டக்களப்பில் சுனிலாவின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர் விருதைக் கொண்டாடுதல் - 2008

எதிர்கொண்டு மட்டக்களப்பின் உட்புறப் பகுதிகளிற்குச் செல்வதற்கு இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். உள்ளூர்ப் பெண் செயற்பாட்டாளர்களுக்கான பாதுகாப்பை அவர் வழங்கினார்.

மற்றுமொரு பெண் கூறுகையில் "சுனிலா சுனாமி அனர்த்தத்திற்குப் பிற்பாடு மக்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கு பிரஜைகள் குழுக்களை முன்தள்ளிவிட்ட ஒருவராக இருந்தார். சுனாமிக்குப் பிந்திய மீள் நிர்மாணத்திற்கான சரியான கவனத்தை அவரே கொண்டு வந்திருந்தார். மக்கள் நியாய மன்றங்களில் நாள் முழுவதும் இருந்து ஒருவருக்கு பின் ஒருவராக அவர்கள் சொல்ல வந்ததை முடிக்கும் வரைக்கும் கேட்டுக்கொண்டு காத்திருப்பார்."

2011 இல் மட்டக்களப்பிற்கான அவரது கடைசி விஜயம் ஒன்றின்பொழுது இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியிருந்ததும் 2006 இல் சேதமடைந்ததுமான கதிரவெளிப் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த நேரத்தில் சுனிலா நோயுற்று இருந்தார். எனினும் அவர் பயணங்களை மேற்கொண்டார்.

### எப்பொழுதும் பெண்களில் அவர் கவனம் செலுத்தினார்...

யாராவது நோயுற்று இருந்தால் அவர்களுக்கு உணவு கொண்டு வருவதுடன், அவர்களைத் தனது வீட்டில் வைத்திருப்பார். அத்துடன் தான் எழுதிய பேசிய விடயங்களை உருக்கொடுத்து வைத்திருந்தார். சுனிலா அதனில் வாழ்ந்தார். அதற்காகத் தனது நேரத்தையும் செலவழித்தார். தன்னிடம் மிகவும் பலமான தனிப்பட்ட கவனத்தையும் செலுத்தினார். சூரியாவிலிருந்து பெண்கள் முதற் தடவையாக சர்வதேச கூட்டங்களுக்கு செல்லும்பொழுது அவர்களில் கவனம் செலுத்தினார். அவர்களுடைய சமர்ப்பணத்தைக் கலந்துரையாடியதுடன், எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும், எழுப்ப வேண்டிய விடயங்கள் என்ன? என வழிகாட்டுதல் வழங்குவார். சர்வதேச நிகழ்வுகளில் பேசுவதற்கு உள்ளூர் பெண்களுக்கு எப்பொழுதும் நம்பிக்கை கொடுத்தார். பெண்களை கடைகளுக்கும் இரவுச் சந்தைகளுக்கும், காட்சி பார்ப்பதற்கும் புதிய உணவுகளை ருசிப்பதற்கும் கூட்டிச் செல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஸ் தரிப்பிடத்திலிருந்து பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்படுவதற்கான ஒருவர் அவரேதான் ...**

இலங்கை மன்றக் கல்லூரியில் ஓர் நடிப்புச் செயலாற்றுகைக்காக கொழும்புக்கு கலாசாரக் குழு சென்றிருந்தபொழுது காட்சி பார்ப்பதற்கு பெண் பிள்ளைகள் வெளியே சென்று சில புகைப்படங்களை எடுத்தனர். இது 1997 இல் இடம்பெற்றது. பொலிசார் அங்கே வந்து கலாசாரக் குழுவின் பெண் தலைவரைக் கைது செய்தனர். சுனிலா உடனடியாக பொலிசாருடன் பேச்சுவார்த்தை செய்ய நடவடிக்கை எடுத்ததோடு, அக்குழுவிலே முதற்தடவையாக நடிப்பு செயலாற்றுகைக்காக கொழும்புக்கு சென்றிருந்த ஏனைய உறுப்பினர்களை சாந்தப்படுத்தினாள்.

மற்றுமொரு பெண் செயற்பாட்டாளர் இவ்வாறு நினைவுகூருகிறார். "நான் அதிகம் பயணம் செய்ய விருப்பமில்லாதவள். 1996 இல் சூரியாவில் ஒரு சபை உறுப்பினராகச் சேர்ந்தேன். இன்துறுவவில் பெண்கள் சுகாதாரம் குறித்து ஓர் சமர்ப்பணத்தை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டேன். நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். மட்டக்களப்பில் வசித்து வருகிறேன். கொழும்புக்கு செல்வதற்கு 13 பரிசோதனைக் கடவைகளைக் கடக்க வேண்டும். கொழும்பில் என்னைக் கூட்டிச் செல்வதாகச் சுனிலா வாக்களித்திருந்தார். இரவு 10.30 மணிக்கு நான் வந்து சேர்ந்தேன். புறக்கோட்டையிலே ஒரு சிறிய தேநீர்க்கடையிலே நான் அவருக்காகக் காத்திருந்தேன். தேநீர் குடித்தேன். உண்மையில் நான் பதற்றமடைந்திருந்தேன். திடீரென பெண்கள் நிறைந்த வானில் சுனிலா வந்து சேர்ந்தார். அவர் ஏற்கனவே வேறு பல பெண்களையும் ஒன்று சேர்த்திருந்தார். அந்தக் கடையில் யாராவது பெண்கள் காத்திருக்கின்றனரா என்று வாகனத்தின் யன்னல் ஊடாக எட்டிப் பார்த்துக் கேட்டார். அவரது குரலைக் கேட்டதும் எனக்கு நம்பிக்கை வந்தது. ஆணில்லாத பெண்கள் கூட்டத்தினரோடு என்னைச் செல்ல விடுவதற்கு அக்கடையாட்கள் விரும்பவில்லை. அவர் வாகனத்திலிருந்து இறங்கிவந்து அவர்களுடன் பேசினார். இருட்டு, நடமாடும் பயம் போன்ற எனக்குள்ளான தடைகளை எவ்வாறு உடைப்பது என எனக்குக் கற்பித்தார்.

**பெண்களையும் உள்ளூர்ப் பெண்கள் நிறுவனங்களையும் வழிநடத்துதல் ...**

அவர் எப்பொழுதும் புதிய எண்ணங்களைக் கொடுப்பார். சுனிலா கடும்நோயுற்று இருந்தபொழுது கூட சூரியாவின் ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கு கருத்துக்களை அனுப்பினார் அல்லது ஸ்கைப்பின் மூலம் வர விரும்பினார். அவரால் முடிந்த அனைத்திலும் துடிப்புடன் ஈடுபட்டார். எமது கலந்துரையாடல்களுக்குள் சர்வதேச விவாதங்களையும், பெண்ணிலைவாத எண்ணங்களையும் கொண்டுவந்தார். ஆகவே சர்வதேசத்தில் நடப்பவற்றைக் கொண்டு எமது சொந்த வேலையை வழிநடாத்த முடிந்தது. சர்வதேசக் கூட்டங்களில் பெண்கள் பங்குபற்றிப் பேசுவதற்கு அவர் வழிவகுத்தார். வேறுபட்ட பார்வைநோக்குகளையும், வேறுபட்ட பின்புலங்களையும் கொண்ட ஆட்களை ஒன்றாகக் கொண்டு வரும் ஒரு வழியை எப்பொழுதும் கண்டுகொண்டார். சுனிலா சூரியாவிலும் கிழக்கிலும் தென்னாசிய பால்நிலைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஊடாகப் பல பெண்கள் தலைமுறைகளைப் பயிற்றுவித்தார். நிதி திரட்டுதல், முன்மொழிவுகளை உறுதிப்படுத்துதல், என்பவற்றின் ஊடாக உள்ளூர்ப் பெண்கள் நிறுவனங்களுக்கு அவர் ஆதரவளித்தார். உதாரணத்திற்கு மட்டக்களப்புப் பெண்கள் நெருக்கடி நிலையமானது நிதியற்றுப் போய் மூடிவிடாது இருப்பதற்காக பணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவேளையில் சுனிலா சர்வதேச நிதியங்களை ஒன்று திரட்டியதுடன் இந்நிலையமானது ஆதரவளிக்கப்படுவதற்கு சிபார்சு செய்தார். ■

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் - மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுனிலாவுடன் பெண்ணிலைவாதத்தை தேடி ஆராய்தல்

களனிப் பல்கலைக்கழகத்தில் உள்ள வித்தியாலங்கார வளாகத்திற்குள் 1970களின் நடுப்பகுதியில் ஆங்கிலத் திணைக்களத்தில் ஒரு பட்டப்படிப்பு மாணவியாக நுழைந்து, சமூக இயக்கங்கள், அரசியல் மற்றும் புதிய செயற்பாடுகளின் ஒர் வீச்சுக் குறித்து, உடனடியாகக் கலந்துரையாட விளைந்தேன். அருட்தந்தை திஸ்ஸ பாலசூரியாவின் பொறுப்பில் இருந்த, சமூகத்திற்கும் மதத்திற்குமான நிலையத்தில், CSR ஒழுங்கான சந்திப்புக்களில் பங்குபற்றும் நண்பர்களின் சிறு குழாமில் அவர் இணைந்தபொழுது, சுனிலா எனது வாழ்வினுள் புகுந்தார். CSR ஆனது அந்நேரத்தில் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் அரசியல் கலந்துரையாடல் இடமாக இருந்தது. கடினமான இசைத்துறையில் தனது சொந்த விருப்பின்பேரில் பிரபலமாக இருந்தவரான பிரசன்னாவின் சகோதரி என்று மாத்திரமே முன்பு நான் கேள்விப்பட்டிருந்தேன். அப்போதே கட்டுப்படுத்த முடியாத சராசரியைத் தாண்டிய, தீரம் மிக்க, துணிவான, முன்னோக்கிச் செல்பவராக சுனிலா இருந்தார். அவரைச் சந்தித்ததும் அவரால் கவரப்பட்டு எந்தவித தயக்கமும் இன்றி அவருடன் இணைந்துகொண்டேன். மூன்று தசாப்தங்களும் அதற்கு மேலான சுழற்சியில் சென்ற உறவின் ஆரம்பமாக இருந்தது.

1970களாகிய காலப்பகுதியில் இலங்கையில் பல அரசியற் கலந்துரையாடல்களிற் பெரிதுபடுத்திக் காட்டப்பட்ட ஒரு தலைப்பாக பெண்ணிலைவாதம் இருக்கவில்லை. இடதுசாரிகளின் அரசியல் கலந்துரையாடல்களாவன வகுப்பு அரசியல்வாதம், பட்டாளிகள் வகுப்புப் போரட்டம், தேசியவாதம் போன்றனவற்றை புரிந்துகொள்வதிலும், பகுப்பாய்வு செய்வதிலும், விவாதிப்பதிலும் கவனம் செலுத்தியது. பாலியல் உறவுகள், அரசியல் மாற்றத்திற்கான ஒழுங்கமைப்பின் கவனத்திற்கு வெளியே அநேகமாக பரிசீலிக்கப்பட்டன. எங்களது சிறிய குழுவும் ஆசிய உற்பத்தி முறைகளின் மாக்சின் பழைய எண்ணகரு, சுயநிர்ணயத்திற்கான உரிமை, சாமானியர்கள் இயக்கம், திரைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இலங்கை அரங்கியல் போன்ற பல விடயங்களையும் பல மணித்தியாலங்களாக கலந்துரையாடுவதில் செலவிட்டது. ஆனால் என்னைப் பொறுத்தளவில் கிழக்காசிய, புதிதாய் கைத்தொழில் மயமாகும் நாடுகள் மீதான எமது கவனத்துடனேயே, பெண்ணிலை வாதத்திற்குள் நுழையும் இடம் வந்து சேர்ந்தது. ஆடை உற்பத்தி தொழில் முயற்சிகளில் ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் வேலைக்கமர்த்தப்பட்ட தென்கொரியா, கொங்கொங், தாய்வான் சுதந்திர வர்த்தக வலையங்கள் அமைக்கப்பட்டதிலிருந்து, இந்த நாடுகளில் குறிப்பாக எமது விருப்புக்கள் ஏற்பட்டன. 1977 இற்குப் பின்பு இத்தொழிற்சாலைகள் புதிதாகப் பிரகடனம் செய்யப்பட்ட கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் முதற்தடவையாக அமைக்கப்பட்டதுடன், இவ்வாடைத் தொழிற்சாலைகளில் எமது பெண்களும் முதலில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவைகள் பரபரப்பான காலங்களாக இருக்கவே, இலங்கையில் பெண்கள் இயக்கமானது ஒன்று சேர்ந்தது. சுனிலா நாடுபூராகவும் விரவி இருந்த சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதில், பெண்ணியல் கருத்துக்களை எமது வாழ்வுக்குள் சுனிலா கொண்டு வந்தார்.

பெண்கள் உரிமைகளுக்கான குமாரி ஜயவர்தனவின் பணிகள் மீது கவர)ப்பட்டு, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளில், தனது அனுபவங்கள் மற்றும் வேலையில், அவர் பின்னிப் பிணைந்திருந்தார். தோட்டத்துறையில் பெண் தொழிலாளர்களுக்கான சம கொடுப்பனவு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர்கள் என்ற வகையில் தமது உரிமைகளுக்காக கேள்வி எழுப்பும் ஒரு சக்தியாக ஒழுங்குபடுத்தப்பட்டனர். இந்த முயற்சிகளில் நண்பி குமுதினி சாமுவேல் பெரும்பங்கு வகித்தார். என்னைப் பொறுத்தளவில், ஊதியப் பணியாளர்களாக பெண்களின் இந்த இரண்டாம் அலை ஏன் முக்கியமானது என்பது மீதான குடும்பம் மற்றும் அரசியல் அரங்கிற்குள்ளும் பொருளாதாரத்திற்குள்ளும் சூழமைக்கப்பட்ட

**பெண்கள் உரிமைகளுக்கான குமாரி ஜயவர்தனவின் பணிகள் மீது கவரப்பட்டு, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளில், தனது அனுபவங்கள் மற்றும் வேலையில், அவர் பின்னிப் பிணைந்திருந்தார்.**

பெண்களின் நிலைப்படுத்தலில் இக்கட்டான நிலை என்பதும் சுனிலாவுடைய கலந்துரையாடல்களாக இருந்தன. பெண்களின் வாழ்வை நாம் பார்க்கும்பொழுது தொழிற்சந்தையிலோ, அல்லது தமது வீடுகளிலோ, பெண்கள் வேலை செய்வதிலிருந்து, "இரட்டைநாள்" என்பது என்ன என நான் புரிந்துகொண்டேன். ஆனால் வீட்டுவேலை என்பது இன்னும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாதாரத்திற்கு வெளியே உள்ளது. இரட்டை தினம் மீதான பெண்கள் ஊடகக் கூட்டமைப்பின் முதலாவது காட்சிவில்லை படக் காட்சியை செய்யும் சுனிலா சிறியானி பெரேராவை அவர் ஊக்கப்படுத்தினார். பாலியலின் ஆணாதிக்கத்தின் எண்ணக்கருவை தேடி ஆராயவும் புரிந்துகொள்ளவும் நாம் தொடங்கினோம். எமது பயணத்தில் நிச்சயமாக நாம் தனியே இருக்கவில்லை. தனித்து விடப்படவில்லை என நான் உணர்ந்தேன். பெண்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதில் முக்கிய விடயங்களில் பெண்ணிலைவாதத்தைத் தேடி ஆராய்தல், கோட்பாட்டு மயமாக்கல், பகிர்தல், விருத்தி செய்தல் என்னும் இப்பயணத்தில் இந்தியாவைச் சேர்ந்த கம்லா பாசின், பாக்கிஸ்தானைச் சேர்ந்த நிகத் செய்த் கான், அமெரிக்காவைச் சேர்ந்த சாலட் பன்ச், ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த ஹேட் ஜங் என்போர் இப்பயணத்தில் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகைப்படம் : சேபாலி கோட்டேகொட

சுனிலா தனது மகன் சஞ்சயா மற்றும் மகள் சுபாவுடன்

கடந்த 37 வருடங்களைத் திரும்பிப் பார்க்கும்பொழுது, அவர் எனது வாழ்வின் முக்கியமான இக்கட்டான திருப்பு முனைகளில், எனது வாழ்வில் எவ்வளவு பிரசன்னமாகி இருக்கிறார் என்பதை உணர்கிறேன். பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு 1984 இல் உருவாக்கப்பட்டதிலிருந்து, நாட்டிலும், தென்னாசியாவிலும், உலகளாவிய ரீதியிலும் பெண்கள் இயக்கத்திற்குள் நாம் இடம்பிடிக்கக் கூடியதாக இருந்ததுடன், பால்நிலை சமத்துவம், பெண்கள் உரிமைகள், பெண்ணியவாத கலந்துரையாடல்களுக்கான எமது இடையீடுகளில் மிகவும் கட்டமைக்கப்பட்ட செயன்முறைகளை விருத்தி செய்ய நாம் ஆரம்பித்தோம்.

எனது B.A இற் கான ஆய்வுக்கட்டுரையை தட்டச்சு செய்வதற்கு, சஞ்சயா வயிற்றில் இருக்கும் நிலையில் எனது வீட்டிற்கு அவர் வந்ததை நான் எண்ணிப் பார்க்கின்றேன். IDS, Sussex பல்கலைக் கழகத்தில் D.Phil இற்காக, படித்துக் கொண்டு இருக்கும்பொழுது அங்கே எனது படிப்புக் குறித்து நான் பாரதூரமாக எடுக்காதபோது "இலங்கையில் செய்வதற்கு வேலைகள் உள்ளன" என எனக்கு கடுமையான தொனியில் காரசாரமான கடிதத்தை எழுதியனுப்பினார். நான் கடிதத்தால் மிகவும் குழப்படைந்தேன். ஆனால் அவர் என்ன செய்தார் என்று அவர் அறிந்திருந்தார் என நான் இப்போது உணருகிறேன். எனது வேலையை, நான் செய்ய வேண்டியவைகளை செய்து விட்டு, கல்வியை முடித்து விட்டு நான் விரைவாக வீடு திரும்பினேன். சுபாவின் 4வது பிறந்த நாளின் பொழுது சுபா ஒரு சிவப்பு ரைடிங் கூட்(ridinghood) கேக்கும், உடையும் விரும்புவதாக சுனிலா கூறியது எனக்கு நினைவிருக்கிறது. இதை எவ்வாறு செய்வது என்று குமியும் நானும் எங்களது மூளையை குழப்பிக் கொண்டோம். நான் ஒரு வகையான சிவப்பு ரைடிங் கூட் கேக்கை செய்தேன். குமி ஒரு சிவப்பு ரைடிங் கூட் உடையையும் கொண்டு வந்தாள். சுபாவின் கனவு நிறைவேற்றப்பட்டது. சுனிலா ஜே.வி.பி மேடைகளில் "விமுக்தி கீ" பாடி முடித்து விட்டு, எம்முடன் சேருவரை எஸ். டீ. ஜயசிங்க மண்டபத்திலும் இன்னும் வேறு இடங்களிலும் எமது நண்பர்கள் குழாத்துடன் காத்திருந்தார். பின்பு நாம் அரசியல், திரைப்படங்கள், புத்தகங்கள் குறித்துப் பேசிக்கொண்டு தேநீர் அருந்துவதற்கு கீறின்லான்ட் கபேயிற்கோ அல்லது சிறிய இடங்களை நோக்கியோ செல்வோம்.

நாம் முதலில் சந்தித்த பொழுது எங்களில் பலர் ஓர் உறவிலே இருக்கவில்லை. எங்களில் பலர் சொந்தப் பிள்ளைகளைக் கொண்டிருக்கவில்லை. தனித்த பெண்களாகவே பெண்ணிலைவாத செயற்பாடுகளுக்குச் சென்றோம். எமது சொந்த உறவுமுறைகள் குறித்து நாம் தேட புறப்பட்டபொழுது, எங்களில் சிலர் எமது சகோதரிகளின் பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொண்டனர் அல்லது பராமரித்தனர். சிலர் தமது சொந்தப் பிள்ளைகளைக் கொண்டிருக்கத் தீர்மானித்தனர். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சொந்தப் பாலியலைத் தேடினோம். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் சமூகம், பெண்களைப் பெண்கள் என்றவகையில் நிலைநிறுத்தும் கருத்தியல் நிலைப்பாடுகள், நாம் தனித்திருப்பதா, அல்லது இதில் எதிர்பால் உறவுகொள்வதா, அல்லது ஒத்தபாலுறவு கொள்வதா, ஊதியம் செலுத்தும் பொருளாதாரத்தில் இருப்பதா, அல்லது அவ்வாறு செலுத்தாத வீட்டு வேலையில் இருப்பதா, நாம் தனித்த தாய்மார்களாக இருப்பதா என்னும் சவால்களை எதிர்கொண்டதுடன், அவற்றுக்கூடாக நாம் வாழ்ந்தோம். என்னைப் பொறுத்தளவில் சுனிலா எப்பொழுதும் என்னுடன் இருந்ததுடன், அவர் எப்பொழுதும் செய்வதையே செய்து, என்னை அரவணைத்து, எதிர்த்து வருகின்ற ஒவ்வொரு சவாலினையும் எதிர்கொள்ளும் பலத்தையும் ஊக்கத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**சுபாவுடைய ப்ளொக்கிலிருந்து: 10 மார்கழி 2013.**

எதுவும் உலகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில்லை என அவர் சொல்வார். நான் உலக முடிவைத் தவிர என அவருக்குச் சொல்வேன். அவர் எப்பொழுதும் பார்வை நோக்குப் பற்றியவராக இருந்தார். இதன் அர்த்தம் அவர் உணர்வுகளைக் கைவிட்டு விட்டு இருப்பதற்கு தூண்டியவர் என்று அர்த்தம் அல்ல. அவர் தானும் அவ்வாறே செய்துகொண்டு பதிலுக்கு நானும் அவ்வாறு செய்வதற்கு, உணர்ந்துகொள்வதற்கு, எல்லா உணர்வுகளையும் எல்லாக் கட்டமைப்புக்களையும் உணர்வதற்கு நானும் கற்றுக்கொண்டேன். கடினமாக கேள்விகளைக் கேட்பார். கடினமான பதில்களைப் பரிசோதிப்பார். ஆனால் அவளது வாழ்வில் உண்மையில் முக்கியமானது என உணரும் விடயங்களில், நாளின் இறுதியில் அவர் நிலைத்திருக்கிறார். நோயிலும் இறப்பிலும் அதன் எல்லா விபரங்களும் எல்லாக் கூறுகளும் அவர் எனக்கு காட்டிய எல்லாப் பார்வை நோக்குகளும் அவ்வாறே இருந்தன.

எங்களுடைய சொந்தவாழ்வு பற்றிய எதையும் எங்களால் மாற்ற முடியும் என்பதை அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டேன். எதற்கும் எங்களைப் பழக்கமாக்கிக் கொண்டு வளர முடியும். வாழ்வு கடினமாக இருக்க முடியாது என நான் சிறுவயதிலேயே கற்றுக்கொண்டேன். ஆனால் அவ்வாறு செய்வதினை இலகுவாகத் தெரிவு செய்துகொள்வதின் ஊடாக எங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியுமென்றும் கற்றுக்கொண்டேன். அதை நான் எனது தாயாரிடமிருந்து கற்றுக்கொண்டேன். சந்தோசமாக இருப்பதற்கு உண்மையில் திருப்தியாக இருப்பதற்கு எங்களுக்குள்ளும், உங்களது வாழ்வு குறித்தும், எங்களது தேர்வுகள் குறித்தும் சந்தோசமாக இருக்கும் இயலுமையை நான் அவரிடம் கண்டேன். இதுபோன்று வேறு யாரும் செய்வதை நான் காணவில்லை. சிறிய விடயங்கள் கூட இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கக்கூடும் என நான் உணர்ந்தேன். தெரிவு செய்யும் சந்தோசத்தில் கூட எவ்வளவு மகத்துவம் இருக்கக்கூடும் எனப் புரிந்து கொண்டேன். மிகவும் முக்கியமாக, நான் அவரிடமிருந்து தாக்கப்படக்கூடியவைகள், மனம் தளரக் கூடியவைகள், சிலவேளைகளில் மனம் தளர்தல் ஆனால் பலவீனமானவைகள், இல்லாதிருப்பவை, குறித்துக் கற்றுக்கொண்டேன். உங்களுக்கு சுற்றியிருப்பவர்களும் உங்களது தேர்வுகளே. நீங்கள் நல்லமுறையில் தெரிவு செய்தால் மகிழ்ச்சியிலோ கவலையிலோ தனியாக இருப்பதற்கு காரணம் இல்லை என்பதையும் கூட நான் கற்றுக்கொண்டேன்.

இன்று அவரது நிச்சயமின்மையை நான் சிந்திக்கின்றேன். இன்று அவருடையதும் அதிலிருந்து என்னுடையதுமான நிச்சயமின்மையை நான் உணர்ந்து கொள்கிறேன். ஏனையோரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய பலங்கள், ஏனையோரிடம் சார்ந்திருக்க வேண்டியவைகள், முழுமையாக அன்பு செய்யவும் கருணையை வேண்டிநிற்கவும் நாம் பகிர வேண்டிய தகைமைகள் உள்ளன. அவர் எப்படி இருந்தாரோ அவ்வாறானவரை உருவாக்கிய எல்லோரையும் நான் நினைவுகூர்கிறேன். அத்துடன் நானும் இவ்வாறாக இருப்பதற்கு என்னை உருவாக்கியவர்களையும் எண்ணிப் பார்க்கின்றேன். ■

**செபாலி கோட்டேகொட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்வப்பிரியாவின் 17 வருடங்கள்:

## சிங்கள சினிமா மீதான சுனிலாவின் பெண்ணிய திரைப்பட விமர்சனம்

பதினேழு வருடங்களாக சுனிலா அபேசேகர மனித உரிமைகள் பணியாளர் என்ற பொது விம்பத்துடன், அவரது பரந்தளவில் தொடர்புபடாததும், ஆனால் அவருக்கு மிகவும் மகிழ்ச்சியளித்ததுமான, ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார். ஒருவருடத்தில் நான்கு தடவைகள், ஒருவருடத்தில் மூன்று தடவைகள், மற்றும் இறுதியாக ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் என, விஷ்வப்பிரியா எனப் பெயரிடப்பட்ட ஒரு திரைப்பட விமர்சகரின் பெயரில், அந்த நேரத்தில் திரையிடப்படும் திரைப்படங்களில், தான் தெரிவு செய்த சிங்களப் படத்தினை அயவில் பிரசுரத்திற்காக, ஒரு பெண்ணியல்வாதியின் மதிப்பீடாக எழுதி வந்தார். அயவின் ஆரம்பத்தில் இருந்தே (1995 இல்) இந்த விஷ்வப்பிரியாவின் திரைப்பட விமர்சனப் பத்தி ஆரம்பித்ததுடன் 2011 வரை நிறுத்தமின்றி தொடர்ந்து பேணப்பட்டது. இலங்கைத் திரைப்பட விமர்சன வரலாற்றில் சிங்களத் திரைப்படம் மீதான மிக நீண்ட பெண்ணிலைவாத திரைப்படப் பத்தியாக தொடர்ந்ததில் இதுவே நீண்டதாகும்.

பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு 2013 மார்கழியில் அவரது பார்வைகளின் ஓர் சேகரிக்கப்பட்ட பதிப்பை பிரசுரம் செய்ததைத் தொடர்ந்து, சுனிலாவின் பார்வை நோக்குகளாவன அயவின் வாசகர்களை விட ஒரு பரந்துபட்ட பார்வையாளர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும். இவ்வெளியீடுகளால் உந்தப்பட்டு இவ்வேலையின் பரந்துபட்ட கலாசார முக்கியத்துவமானது எதிர்காலத்தில் புலமைசார் விவாதத்திற்கு உட்படுத்தப்படும். விஷ்வப்பிரியாவின் குரலில் அரசியல் மற்றும்



சுனிலா அபேசேகரவால் எழுதப்பட்ட 'பெண் பெண்ணின் உடல் சினிமா' - பெண்ணிலைவாத விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஓர் பார்வை எனும் நூல்.

பகுப்பாய்வு குறித்து நிறைய எழுதலாம் என நாம் எதிர்பார்க்கும் அதேவேளையில் பிரசுரிக்கப்பட்ட ஒவ்வொரு விமர்சனத்தின் பின்னாலும் சுனிலாவுடனும் அயவின் ஆசிரியர்களுடனும் சம்பந்தப்பட்டு ஈடுபட்ட ஒரு வரலாறு உள்ளது என்பதை நாம் மறக்க முடியாது. இக்கட்டுரையானது அயவுக்காக 17 வருடங்கள் திரைப்பட விமர்சனங்களை எழுதிய சுனிலா குறித்து, அயவை நிறுவிய ஆசிரியர்களாகிய சுமிகா பெரேரா மற்றும் அனோமா ராஜகருணா என்போரின் அலாதியான தனிப்பட்ட நினைவுகூரல்களிலிருந்து பெறப்பட்டதும் சிறிது அறியப்பட்டதும், எழுந்தமாறான சுவாரசியமான உள்ளடக்கங்களைக் கொண்டது இக்கட்டுரை ஆகும்.

சுனிலாவை ஒரு திரைப்பட விமர்சகராக எவ்வாறு கூறமுடியும் என்பது ஒரு சிக்கலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியாகும். ஏனெனில் அவர் அயவிற்குத் தனது திரைப்பட விமர்சனங்களை எழுதும்பொழுது சுனிலா அபேசேகர என்று தன்னை வெளிப்படுத்த விரும்பவில்லை. ஒரு விமர்சனம் தற்செயலாக அவரது பெயரில் பிரசுரிக்கப்பட்டபொழுது அவர் கோபமடைந்தார். இருந்தும் விஷ்வப் பிரியாவின் அடையாளத்துவமானது ஒரு திறந்த இரகசியமாகும். பலருக்கு இது சுனிலாதான் எனத் தெரியும். இது அவரும் அறிந்திருந்த உண்மைதான். ஆனால் அப்புனைபெயரைவிட அவர் விரும்பவில்லை.

ஒரு கோட்பாட்டின் பிரகாரம் அவர் ஒரு கடும்போக்கான பெண்ணிலைவாதி என்ற மிகப் பொதுவான அடையாளத்துவத்தின் ஒளியில் இவைகள் வாசிக்கப்படும் பட்சத்தில் அவரது பெண்ணிலைவாத ரீதியான விமர்சனங்கள், தப்பெண்ணத்துடன் வாசிக்கப்படும் என்ற உணர்வின் நிமித்தமாகவே அவர் இது தொடர்பாக உறுதியாக இருந்தார். எவ்வாறு தான் வேறுபட்ட ஆட்களுக்குச் செல்லப்படினும் அயவின் வாசகர்கள் தாம் சுனிலா அபேசேகரவின் திரைப்பட விமர்சனத்தை வாசிக்கின்றோம் என்று திசைமுகப்படுத்தப்படுவதை அவர் விரும்பவில்லை.

விஷ்வப்பிரியா என்ற பெயரானது அதனது உலகளாவிய மற்றும் அன்புப் பிணைப்புடன் நாட்டுக்கு வரையறுக்கப்படாத, உண்மையில் உலகிற்கு விஸ்தரிக்கப்பட்ட சினிமா மற்றும் ஏனைய விருப்புக்களை, சிங்கள சினிமா குறித்து எழுதும் ஒருவராகிய திரைப்பட விமர்சகர் ஒருவர் என்ற வகையில் எதிர்கொள்வதற்கு, அவர் விரும்பிய திசைகளை இது பிரதிபலித்தது. ஆக்கவாதி என்ற வகையில் அவரது வெளியீடுகளில் சுனிலா சிங்கள சினிமாவை முற்று முழுதாக விமர்சிக்கவில்லை. அவர் எந்தத் திரைப்படத்தை விமர்சிப்பேன் என்று தெரிவு செய்யும் உரிமையை கொண்டிருந்தார் என்பதுடன் அது திரையிடப்பட்ட எல்லாப் படம் குறித்தும் எழுதுவதாக அது அர்த்தப்படவில்லை. அநேகமாக தனக்கு சுவாரசியமான படங்கள் மீதும், குறித்த ஒரு அரசியல் கணத்தை பிரதிபலித்த படங்கள் மீதும், அதேவேளையில் அயவின் அந்தந்த வெளியீடுகளின் கருப்பொருளுடன் அவரது படத் தெரிவு தொடர்புபட்டுப்போவதாக, ஆசிரியர் தலையங்களின் தேவைப்பாடுகளுக்கும் ஏற்றவிதமாக அநேகமாக அவர் எழுதுவார். படத்தின் தெரிவும், விமர்சனத்தின் ஆய்வுப்பொருளும், சுனிலாவுக்கும் ஆசிரியர் சபைக்கும் இடையில் கலந்துரையாடப்படும். ஆனால் ஒரு இடத்தில் அயவில் இடம்பெறச் செய்வதற்காக ஒரு படம் குறித்து ஆசிரியர் பீடக் கலந்துரையாடல் இடம்பெற்ற பின்னும் அப்படத்தைப் பார்த்த பிற்பாடு கூட அவர் அதைப் பற்றி எழுதுவதற்குத் தூண்டப்படவில்லை.

உண்மையில் இது தெரிவுக் கவனத்தை செய்திருக்கிறது. ஆனால் இவ்விதமான திரைப்பட விமர்சகராக சுனிலா இருந்தார் என்பதையும் எவ்விதமான திரை விமர்சனத்தையும் அவர் எழுதினார் என்பதையும் அது பிரதிபலித்தது. சுனிலா அயவுக்காக விஷ்வப் பிரியாவாக இருந்தார் என்பதுடன் பல சினிமா இதழ்களுக்காகவும் எழுதினார். (உதாரணம் *Cinesith, 14 – Prakashanayata Avakashayak, Chitrapata*), ஆனால் அவருடைய விமர்சனமானது உள்ளீடு ரீதியில் ஒரு முழுநேர திரைப்பட விமர்சகராக இல்லாது ஒவ்வொரு படத்தினையும் ஆய்வு செய்யும் பொறுப்புடையவர் என்ற ரீதியில் புரிந்துணர்வுடன் அணுகப்பட வேண்டும். மனித உரிமைகள் மீதான அவரது பணிகள் அவரது பெறுமதியான நேரத்தை எடுத்துக் கொண்டன. இது திரைப்பட விமர்சனங்களுக்கு சில காலநேரங்களை வழங்கியதுடன், முக்கிய படங்கள் திரையிடப்படும் நேரங்களில் அவர் வெளிநாடுகளுக்குச் சென்றும் இருந்தார்.

பயணம் என்பது சுனிலாவின் பட விமர்சனத்தில் அடிக்கடி இடையூறு செய்த காரணியாக இருந்து. இது அவரை, படஅரங்குப் பக்கத்தில் இருந்தும், நாட்டில் அது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பிலும் விலக்கி வைத்திருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில படங்களைப் பார்க்க அவர் தவறிவிட்டார்.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் மற்றும் விவாதங்கள் மீதான அவரின் விழிப்புணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பயணமானது இடைவெளிகளை புகுத்துமாயின், எந்தக் கட்டத்திலும் பெண்கள் மீதான குறித்த ஒர் சினிமா விம்பத்தை ஏற்படுத்தும், கட்டத்திற்கு கட்டமாக புகுத்தப்படும், ஒரு குறித்த சினிமா விம்பங்கள் குறித்து விமர்சன ரீதியாக, அவரால் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும் என்பது கேட்கப்பட வேண்டும்.

அவரது விமர்சனங்களில் நேரத்தையும் சூழமைவையும் எவ்வாறு புரிந்துகொள்வது என்பது சுவராசியமான ஒர் கேள்வியாகும். சுனிலா படத் தயாரிப்பு மற்றும் திரையிடலின் பல்வேறுபட்ட விடயங்களுள் தலையிட்டு, படத்தை அவற்றை அவர் தவறவிடுவார் என்ற சந்தர்ப்பங்களில், பொதுமக்களுக்கு திரையிட முன்பதாகவே படங்களைப் பார்த்து, (அசோக்க ஹந்தகமவின் "இனி அவன்" என்ற சிங்களத் திரைப்படத்தை தொகுக்கும் தருணத்திலேயே அதனைப் பார்க்கும் முதல் நபராக இருந்திருக்கிறார்) அல்லது அவைகள் திரையிடப்பட்ட பிற்பாடு படப் பிரதிகளை DVD மூலம் அணுகியிருக்கிறார். எவர் எவ்வழியினும் அவற்றின் இயக்குனர்கள் அல்லது நண்பர்கள் ஊடாக (*Akasa Kusum* இன் ஒரு பிரதி விடயத்தில், நடைபெற்றது போன்று வெளிநாட்டில் அவருக்கு ஒரு பிரதி கொடுக்கப்பட்டது). சுனிலாவின் பல திரைப்பட விமர்சனங்களில் அதிகமானவை பயணங்களின்பொழுது விமானங்களிலும் புகையிரதங்களிலும், கூட்டங்களுக்கிடையிலும் எழுதப்பட்டன. உலகின் எப்பாகத்தில் அவர் இருந்தாலும் சிலநேரங்களில் சில தாமதங்களுடன் அவரது விமர்சனமானது விஷ்வப்பிரியாவாக கையெழுத்திடப்பட்டு "அய" ஆசிரியர்களுக்கு தொலைநகல் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் சுனிலா விமர்சனங்களை அப்பியாசப் புத்தகங்களின் பக்கங்களில் கையால் எழுதியிருந்தார். அவரது கையெழுத்துப் பெரிதாகவும் வழமையாக வாசிக்க கூடியதாகவும், சீராகக் கவனமுடையதாகவும் இருந்தது. பின்வரும் காலங்களில் யுனிக்கோட்டைப் பாவித்து கணனியில் நேரடியாக விமர்சனங்களை தட்டச்சு செய்தார். இவ்வாறு அந்தக் காலத்தில் சிலரே செய்து வந்தனர்.

எண்ணத்தால் ஊக்கப்படுத்தப்படும்பொழுது அவர் விரைவாக எழுதினார். மொழியானது அநேகமாக பிழையற்றதாகவும் குறைந்தளவு தொகுப்பே தேவைப்படுவதாகவும் இருந்தது. ஆனால், சிங்களத்தில் விடயத்தை எழுத, அவர் நன்கு பயிற்சி பெறுவதற்கு முன்பதாக, இரண்டாவது பிரதியும் தேவையாக இருந்தது. பின்னூட்டல்களுடன் தனது எழுத்தில் முன்னேறுவதற்கு ஆர்வமாக இருந்த சுனிலா, உள்ளடக்கம் மற்றும் பகுப்பாய்வில், மாற்றங்களுக்கான ஆலோசனைகளுக்கு திறந்த மனத்துடன் இருந்தார். மேலும் கலந்துரையாடல்கள் பரிசீலிப்புகளுக்கு பிற்பாடு, அவர் தனது விமர்சனங்களை மாற்றியமைத்துக் கொண்டதுடன், அந்நோக்கத்திற்காக சில சமயங்களில் திரைப்படங்களையும் மீள்பார்வை செய்தார்.

புதுவிடயங்கள் பற்றி, விசேடமாகப் பழைய தலைமுறையினைச் சேர்ந்தவர்கள் பற்றிக் கொள்வதற்கு அப்பாலானது, என மரபு ரீதியாகக் கருதப்பட்ட, எழுந்துவரும் தொழில்நுட்பங்கள் போன்றவற்றின் வகையில், அவற்றைக் கற்றுக்கொள்வதற்கான ஆர்வத்தினையும் திறமையினையும் மிகவும் சிறப்பாக சுனிலா ஏற்படுத்தியிருந்தார். உதாரணத்திற்கு எண்ம முறை டிஜிற்றல் திரைப்படம் குறித்து எழுத வேண்டியிருந்தபொழுது, அவர் அதனைக் கற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்தார். சினிமாவில் அவரது ஈடுபாடு தொடர்பான இந்த வெளிப்படையான வரலாறானது, ஒரு திரைப்பட விமர்சகராக வளருவதற்கு அவர் தனக்குள் எவற்றை சேர்த்துக் கொண்டார் என்பதற்கு சாட்சியமாக விளங்குகிறது.

சினிமா என்பது சுனிலாவிற்கு ஒரு சமூக நிகழ்வாக நிச்சயமாக இருந்ததுடன், தான் விமர்சனம் செய்யும் படங்களுக்குச் செல்லும்பொழுது நண்பர்களையும் கூட வரும்படி அழைப்பார். திரைப்படம் வெளியிடப்படும் வாக்குறுதிகளின் பிரகாரம் அது சிலவேளைகளில் செயற்படாதுவிடின், சுனிலாவின் கூட்டத்தினரும், தொடர்ந்து நடக்கும் திரைப்படக் கலந்துரையாடலும் எப்பொழுதும் பெறுமதி வாய்ந்தனவாகவே இருந்தன. ■

**ஷர்மால் விஜேவர்தன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனிலா

## ஓர் பெண் செயற்பாட்டாளராக...

**சுனிலாவைப் பற்றிய உரையாடலை எவ்விடத்தில் ஆரம்பித்து எவ்விடத்தில் முடிப்பது எனச் சிந்திப்பது கடினமானதே.**



யாழ்ப்பாணத்தில் 1979 ஆம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது காணாமல் போதல் பற்றிய சம்பவம் தொடர்பாக தரவுகளைக் கோப்பிடுவதற்கு ஆரம்பித்த வேளையிலேயே எனக்கு முதன் முதலில் சுனிலாவை மார்கா (MARGA) நிறுவனத்தில் (இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்) வைத்து சந்திக்கக் கிடைத்தது. அதேவேளை நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு விதிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் ஆரம்பத்தில் நடைமுறைபடுத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கும் எதிராக பணியாற்ற ஆரம்பித்தோம். 1981 ஆம் ஆண்டளவில் சுனிலா மார்கா நிறுவனம் தொடர்பாகவும், கஹவத்தை தோட்டப்புறத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை என்பன தொடர்பாகவும் பிரசுரித்த அறிக்கைகளை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தோம். அப்போது சஞ்சயா பிறந்து சுமார் ஒரு மாதம் இருக்கும். ஆங்கில மொழியில் எழுதுகின்ற கட்டுரைகளை சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டுமென்ற பாரிய தேவை சுனிலாவிடம் அன்று தொடக்கம் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு எமது பணிகளை, குறிப்பாக, பெண்கள் / பெண்ணியல்வாதிகள் மேற்கொள்ளும் பணிகளை ஆவணப்படுத்த வேண்டுமென அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தல் செய்ய வேண்டுமென அவர் திடமாக நம்பினார். பிற்காலத்தில் இன்போம் நிறுவனத்தின் ஊடாக மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு அவர் ஆரம்பித்தமைக்கான காரணம் இதுவேயாகும்.

நாங்கள் 1980 களிலிருந்து மேற்கொண்ட வேலைகளினதும், வெளியிட்டிருந்த ஆவணங்களினதும், துண்டுப் பிரசுரங்களினதும், சுவரொட்டிகளினதும் பிரதிகளை சேகரிக்க ஆரம்பித்தோம். பிற்காலத்தில் சுனிலா தம்மிடமிருந்த, நாங்கள் நினைத்தவாறு பிரகடனப்படுத்தப்பட்டிருந்த, பெண்ணியவாதத் துண்டுப்பிரசுரத்தை தேடிக்கொண்டார். 1975 ஆம் ஆண்டு சுனிலாவும் குமாரி ஜயவர்த்தன அவர்களும் இடதுசாரி மேதினக் கூட்டங்களில் விநியோகித்த “மே தினக் கொத்து” அதுவாகும். அதிலே பெண்களின் நற்பெயர், பெண்கள் தொடர்பாக நிலவிய தவறான கருத்துக்கள், பொது வாழ்க்கையில் பெண்களின் உண்மையான வகிபங்குகள், பட்டாளிப் பெண்கள், பெண்களின் பெறுமதி என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. அந்த வகையில் சுனிலா நிதமும் தமது அரசியல் செயற்பாட்டில் பெண்ணியற் பார்வையை சங்கமிக்கச் செய்தார்.

1982 ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக வலயத்தை அண்டியதாக உருவாகிய பொலிடெக்ஸ் போராட்டத்தின் போது சுனிலாவுடன் நான் மீண்டும் அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டேன். அப்போது நான், சமன்மலி, குமுதினி, றோசா மற்றும் பிலோமினா ஆகிய சகோதரிகளுடன் இணைந்து ஏக்கலையில் அமைந்துள்ள மகளிர் நிலையத்தில் சுதந்திர வர்த்தக வலையப் பெண் தொழிலாளர்களை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தேன். (பொலிடெக்ஸ் போராட்டத்திற்கு தேசிய மட்டத்தில் ஆதரவு வழங்குவதற்காக)

சுனிலா இன்னும் சில சகோதரிகளுடன் இணைந்து மகளிர் செயற்பாட்டுக் குழுவை (WAC) அமைத்தார். பெண்ணியல்வாத போக்கினைக் கொண்ட மகளிர் அமைப்பானது WAC உடன் இணைந்து கொண்டது. பொதுப் போராட்டங்களை ஒழுங்கமைந்து மேற்கொள்ள வேண்டுமென சுனிலா திடமாக நம்பினார். அவரது மனித உரிமைகள் பற்றிய செயற்பாடுகளின் போதும் பெண்ணியல்வாத செயற்பாட்டின் போதும் அவர் நிதமும் ஒழுங்கமைந்துச் செயற்படுவதன் மீதும், ஒழுங்கமைதல் சக்தி மீதும் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். பிற்காலத்தில் எல்லைக் கிராமங்களில் உள்ளவர்கள் தொடர்பாகவும், வயலா சகோதரியை முதலாகக் கொண்ட பொலன்றுவை மாவட்டக் குழுவை தாபிப்பதற்கும், பெண்கள் ஊடகக் கூட்டமைப்பினை உருவாக்குவதற்கும் இலங்கை அன்னையர்களையும் புதல்வியர்களையும் வலுவூட்டுவதற்காகவும், மனித உரிமைகள் பற்றிய அமைப்புக்களை ஐக்கியப்படுத்தவும் தீவிரமாக உழைத்தார். சர்வதேச மட்டத்தில் Wemen's Human Rights Defenders Coaliation ஐ கட்டியெழுப்புவதற்காக அதன் சிருஷ்டி கர்த்தாவாக 2005 ஆம் ஆண்டில் அந்த நம்பிக்கையுடனேயே அவர் செயற்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனிலாவின் அடுத்த பாரிய பங்களிப்பாக அமைந்தது யாதெனில், கருத்தியல் மட்டத்தில் அவர் மேற்கொண்ட கலந்துரையாடல்களாகும். மார்கா நிறுவனத்தின் ஊடாக அவர் பெண்ணியல்வாத மாற்றங்கள் பலவற்றை குறிப்பாக பெண் செயற்பாட்டாளர்களுக்கு ஆற்றுப்படுத்தினார். மேரி (Mary Wollstonecraft) தொடக்கம் வேர்ஜீனியா வுல்ப் அவர்களின் பெண்ணியல்வாத ஆவணங்களையும், லெனின், ட்ரொஸ்கி தொடக்கம் க்லேரா செற்கின், அலெக்சென்ட்ரா கொலன்தாய் (Alexandra Kollontai) போன்றவர்கள் முன்வைத்திருந்த பெண்களுக்கான பிரச்சினைகள் பற்றிய விடயங்களையும் நூல்களில் கோப்பிட்டார். அது அப்போது பெண்கள் இயக்கத்தில் இணைந்தோருக்கான கையேடாக அமைந்திருந்தது.

**சுனிலாவின் மனிதமும், மனித நேயமும் அவரது சகல செயற்பாட்டினுள்ளேயும் எதிரொலித்தன. என்னுடையதும் அவருடன் பணியாற்றிய உங்கள் அனைவரினதும் இன்பதுன்பங்கள் தொடர்பாக பெரும் கருணையையும், அன்பையும், கவனத்தையும் செலுத்தினார்.**



80களில் சர்வதேச பெண்கள் தின ஊர்வலத்தில் கலந்துகொண்ட போது

1985 ஆம் ஆண்டு எங்கள் சிலருடன் இணைந்து பெண்ணியவாதத்தை வரைவிலக்கனம் செய்தார். "இராவய" பத்திரிகையில் வெளியாகிய இக்கலந்துரையாடல்களை அவர் சஞ்சிகையின் ஊடாக ஆண் ஆதிக்கம், பாலியல் வல்லுறவுக்குப் பதிலாக பெண்களுக்கு எதிரான வன்முறை, பால் தன்மை போன்ற எண்ணக் கருக்களை பொதுக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தினார்.

சுனிலாவின் பெண்ணியல்வாத அரசியலும், மனித உரிமைகளுக்கான பாதுகாப்பும் ஒன்றிணைந்த ஒரு முக்கியமான சந்தர்ப்பம் யாதெனில், அவர் தெற்கின் அன்னையர் முன்னணியுடன் இணைந்து 1990 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்ட பணியாகும். அப்போது எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ போன்றவர்களுடன் இணைந்து காணாமல் போதலுக்கு எதிராகச் செயற்பட்டார். காணாமல் போதலுக்கு எதிராக எவ்வாறு நுணுக்கமாகச் செயற்படலாம் என்பது தொடர்பாக அவர் பல சந்தர்ப்பங்களில் "இன்போம்" நிறுவனத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடினார். அன்னையர் முன்னணியின் ஆரம்பக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக புதிய நகர மண்டபத்திற்கு வருகை தந்திருந்த, அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட சுனிலாவின் நண்பர் ரிச்சட் டீ சொய்சாவின் தாயார் மனோராணி சரவணமுத்து, சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச போன்றோருடன் அவர் இணைந்தார்.

அன்னையர் முன்னணியின் பாத யாத்திரைகளில் பயணித்தார். அன்னைமார்களுடன் கோயில்களுக்கும் விகாரைகளுக்கும் சென்றார். காணாமல் போனவர்களைத் தேடி பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றார். சேகரித்துக் கொண்ட தரவுகளையும் அறிக்கைகளையும் ஜெனீவா நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வாசுதேவ நாணாயக்கார அவர்களும் மகிந்த ராஜபக்ஷ அவர்களும் இறுதியில் எடுத்துச் சென்றனர். உலகலாவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனோராணி சரவணமுத்து, சந்திரிக்கா குமாரதுங்கா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற அன்னையர் முன்னணி ஆரம்பக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது சுனிலா

ரீதியல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனித உரிமைகள் தராதரங்களுக்கு அமைவாக ஒரு அரசாங்கம் செயற்பட வேண்டும், பொறுப்புக் கூற வேண்டும், வகைப் பொறுப்புக்கூற வேண்டும் என அவர் திடமாக நம்பினார்.

இவை அனைத்தையும் விட சுனிலாவின் மனிதமும் மனித நேயமும் அவரது சகல செயற்பாட்டினுள்ளேயும் எதிரொலித்தன. என்னுடையதும் அவருடன் பணியாற்றிய எங்கள் அனைவரினதும் இன்பதுன்பங்கள் தொடர்பாக கருணையையும், அன்பையும், கவனத்தையும் கொண்டிருந்தார் . தூரப் பிரதேச கிராமங்களில் சந்திக்கக் கிடைத்த சகோதர சகோதரிகளின் இன்ப துன்பங்களை வினவினார். விளச்சியிலேயோ, பொலன்னறுவையிலேயோ, புத்தளத்திலேயோ, மட்டக்களப்பிலேயோ, யாழ்ப்பாணத்திலேயோ அவருக்குச் சந்திக்கக் கிடைத்த நபர்களை அவர் மறக்கவில்லை. புதிதாக இணைந்த செயற்பாட்டாளர்களைப் பொதுப் போராட்டங்களுக்காக இணைத்துக் கொண்டார். அறிமுகப்படுத்துவதற்கு நிதமும் முயற்சித்தார். நிதமும் அவர்களை உற்சாகப் படுத்தினார். பெரும் தைரியத்துடன் அவர்களது பிரச்சினைகளில் தலையிட்டார். தாம் தவறிழைத்த இடங்களில் தம்மைத் திருத்திக் கொள்ள முயற்சித்தார். அவருக்கு எதிராக செயற்பட்டவர்களோடு கலந்துரையாடுவதற்கு ஊக்கம் காட்டினார். பொது அரசியல் போராட்டத்தை முதன்மையாக்கிக் கொண்டார். பிற கருத்துக்களுக்கு இடமளித்தார். மொழிச் சுதந்திரத்தைப் பாதுகாத்தார்.

எனது உறவினர்களை தமது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கருதினார். புகையிரதத்திலும், பேரூந்திலும் ஏறிப் பயணம் செய்வதற்கு அவர் பின்நிற்கவில்லை. சாதாரண கடையில் இடியப்பம் சாப்பிட்டுத் தேனீர் குடித்தார். வீதியல் போஸ்டர் ஒட்டினார். துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தார். பால் போத்தலுக்குள் தேனீர் ஊற்றிப் பயணங்களின் போது சுபாவிற்கும் சஞ்சயாவிற்கும் ஊட்டினார். எனது மகன் சுகவீனமடையும்போது எங்களுடன் ஆஸ்பத்திரியில் இரவு பகலாகத் தங்கினார். எனது அம்மாவின் தனிமைக்குத் துணையாக அவருடன் பயணங்களில் ஈடுபட்டார். வாழ்க்கையின் இன்பத்தை அனுபவித்தார். எல்லா நேரத்திலும் புன்னகை பூத்த முகத்தோடு இன் சொற்களால் சகலரையும் விளித்தார். எம் அனைவருக்கும் அவரது நேரத்தில் ஒரு துளியையாவது ஒதுக்கினார். அதனால் மகிழ்ச்சியுற்றார். அவரது அழியாத இனிமையான குரலால் எம்மை மகிழ வைத்தார். வாழ்க்கையின் இன்பத்தை உச்சமட்டத்தில் அனுபவித்தார். எனக்கு ஒரு பாசமிகு தோழியும் சகோதரியுமானார்.

*நீ மரணிக்கவில்லை - நீ மரணிக்கவில்லை*

*நீ மரணிக்கவில்லை - வீரத் திருமகளே ....* ■

**குமுதினி சாமுவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"மகரா" நாடகம் - 1973

# சுனிலா

## ஓர் உண்மையான கலைஞரும் கலாசார ஜீவியும்

நான் எனது சிறு பராயத்தில் சிறந்த வகையிலான திரைப் படங்களைப் பார்ப்பதற்கான ஆசையுடன் இருந்தேன். அப்போது ஒரு திரைப்படத்தில் நான் எனது வயதையொத்த ஒரு பெண் பிள்ளையைக் கண்டேன். திரைப்படத்தின் பெயர் "தெலொவக் அத்தர" ஆகும். நான் கண்ட பெண்பிள்ளை சுனிலா ஆவாள். இது 1966 இல் இடம்பெற்றது. அத்தகையதொரு திரைப்படத்தில் நடிப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது எவ்வளவு அதிஸ்டம் என எனக்குத் தோன்றுகிறது. மீண்டும் "கொழு ஹதவத்த" (ஊமை உள்ளம்) பார்க்கும்போது கூட சுனிலாவை திரையில் காண முடிந்தது. அதுகூட லெஸ்டர் அவர்களின் திரைப்படமொன்றாகும். அது 1969 இல் இடம்பெற்றது. 1969 ஆம் ஆண்டு "பக்மஹ தீகே" என்ற திரைப்படத்தின் மூலம் ஒரு நடிகர் ஆனேன்.

சுனிலா அபேசேகர பாடசாலைப் பருவத்தில் எங்கள் நினைவில் நின்ற ஓர் பெண். 70 ஆம் ஆண்டுகளில் அவரது தந்தையாகிய சாள்ஸ் அபேசேகர அவர்களை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நாங்கள் அறிந்து கொண்டாலும், அவரை நாடக விமர்சகராகவும், பின்னர் நாடகத் துறைச் சபையின் தலைவராகவும் நாங்கள் அறிந்து கொண்டோம். புதிய நாடகங்களைப் பார்ப்பதற்காக நாங்கள் "லும்பினி" அரங்கிற்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும், சுனிலாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையுடன் மற்றுமோர் விமர்சகரையும் காண்போம். அவர் வேறு யாருமல்ல ரெஜீ சிறிவர்தன அவர்களே. அவரது தாய் திருமதி. ரியுரீன் அபேசேகர அவர்களும் நிதமும் நாடகம் பார்ப்பதற்காக அரங்கிற்கு வருவதைக் காண்போம். சுனிலா எங்களைப் போன்ற ஒரு சுற்றுச் சூழலில் அல்ல, கலைநேய மிகு சுற்றுச் சூழலிலேயே வளர்ந்தார். அவர் இரு மொழிக் கல்வியின் மரபுரிமையாளரானார். அவரது குடும்பச் சூழலையும் அவரது கல்வி விடுதியும் அவரது கலைத்துறைக்கான மூளைச் சலவைக்கு பெரிதும் தாக்கம் ஏற்படுத்தியது.

ஹென்றி ஜயசேன அவர்களின் காரணமாகவே, சுனிலாவை மேடையில் நான் அறிந்து கொண்டேன். ஹென்றியின் "திரிய மவ சஹ அகே தருவோ" (உற்சாகமிகு தாயும் அவளது பிள்ளைகளும்) நாடகம் 1972 ஆம் ஆண்டு மேடை ஏற்றப்பட்டது. "ஹசனுவட்டய" எனும் நாடகத்தைப் பார்க்கச் சென்ற நாங்கள் பெரு விருப்பத்தோடு "திரிய மவ" நாடகத்தைப் பார்க்கச் சென்றோம். ஹென்றி ஜயசேன அவர்கள் "அசடக்" நாடகத்தின் பின்னர் இதில் நடித்திருந்தார். எமக்கு மீண்டும் சுனிலாவை இதில் காண்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. சுனிலா இதில் ஒரு வார்த்தையும் பேசாத பாத்திரத்தில் நடித்திருந்தார். ஏனெனில் அவர் அதில் ஒரு ஊமைப் பெண்ணின் கதாபாத்தரத்தில் நடித்திருந்தார். கைகளாலும், கால்களாலும் முகபாவனைகளாலும் மட்டும் அவர் மிகச் சிறப்பாக நடித்த விதம் இன்னும் நினைவில் நிற்கிறது. நாடகத்தின் இறுதியில் கூரையொன்றின் மேல் ஏறி நிற்கையில் அவர் வெடிபட்டு மரணித்து விழுவது போல் ஒரு காட்சி நினைவிலுள்ளது.

அடுத்ததாக நான் சுனிலாவைக் கண்டது, ஹென்றி என்னை "மக்கரா" நாடகத்திற்கு தேர்ந்தெடுத்ததற்குப் பின்னர், ஒரு நாள் மாலையில் வேலை முடிந்து கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள "சித்திரசேன" கலையகத்தில் பயிற்சிக்குச் சென்ற நேரத்திலேயே ஆகும். என்னை "லான்ஸ்லொற்" எனும் கதாபாத்திரத்திற்காக இன்னுமொரு கட்டழகனான நடிகர் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். கேட்டு அறிந்து கொண்டதன் படி அவர் நிஸ்ஸங்க தித்தெனிய ஆனார்.

நான் சிங்ஹபாகு நாடகத்தைப் பார்த்திருக்கவில்லை என்பதால் நிஸ்ஸங்கவை அறிந்திருக்கவில்லை. லான்ஸ்லொற் "dragon" க்கு எலிசாவை காவு கொள்வதற்கு இடமளிக்கமாட்டான். அவளைக் காப்பாற்றிக் கொள்கிறான். நாங்கள் பயிற்சிகளில் ஈடுபட்டோம். சுனிலா தனது பாத்திரத்தை சிறப்பாக நடித்தார். நாடகத்தின் முடிவில் நிஸ்ஸங்க அவர்களை விட நான் மேற்படி பாத்திரத்தை நன்றாக நடித்ததாகத் தெரிவித்த ஹென்றி அவர்கள், அந்த பாத்திரத்தின் உரிமையை என்னிடம் அறுதியாக ஒப்படைத்தார். எலிசாவைக் காப்பாற்றி dragon ஐக் கொன்ற வீரனாக ஹென்றி எனக்கு மேடையில் முடி சூட்டி வைத்தார். "மகரா" நாடகத்தில் லான்ஸ்லொற்



"காலய இராவய" இசை நிகழ்வில் கலைமாமணி குணதாச கபுகே மற்றும் இசைக் கலைஞர்கள்

எலிசாவிற்கு முத்தமிடும் காட்சி சகலரையும் கவரவைத்த காட்சியாகும். நாங்கள் இருவரும் அக்காட்சியில் சிறப்பாக நடித்தோம் என ஹென்றி தெரிவித்தார். நான் திருமணம் முடித்த பின், முதன் முதலில் முத்தமிட்டது சுனிலாவுக்கே என்று கூறுவதில் தப்பில்லை. இருப்பினும் அது "மகரா" நாடகத்தில் மட்டுமே. நூறு காட்சிகளை நாங்கள் மகிழ்ச்சியுடன் நடித்தோம்.

"மகரா" நாடகம் மேற்கொள்ளப்படும் காலகட்டத்தில் சுனிலா அரசியல் குழுக்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றினார். மக்கள் விடுதலை முன்னணியின் விடுதலைப் பாடல்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனிலா "அங்காரா கங்க கலாபசீ" எனும் மேடை நாடகத்தில் இடம்பெறுகின்ற பாடலைப் பாடும்போது

சுனிலா பங்கேற்றார். பாடகர் கப்புகே அவர்களும் அவர்களுக்கு மத்தியில் இருந்தார். "மகரா" நாடகம் மேற்கொள்ளப்பட்டு வந்த காலப்பகுதியில் சுனிலா பழகிய குழுக்களுக்கு மத்தியில் காமினி ஹத்தெட்டுவே கம, சரத்சந்திர சமரக்கொடி, விமல்குமார த கொஸ்தா, டபிள்யூ ஜயசிறி தர்மசேன பதிராஜ, விஜயகுமாரதுங்க போன்றவர்கள் நிதமும் காணக் கிடைத்தார்கள். சுனிலா மிக எளிமையுடன் வாழ்கின்றவராகவே மேற்படி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கண்டேன்.

அதன் பின்னர் 80 ஆம் தசாப்தத்தில் ரஞ்சித் தர்மகீர்த்தியின் "அங்காரா கங்க கலாபசீ" மற்றும் "மோதர மோல" ஆகிய நாடகங்களின் மூலமே சுனிலாவை காணக் கிடைத்தது. அங்கார நாடகத்தில் பாடல் குழுவினருடன் இணைந்து பாட்டுப்பாடி நடிப்பில் ஈடுபட்டார். அவரது இனிமையான குரலை இசைஞானி பிரேமதாச கேமதாஸ அவர்களே, அதற்கு முன்னர் கேமதாச அவர்கள் அவரை 1978 ஆம் ஆண்டு தர்மசேன பதிராஜ அவர்களின் "பம்பரு அவித்" திரைப்படத்தில் டபிள்யூ. ஜயசிறி எழுதிய "ஹந்துனாகத்தொத் ஒப மா" எனும் பாடலைப் பாடிவித்தார். அந்த இனிமையான குரல் இன்றும் எமது காதுகளில் ஒலிக்கின்றது. நான் 1979 "ஹம்சவிலக்" திரைப்படத்தில் தர்மசேன பதிராஜ எழுதிய "ஹெமின் சரே பியா விதா" பாடலை ஒலிப்பதிவு செய்வதற்கு தயாராகியபோது இந்தப் பாடலைப் பாடுவதற்கு யாரைப் பயன்படுத்துவது என்று கேட்டபோது நாங்கள் சுனிலாவையும் ரீ.எம் அவர்களையும் பயன்படுத்துவோம் என்று மாஸ்டர் கூறினார். இத்திரைப்படத்தை நேசிக்கின்ற அனைவரும் இப்பாடலையும் இன்று வரையும் நேசிக்கின்றார்கள். சுனிலா இந்தப் பாடல்களில் நிதமும் வாழ்ந்து வருகின்றார். சுனிலாவின் வாழ்க்கையில் ஓய்வின்மையின் காரணமாகவே அவர் மேடையிலிருந்தும் சினிமாவிலிருந்தும் விடைபெற்றார் என நான் நினைக்கின்றேன். அவர் நிஹால் பர்னாந்துவின் "அமாந்தய" திரைப்படத்திற்குப் பின்னர் அவரை எம்மால் காண முடியவில்லையென நினைக்கின்றேன்.

இருப்பினும் அவரது வாழ்விலிருந்து கலை ரசனையென்ற எண்ணங்கள் மறையவில்லை. அவர் அதனைப் பெரும் சிரமத்துடன் பாதுகாத்தார். கிடைக்கின்ற சகல நேரங்களிலும் சிறந்த திரைப்படங்களைப் பார்ப்பதற்கு அவர் விரும்பினார். நாடு கடந்து சென்று மேற்கொள்ளும் ஆய்வுகளின்போது அவர் திரையரங்குகள், கலையகங்கள் போன்றவற்றை கைவிடவில்லை. முடிந்த சகல சந்தர்ப்பங்களிலும் அவர் அவரது கலாசார வாழ்க்கையினை வளமாக்கிக் கொண்டார்.



சுனிலா கலைமாமணி எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்கவுடன்

பல சினிமாத் தயாரிப்பாளர்கள் தமது திரைப் படங்களை வெளிநாடுகளில் காட்சிப்படுத்துவதற்காக உபதலைப்புகளை இடுவதன் பொருட்டு எமது உதவியை நாடினார்கள். மிகவும் ஆழமாக கூறப்பட்ட உரையாடல்களை மிகவும் சுருக்கமாக ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யும் பொருட்டு அவர் கொண்டிருந்த அறிவு தனிச் சிறப்பானது. அவர் எழுதிய ஒன்றை, வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2000ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்ட இசைத் தட்டுப் பதிப்பின் போது

ஒருவரைக் கொண்டு மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. எனது அனைத்து திரைப்படங்களிலும் உப தலைப்புக்கள் அவராலேயே தயாரிக்கப்பட்டன என்பதை அவருக்குச் செய்யும் மரியாதையாகவே தெரிவிக்கின்றேன். துரதிஸ்டவசமாக மிகவும் கஷ்டப்பட்டு உபதலைப்புகளை இட்டுக் கொண்டாலும் எனது திரைப்படங்களும் என்னைப் போலவே இந்த நாட்டுக்குள் மட்டும் நின்று விட்டன. "ஹம்சவில" விற்கு அவர் எழுதிய "செனெஹச புப்புரா மியகிய சிஹினய" எனும் சொற்றொடருக்குள் ஒட்டுமொத்த திரைப்படத்தின் கருப்பொருளையே சுருக்கி எடுத்துக்காட்ட அவரால் முடிந்தது.

"மக்கரா" நாடகம் என் நினைவுக்கு வருகின்றது. நாடகத்தை தயாரித்த ஹென்றி அவர்கள் புற்றுநோய்க்கு உட்பட்டமையினாலேயே நாம் அவரை இழந்தோம். நான் "மக்கரா" நாடகத்தில் வீர லான்ஸ்லொற் ஆகவிருந்தாலும் நிஜவாழ்வில் ஹென்றியை எம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. எலிசாவை மரணத்திலிருந்து காப்பாற்றியவர் லான்ஸ்லொற். ஆனால் அவர் நிஜவாழ்விலிருந்து விடைபெறும் நேரத்தில் சுனிலாவை எம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. எனது "மக்கராக்ஷயா" நாடகத்தில் எலிசாவாக நடித்தவர் சுவர்ணா மல்லவாரச்சி இன்று அவரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் அந்த நோயிலிருந்து மீட்சிபெற அவரது சக்தியைக் கொண்டு போராடுகின்றார். நாடகத்தில் லான்ஸ்லொற் எலிசாவைக் காப்பாற்றிக் கொண்டாலும் அவரை நிஜவாழ்க்கையில் காப்பாற்ற என்னால் முடியாதுள்ளது. சுவர்ணா நாடகத்திலிருந்து விடைபெற்றார். நான் சுவர்ணாவிற்குப் பதிலாக ரமணீ பர்தோலமியுஸ் அவர்களை எலிசாவாக மாற்றினேன். அவர் நிரந்தரமாக எம்மை விட்டுப் பிரிந்தார். அவரைக் காப்பாற்றவும் நிஜவாழ்க்கையில் என்னால் முடியவில்லை. கலை வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருந்தாலும் கூட எங்கள் நிஜவாழ்க்கை எவ்வளவு சோககரமாக உள்ளது?

கலை உலகில் உலாவித் திரிந்த சுனிலா அண்மையில் இறுதியாக சுகயீனமுற்று இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது என்னிடம் கூறிய ஒரு வார்த்தையில் இந்த அனைத்து உண்மைகளையும் ஒன்றாகப் பிசைந்து என்னிடம் கூறியுள்ளார் எனத் தோன்றுகின்றது. நான் இப்போது முன்பு இருந்த சுனிலா அல்ல தர்மசிறி, நான் இப்போது தீவிரமாகப் புத்த தர்மத்தை நம்புகின்றேன். வாழ்க்கையின் இறுதிப் படிக்கட்டிற்கு வந்திருந்த அவர் கூறிய அந்த வார்த்தைகளை நான் திரும்பத் திரும்ப நினைவு கூர்கின்றேன்.

சுனிலா ஒரு உண்மையான கலைஞர் என்பதையே நான் இறுதியாகவும் குறிப்பிடுகின்றேன். ஒரு கலாசார மனிதன், அதிலிருந்து பெற்ற அனுபவங்கள் வாயிலாகவே அவர் மனித உரிமைச் செயற்பாட்டாளராக மாறினார். பெண் விடுதலைப் போராளியாக மாறினார். புரட்சிகரமான மாற்றத்தை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கான ஒரு செயற்பாட்டாளராக மாறினார். உன்னதமான கலையை மதித்த அவர் கலை பற்றிய நூல்களின் ஊடாக தமது வாழ்க்கைக்கு ஒளியைப் பெற்று அதனைச் செயற்படுத்தினார். அவரது பிரகடனம் உன்னதமானது.

அவர் ஏற்றிய ஒளி விளக்குகள் அணையாது பிரகாசிக்கட்டும் - என்பதே எனது பிரார்த்தனையாகும். ■

**தர்மசிறி பண்டாரநாயக்க**

*சுனிலாவின் மூன்றுமாத நினைவுகூரல் விழாவில் ஆற்றிய உரையில் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை அரச சார்பற்ற பெண்கள் கூட்டமைப்பினரால்
1999 இல் நிர்மாணிக்கப்பட்ட சுவரொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் தொழிலாளர் போராட்டங்களும் தொழிற்சங்கங்களின் ஆரம்பமும்

இலங்கையில் தொழிற்சங்கங்களின் ஆரம்பமானது 1800 ஆம் ஆண்டுகளிலான வரலாற்றினை நோக்கிச் செல்வதுடன் தொழிற்சங்க கலாசாரமானது பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதிகளிலேயே உருவானது. பிரித்தானியர்கள் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார முறையினையே மாற்றியமைத்ததுடன் அதற்குப் பதிலாக பெருந்தோட்டப் பொருளாதார முறையொன்றையும் அறிமுகப்படுத்தினார்கள். 1840 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தரிசு நிலக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கையர்களின் காணிகளைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொள்வதற்கு அவர்கள் நடவடிக்கையெடுத்தனர். இதன்படி உரித்து, உரிமை தொடர்பாக எதுவித சான்றினையும் வழங்க முடியாத சகல காணிகளும் தரிசு நிலங்களாக அல்லது அரச காணிகளாகக் கருதப்பட்டன. கண்டி மக்களுக்குச் சொந்தமாகவிருந்த பெருமளவிலான காணிகளை இச்சட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டதுடன் அவற்றில் தேயிலை, கோப்பி போன்ற பயிர்ச் செய்கைகளைச் செய்ய ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டாளி வகுப்பின் ஆரம்பம்

மேற்படி தரிசு நிலக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது காணிகளை இழந்த பெருமளவிலான இலங்கையர்கள் தமது இருப்பின் பொருட்டு கூலித் தொழில் வாய்ப்புகளைத் தேடி நகரப்புறப் பிரதேசங்களுக்குப் புலம்பெயர்ந்தனர். இவர்கள் பிரித்தானியர்களின் நிர்வாகத்தின் கீழே தேயிலை, கோப்பி போன்ற செய்கைகளை அண்டியதாக தொழில் புரிவதற்கு தமது விருப்பமின்மையைத் தெரிவித்தனர்.

இலங்கையர் வெளியிட்ட விருப்பமின்மையின் அடிப்படையில் *1864* ஆம் ஆண்டு தோட்டத் தொழிலுக்காக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இந்நாட்டுக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் தோட்டங்களை அண்டிய பெருந்தோட்டத் தொழிலாளர்களும், நகரப்புற தொழிலாளர்களும் என்ற வகையில் அப்போது இரு வகையிலான தொழிலாளர் குழுக்கள் காணப்பட்டன. இவ்விரு குழுக்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் கடினமான வாழ்க்கை முறையைக் கொண்டு நடாத்தியதுடன், வறுமையின் காரணமாக பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்தது. ஒட்டுமொத்தப் பெருந்தோட்டத் துறையே பிரித்தானிய ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப நிர்வகிக்கப்பட்டது.

அவர்கள் *1865* ஆம் ஆண்டு தொழிலாளர்கள் கட்டளைச் சட்டத்தை அறிமுகப்படுத்தினாலும் பாட்டாளி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் எதுவித ஏற்பாடுகளும் அதில் உள்ளடங்கியிருக்கவில்லை.

## முதலாவது வேலைப் பகிஷ்கரிப்பும் முதலாவது தொழிற்சங்கமும் (1893)

பிரித்தானிய ஆட்சியாளர்கள் எவ்வித தொழில்சார் போராட்டத்தினையும் மேற்கொள்வதற்குப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வகையிலும் இடமளிக்கவில்லை. தோட்டங்களை அண்டி வேலை செய்த இந்தியத் தொழிலாளர்கள் கல்வி அறிவற்ற பாமர மக்களாக இருந்ததுடன், நிர்வாகிகள் அவர்களைக் கொத்தடிமைகளாகக் கருதினர். அதேவேளை, வெளியாட்களுக்கு தோட்டங்களுக்குள் பிரவேசிப்பதற்கும் தோட்டத் தொழிலாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் இடமளிக்கவில்லை. இதன்படி தொழிற்சங்கமொன்றை தாபிப்பதற்கோ அல்லது தொழில் உரிமைகள் சார்பாக போராட்டம் நடத்தவோ அவர்களுக்கு அப்போது வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிரான முதலாவது தொழில் பகிஷ்கரிப்பு நகரப்புற தொழிலாளர்களின் பங்களிப்பில் *1893* ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் அமைந்திருந்த மிகப் பெரிய அச்சு மற்றும் புத்தக வர்த்தகக் கம்பனியொன்றாகிய பிரித்தானியர்களுக்குச் சொந்தமான எச். டபிள்யூ. கேவ் அன்ட் கம்பனி தொழிலாளர்கள் தமது சம்பளத் தாமதங்கள், ஆரோக்கியமற்ற வேலைகள் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பகிஷ்கரிப்பை ஆரம்பித்தனர். உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது வேலை பகிஷ்கரிப்பாக அமைந்த இந்த வேலைப் பகிஷ்கரிப்பானது ஆறு நாட்கள் இடம்பெற்றது. வேலைப் பகிஷ்கரிப்பின் இரண்டாவது தினத்தில் நடத்தப்பட்ட பகிரங்கக் கூட்டமொன்றில் இலங்கையின் முதலாவது தொழிற் சங்கமாகிய அச்சுத் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன், மேற்படி கூட்டத்தின் இறுதியில் அச்சுத் தொழிலாளர்கள் *200* பேர் சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி வேலைப் பகிஷ்கரிப்பிற்கும் தொழிற்சங்க உருவாக்கத்திற்கும் பறங்கி இனத்தைச் சேர்ந்த அல்பிறட் ஏர்னஸ்ட் புல்ஜென்ஸ் அவர்களும் இந்திய கோவா இனத்தைச் சேர்ந்த லிஸ்போ பிந்து அவர்களும் ஆதரவு நல்கினர். இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும்போது தொழிற்சங்க உரிமைகள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பாக புரிதலைப் பெற்றுக்கொண்ட புல்ஜென்ஸ் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு மீண்டும் இலங்கைக்கு வருகை தந்து தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழிற்சங்கங்களைத் தாபித்தல் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பான சொல்லாடலொன்றை ஆரம்பித்தார். இதன் பொருட்டு அவருக்கு மருதானைப் பிரதேசத்தில் மருத்துவராகப் பணியாற்றிய இந்திய கோவா இனத்தைச் சேர்ந்த லிஸ்போ பிந்து அவர்கள் ஆதரவளித்தார். இவர்களுடைய தலையீட்டின் பெறுபேறாக முதலாவது தொழிற்சங்கமாகிய அச்சுத் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் 1893 ஆம் ஆண்டு உருவானது.

பிரித்தானியர்களால் 1865 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் படி வேலையைக் கைவிட்டுச் செல்லுதல், போராட்டம் நடத்துதல் என்பன தடை செய்யப்பட்ட செயற்பாடுகளாக பெயரிடப்பட்டிருந்தமையினால், அவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களுக்கு தண்டம் விதிப்பதற்கோ அல்லது அவர்களை சிறையிடுவதோ இயலுமாக இருந்தது. இதன்படி பகிஷ்கரிப்புக்கு முன்னின்று செயற்பட்ட ஐந்து தொழிலாளர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டதுடன் வில்லியம் எனப்படும் தொழிலாளருக்கு ஒருவாரகால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதன்மூலம் அச்சமடைந்த ஏனைய தொழிலாளர்கள் வேலைப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு மீண்டும் வேலைக்குத் திரும்பியதுடன் குறிப்பிட்ட வேலைப் பகிஷ்கரிப்பானது தோல்வியான வேலைப் பகிஷ்கரிப்பாகவும் அமைந்தது. வேலைப் பகிஷ்கரிப்பானது தோல்வியுற்றாலும் பிரித்தானிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக எழுவதற்கு ஓர் அதிகாரம், ஆற்றல் மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் சங்கங்கள் ஊடாக தமக்குக் கிடைப்பதை தொழிலாளர்கள் புரிந்து கொண்டனர். உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது வேலைப் பகிஷ்கரிப்பானது அச்சுத் தொழிலாளர்களின் பகிஷ்கரிப்பாக அமைந்தாலும் அதற்கு முன்னரும் மூன்று வேலை பகிஷ்கரிப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

**உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது வேலைப் பகிஷ்கரிப்பானது அச்சுத் தொழிலாளர்களின் பகிஷ்கரிப்பாக அமைந்தாலும் அதற்கு முன்னரும் மூன்று வேலை பகிஷ்கரிப்புக்கள் இடம்பெற்றிருந்தன.**

அவையாவன,

- 1860 ஆம் ஆண்டு தர்ஸ்டன் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆசிரியர்களும் தச்சர்களும் நிர்வாகிகளுக்கு எதிராக மேற்கொண்ட வேலைப் பகிஷ்கரிப்பு
- 1870 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த நீர்ப்பாசன வேலைத்தளமொன்றைச் சேர்ந்த தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகிஷ்கரிப்பு
- கொழும்பு மாநகர சபையினால் இறைச்சிக் கடைகளுக்கான வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக 1879 ஆம் ஆண்டு இறைச்சிக் கடை உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மூன்று நாள் வேலைப் பகிஷ்கரிப்பு
- மேற்படி வேலைப் பகிஷ்கரிப்புகள் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைப் பகிஷ்கரிப்புகள் இல்லையென்பதுடன், அவற்றின் ஊடாக பாரிய அளவிலான அழுத்தம் கொடுக்க முடியவில்லை.

## இரண்டாவது வேலைப் பகிஷ்கரிப்பு (1896)

1896 ஆம் ஆண்டு கொழும்பு சலவைத் தொழிலாளர்களால் இரண்டாவது வேலைப் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. நகரத்திலுள்ள சகல சலவை நிலையங்களும் நிர்வாகத்திற்கு உள்ளாகும் வகையில் நகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற கொழும்பு நகர சபையின் சட்டமொன்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக இந்த வேலைப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னர் ஒருபோதும் அரசாங்கத்தின் எவ்வித கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காத சலவைத் தொழிலாளர்கள் இப்பதிவு செய்தலின் ஊடாக அனுமதிப்பத்திரம் பெறுவதற்காகவும், வரி செலுத்துவதற்காகவுமான ஒரு முறை உருவாகலாமென புரிந்துகொண்டனர். 3 வாரங்களாக இடம்பெற்ற மேற்படி பகிஷ்கரிப்பானது மேற்படி தசாப்தத்தில் இடம்பெற்ற மிகவும் நீண்டதும் போராட்டம் மிக்கதுமான வேலைப் பகிஷ்கரிப்பாக மாறியது.

எவ்வாறாயினும், அச்சுத் தொழிலாளர்களது பகிஷ்கரிப்பின்போது இடம்பெற்றவாறு அதிகாரிகள் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தை எடுத்துக்காட்டி சில தொழிலாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து அவர்களை குற்றவாளிகளாக்கி இந்த வேலைப் பகிஷ்கரிப்பினையும் தோற்கடித்தனர்.

## மூன்றாவது வேலைப் பகிஷ்கரிப்பு (1906)

இக்காலப்பகுதியில் நாட்டினுள் ஓரளவு அரசியல் மற்றும் சமய ரீதியான அமைதியின்மை ஏற்பட்டுக்கொண்டு வந்ததுடன், தீவிரக் கருத்துடையோர் நிதமும், சமய, அரசியல் மற்றும் தொழிலாளர் இயக்கங்களிலே முக்கியமான செயற்பொறுப்புகளை நிறைவேற்றினர். பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் நிதமும் முன்வைக்கப்பட்டன. இத்தகைய சமய ரீதியான ஆர்ப்பாட்டங்கள், அரசியல் செயற்பாடுகள் என்பவற்றின் காரணமாக அப்போதைய நகரப்புற தொழிலாளர் வகுப்பினருக்கு தமது தொழில்சார் செயற்பாடுகளின் பொருட்டு சிறந்த சூழல் உருவானது. இவ்வாறு ஏற்பட்டதான அரசியல், மத, எழுச்சி மற்றும் தொழிலாளர் போராட்டங்கள் என்பவற்றுக்கு இடையில் இடைத்தொடர்பு காணப்பட்டது. 1906 ஆம் ஆண்டு மாட்டு வண்டியாளர்கள் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்பானது பலமான வேலைப் பகிஷ்கரிப்பாக அமைந்ததுடன் வெற்றிகரமாக அமைந்த முதலாவது பகிஷ்கரிப்புமானது.

புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து கொழும்புத் துறைமுகம் வரை பொருட்களை ஏற்றிச் சென்ற மாட்டு வண்டித் தொழிலாளர்கள் வண்டிலின் நுகத் தண்டில் அமர்ந்து செல்வதைத் தடை செய்ததன் காரணமாக இந்த வேலைப் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதில் தலைமைத்துவம் ஏற்று செயற்பட்டவர் ஒர் சரிகை உரிமையாளரும், மாட்டு வண்டிகள் உரிமையாளரும், காரியம் வியாபாரியுமான ஜோன் கொத்லாவல ஆவர். அச்சமற்ற, சக்திவாய்ந்த, போராட்டப் பண்புமிகு, உத்வேகம் கொண்ட ஒரு தலைவராகிய இவர் சேர் ஜோன் லயனல் கொத்தலாவலையின் தந்தையாவார்.

இந்த வேலைப் பகிஷ்கரிப்பில் 5000 தொழிலாளர்கள் பங்கேற்றதுடன் நகரத்தின் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. புகையிரத நிலையங்களிலே தேயிலைத்தூள் பெட்டிகள் தேங்கிக் கிடந்தன. அவை துறைமுகம் வரை ஏற்றிச் செல்லப்படவில்லை.

இதன் மூலம் பதற்றம் அடைந்த பிரித்தானிய நிர்வாகிகள் நுகத் தண்டில் பயணம் செய்யும் தடையை நீக்கினர். வேலைப் பகிஷ்கரிப்பு வெற்றியடைந்ததன் பின்னர் மாட்டு வண்டில்காரர்களின் சங்கமொன்றைத் தாபிப்பதற்கு ஜோன் கொத்தலாவல முன்னின்றதுடன் அது இலங்கையில் உருப்பெற்ற இரண்டாவது தொழிற்சங்கமாகவும் அமைந்தது.

இதன்படி இலங்கையின் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது வெற்றிகரமான வேலைப் பகிஷ்கரிப்பாக மாட்டு வண்டியாளர்களின் வேலைப் பகிஷ்கரிப்பு வரலாற்றில் பதியப்பட்டுகின்றது. ■

**ரசிகா தீபானி**

(முன்னாள் தொழில் ஆணையாளர் (தொழில்நுட்பத் தொடர்புகள்) திரு. டி.எம்.எஸ். திசநாயக்க அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விரிவுரை மற்றும் பேராசிரியர் குமாரி ஜயவர்தன அவர்களால் எழுதப்பட்ட இலங்கையின் தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி நூல் (1978) என்பவற்றின் அடிப்படையானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

https://www.nwhm.org/online-exhibits/industry/8.htm




நியூயோர்க்கில் ஆடைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் - 1913

# தொழிலாளர் எழுச்சி மற்றும்
## பெண்கள் தலைமைத்துவ உலக வரலாறு

**பெண்களுக்கு வாக்குரிமையே இருக்காத ஒரு காலகட்டத்தில், அதாவது 1830ஆம் ஆண்டு, மேற்படி லொவெல் அரைக்கும் ஆலையின் பெண் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக வேலைப் பகிஷ்கரிப்புகளில் ஈடுபட்டும், அரசியலில் பெண்களுக்கான உரிமையை எழுப்பிக்காட்டியும் அமெரிக்க வரலாற்றிலும் முழு உலகிலும் முதல் மகளிர் தொழிற் சங்கத்தை உருவாக்கினர்.**

சர்வதேச தொழிலாளர் போராட்டங்களையும் தொழிற்சங்க வரலாற்றையும் தேடிச்செல்லும் நீண்ட பயணத்தின்போது அதன் ஆரம்பத்திற்கு நாம் 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சிக்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுடன் பிரவேசிக்கின்றோம். அப்போது இயங்கிவந்த அமெரிக்கத் தொழிற்சங்கங்களின் பிரதான வகிபங்கானது தொழிலாளர்களின் சுயாதீனத் தன்மையை வென்றெடுப்பதற்காகப் போராட்டம் நடத்துவதாக அமைந்தது. அவ்வாறு அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிலாளர்களின் சுயாதீனத் தன்மை பற்றிய கருத்துக்கள், அதாவது தொழிலாளர்களின் சுதந்திரம் மற்றும் தொழிற் பாதுகாப்பு வழங்கப்படுதல் என்ற வகையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களும் பின்னர் அமெரிக்கக் கலாசாரத்தின் அம்சங்களாக மாற்றம்பெற்றன. அது இத்தகைய போராட்டங்களின் காரணமாக அவற்றின் முக்கியத்துவத்தைப் பொதுமக்களும் அதிகாரிகளும் புரிந்துகொண்டதன் பெறுபேறாகும்.

எவ்வாறாயினும், 19ஆம் நூற்றாண்டில், அதாவது 1866ஆம் ஆண்டு, ஐக்கியக் குடியரசில் தேசிய தொழிற்சங்கத்தை ஆரம்பித்து வைத்துச் சகல வகைகளிலுமான தொழிலாளர்களின் உரிமைக்காக நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது எந்தவொரு தொழிலுக்கும் தனித்துவமான தன்மைகளோ முன்னுரிமையோ வழங்கப்படவில்லை. இதற்குச் சுமார் மூன்று வருடங்களின் பின்னர் 1869ஆம் ஆண்டில் சுமார் 700,000 அங்கத்தவர்களைப் புடைசூழச்செய்து "நைட்ஸ் ஒப் லேபர்" (The Knights of Labor) அமைப்பு உருவானது. தொழிலாளர்களின் சேவைக் காலத்தை எட்டு மணித்தியாலங்களுக்கு வரையறுத்தல் மற்றும் சிறுவர்களைத் தொழிலாளர்களாகச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் என்பன அதன் அடிப்படைக் குறிக்கோள்களாகவும் நோக்கங்களாகவும் அமைந்தன.

அவர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்போது அமெரிக்காவில் மிகவும் பிரபல்யமான தொழிற்சங்கமாக அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனம் (AFL-American Federation of Labor) அமைந்திருந்தது. அந்த அமைப்பின் உச்சக்கட்டத்தில் அதன் அங்கத்துவம் 1.4 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. AFL நிதமும் நடத்திய போராட்டமாகத் தமது அங்கத்தவர்களுக்குச் சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும், சேவை நிலையங்களில் தொழிற்பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் அதிகாரிகளுடனும் பேரம்பேசுதல் அமைந்திருந்தது. இப்போராட்டங்கள் அவர்களுக்கு வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுத்து, அவர்களது பிரபல்யத்தை மேலும் உறுதிப்படுத்துவதன் மூலம் முடிவடைந்தன.

இரண்டாம் உலக யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் CIO - The Congress of Industrial Organizations - மற்றும் AFL அமைப்புகள் பரந்தளவில் வளர்ச்சியடைந்ததோடு, 1955ஆம் ஆண்டளவில் இத்தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து ஓர் அமைப்பாகப் பணியாற்றவும் ஆரம்பித்தன.

தொழிற்சங்கச் செயற்பாடுகளுக்கு ஒருங்கமைவாக இடம்பெற்ற "புல்மன் வேலை பகிஷ்கரிப்பு" தொழிலாளர் தினமொன்றை வரலாற்றில் தடம்பதிக்கும் முன்னோடிப் பணியையும் பொறுப் பேற்றுக்கொண்டதாக அமைந்தது. 1893ஆம் ஆண்டு நாடுபூராவும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு புல்மன் மோட்டார் வாகனக் கம்பனி அதன் கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களின் சம்பளத்தைத் தான்தோன்றித் தனமாகக் குறைத்தது. இதன் காரணமாக எதிர்பார்ப்புக்களை இழந்து சிரமத்துக்குள்ளான அக்கம்பனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் அமெரிக்கப் புகையிரத ஊழியர் சங்கத்துடன் இணைந்து பாரிய வேலைப் பகிஷ்கரிப்பொன்றினை ஆரம்பித்தனர். தொழிலாளர் வேலைப் பகிஷ்கரிப்புக்கு மேலதிகமாக புல்மன் மோட்டார் வண்டிகளை விற்பனை செய்வதற்காகப் புகையிரதத்தின் மூலம் ஏற்றிச்செல்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர். இப்பாரிய பகிஷ்கரிப்பில் சுமார் 125,000 தொழிலாளர்கள் பங்கேற்றதுடன் அதன்மூலம் 29 புகையிரதப் பாதைகளைத் தடுத்து மறைத்தனர். வேலைப் பகிஷ்கரிப்பை முறியடிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அப்போதைய அமெரிக்க அரசாங்க நிர்வாகிகளுடன் கைகோர்த்துச் செயற்பட்டனர். வேலைப் பகிஷ்கரிப்பை அடக்குவதற்காக இராணுவப் பலம் பிரயோகிக்கப்பட்டதுடன் அதற்காக உயர்மட்ட இராணுவ அதிகாரிகளது ஆலோசனையின்பேரில் சுமார் 2000 இராணுவச் சிப்பாய்கள் பயன்படுத்தப்பட்டனர். இராணுவ வீரர்களின் தலையீடு மற்றும் வன்முறைச் செயற்பாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் காரணமாகப் பகிஷ்கரிப்பு தோல்வியடைந்ததுடன் இப்போராட்டத்தின் 13 தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். 57 பேர் பாரிய காயங்களுக்குள்ளானார்கள்.

இச்சம்பவத்தினைக் கொண்டாடும் பொருட்டு அதுவரை காலமும் புரட்டாதி மாதம் முதலாவது வாரத்தில் கொண்டாடப்பட்ட தொழிலாளர் தினத்தை, மேற்படி வேலைப் பகிஷ்கரிப்பு இடம்பெற்ற ஆனி மாதத்தில் கொண்டாட அப்போதைய ஜனாதிபதி தீர்மானித்தார். அதன்பொருட்டு, போராட்டத்தில் மரணித்த 13 தொழிலாளர்களுக்குச் செய்யும் மரியாதையாகவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தோள்கொடுக்கும் தொழிலாளர்களுக்குச் செய்யும் மரியாதையாகவும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுடன் அத்தினத்தைத் தாம் விரும்பும் வகையில் கழிப்பதற்காகவும் அத்தினத்தை விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தினார்.

எவ்வாறாயினும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்குலகில் இயங்கிவந்த "மகளிர் தொழிற் சங்க அமைப்பு" தொடர்பாக பெண்ணியல்வாதிகள் மட்டுமல்ல, பெரும்பாலான நிறுவனங்களும் வரலாறும்கூட பிரதான ஓட்டங்களில் மேலெழுப்பிக்காட்ட மறந்துவிட்டன. இருப்பினும், அப்போது பெண்களுக்கான வேலைத்தளங்களில் காணப்பட்ட நிலைமைகளை ஆரோக்கியமான நிலைமைக்குக் கொண்டுவருவதற்காகவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பதற்காகவும் ஆரம்ப அத்திவாரத்தை இட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

ஐரோப்பாவில் இருந்த மகளிர் தொழிற்சங்க அமைப்பாகும். அது ஆடைத் தொழில் துறைத் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாகப் பாரிய ஊக்கத்துடன் செயற்பட்டது மட்டுமன்றி, ஆரோக்கியமான சேவை நிலைமைகளின்கீழ் சேவைகளை வழங்குவதற்கான சட்டத் திருத்தங்களுக்காக கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அழுத்தங்களைக் கொடுத்துப் போராட்டங்களை நடத்தி தொழிலாளர் வகுப்பிற்காகப் பெரும்



www.nwhm.org/media/category/exhibits/industry/knightsoflabor.jpg

"நைட்ஸ் ஒப் லேபர்" தொழிற்சங்கங்க உறுப்பினர்கள்

பணியினை நிறைவேற்றியது. அப்போதிருந்த ஆண்களை மையமாகக்கொண்ட ஏனைய தொழிற் சங்கங்கள் பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் தமது நிகழ்ச்சி நிரல்களிலிருந்து பெரும்பாலும் அகற்றியதனால், மகளிர் தொழிற்சங்க அமைப்பு பெண் தொழிலாளர்கள்மீது தனித்துவமான கவனத்தைச் செலுத்தியது.

அமெரிக்கத் தொழிற்சங்க வரலாற்றில் முதல் மகளிர் தொழிற்சங்க அமைப்பானது "லொவெல் அரைக்கும் ஆலை" பெண் தொழிலாளர்களின் தொழிற் போராட்டங்களினூடாகத் தோற்றம் பெற்றது. பெண்களுக்கு வாக்குரிமையே இருக்காத ஒரு காலகட்டத்தில், அதாவது 1830ஆம் ஆண்டு, மேற்படி லொவெல் அரைக்கும் ஆலையின் பெண் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக வேலைப் பகிஷ்கரிப்புகளில் ஈடுபட்டும், அரசியலில் பெண்களுக்கான உரிமையை எழுப்பிக்காட்டியும் அமெரிக்க வரலாற்றிலும் முழு உலகிலும் முதல் மகளிர் தொழிற் சங்கத்தை உருவாக்கினர். பல தசாப்தங்களாக வளர்ச்சிபெற்ற மேற்படி தொழிற்சங்கப் போராட்டங்கள் 1900ஆம் ஆண்டுகளில் இருபது வயதுக்குக் குறைந்த புலம்பெயர் யூதப் பெண்களின் பகிஷ்கரிப்பைத் தடம்பதித்த "யங் விமென் சேட் வெஸ்ட் மேக்கர்ஸ்" தொழிற் சங்கத்தின் எழுச்சியுடன் மேலெழுந்தன. இவர்கள் பெண் தொழிலாளர்களின் மனித உரிமைகள் தொடர்பாகக் கடுமையாக வினவி, அதற்காகப் போராடியமையினாலும், அத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் தொழிற் பாதுகாப்புக்காகச் சட்டங்களை வகுப்பதற்கு முதற்தடவையாகத் தலையிட்டதனாலும் தொழிலாளர்களின் வரலாற்றில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த இவர்களால் முடிந்தது.

மகளிர் தொழிற்சங்க வரலாற்றில் பதியப்படுகின்ற மற்றுமொரு பாரிய போராட்டம் யாதெனில் அட்லன்டாவைச் சேர்ந்த சலவைத் தொழில் செய்த கறுப்பினப் பெண் தொழிலாளர்களின் வேலைப் பகிஷ்கரிப்பாகும். 1881ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய வேலைப் பகிஷ்கரிப்பின் மூலம் சகல வர்த்தக மற்றும் அரசியல் நடவடிக்கைகளைக் குற்றுயிராக்கியும் செயலிழக்கச் செய்தும் ஒட்டுமொத்த நகரத்தையே ஸ்தம்பிக்கச் செய்ய முடிந்தது.

இப்போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போது பெண் தொழிலாளர்கள் வேலைசெய்யாது வீட்டு வேலைகளையும் பிள்ளைகளையும் பராமரித்துக்கொண்டு வீட்டில் இருக்கவேண்டுமெனப் பெரும்பாலான ஆண்கள் நினைத்தார்கள். ஆண்கள் மட்டுமல்ல, பிற்போக்குவாதப் பெண்கள் பலரினதும் கருத்து அதுவாகவே அமைந்திருந்தது. இருப்பினும், இக்கருத்தியல்களை முறியடித்தும் கண்டித்தும் இருபதாம் நூற்றாண்டில் முதல் இரண்டு தசாப்தத்தில் சுரங்கத் தொழிலாளர்களின் உரிமைகள் சார்பாகப் பலமாகக் குரலெழுப்பிய மேரி ஹெரீஸ் ஜோன்ஸ் ஹேத் "மதர் ஜோன்ஸ்" என்பது தொழிற்சங்க வரலாற்றில் அழியாத பெயராகும். இவரது போராட்டத் தன்மையை பல ஆண்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதனாலேயே அவரை ஒரு மாவட்ட அட்டோனி "அமெரிக்காவில் உள்ள மிகப் பயங்கரமான பெண்" என்றழைத்தார்.

அவரது பலமான குரலும் நெறிப்படுத்தலும் அவரது வயதின் ஒரு பாதியைக்கொண்ட ஆண் தொழிலாளர்களை எழவைத்து, அவர்களின் உரிமைகளைக் கோருவதற்குத் தூண்டியது மட்டுமன்றி, அவர்களது மனைவிமார்களையும் மகள்மாரையும் இப்போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கும் சக்தியாக அமைந்தது. அவர் போராட்டங்களை வித்தியாசமான முறைகளிலேயே ஒழுங்கு செய்தார். தொழிலாளர்களின் மனைவிமார்களுக்குத் தும்புத்தடிகளையும் விளக்குமாறுகளையும் கொடுத்துச் சுரங்கங்களுக்கு அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தியதுடன், தொழிலாளர்களின் பிள்ளைகளை மேடைகளில் ஏற்றி, "நாங்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டும், சுரங்கங்களுக்கு அல்ல" என்ற 'பிக்கெட்' அட்டைகளைக் கையில் கொடுத்துப் போர்ச் சுலோகங்களை வாசிக்கச் செய்தவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கங்களில் ஈடுபடுத்தினார்.

அவர் தொழிலாளர்களின் "தாய்" எனும் புகழ்ச்சிப் பெயரை 1897 யூன் மாதம் நடத்தப்பட்ட புகையிரத ஊழியர் சங்க சம்மேளனத்தில் உரையாற்றியதன் பின்னர் பெற்றுக்கொண்டார். அதேவேளை, சுமார் 9,000 சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டம்

**இருபதாம் நூற்றாண்டில் முதல் இரண்டு தசாப்தத்தில் சுரங்கத் தொழிலாளர்களின் உரிமைகள் சார்பாகப் பலமாகக் குரலெழுப்பிய மேரி ஹெரீஸ் ஜோன்ஸ் ஹேத் "மதர் ஜோன்ஸ்" என்பது தொழிற்சங்க வரலாற்றில் அழியாத பெயராகும்.**


அன்னை ஜோன்ஸ்

http://www.uawregion8.net/Activist-HOF/M-Jones.htm



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சார்பாக முன்னுரிமையளித்து முன்னின்றபோது அவரது பெயர் "மதர் ஜோன்ஸ்" என மேலும் நிலைபேறானது. "மதர் ஜோன்ஸ்" போலவே மகளிர் தொழிற்சங்க வரலாற்றில் பெயர் பதியப்பட்டவர்களுள் சாரா பாக்லே, லின்டா ஹவேஸ் தொம்சன், எலிசபெத் கர்லி ப்ளின், ரோஸ் ஸ்னிடர்மன் மற்றும் லெனோரா எம். பெரி என்போர் தனிச் சிறப்பு வாய்ந்த தொழிற்சங்கத் தலைவிகளாவார்கள். லெனோரா எம். பெரி தொடர்பாக இங்கு விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும். காரணம், அவர் "நைட்ஸ் ஒப் லேபர்" (Knights of Labor) அமைப்பில் தேசிய மட்டத்தில் இருந்த ஒரேயொரு பெண் ஆவார்.

உலகம் பூராவும் பரந்து வேலை செய்கின்ற தொழிலாளர்கள் தமது சேவை நன்மதிப்புடன் உரிமைகளை வென்றெடுப்பதற்காகக் கைகோர்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டியதற்கான காரணம், அவர்கள் உலகில் எங்கிருந்தாலும் ஒரே சமமாக வேலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் தொழில் உரிமை மீறல்களுக்கும் முகங்கொடுக்கும் அதேவேளை, எவரும் உரிமைகளைத் தட்டில் வைத்துத் தொழிலாளர்களின் கைகளில் கொடுப்பதில்லையென்பதால், தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராட்டம் நடத்தவேண்டியதனாலாகும்.

பெரும்பாலான நாடுகளில் நிலவுகின்ற தொழிலின்மையினால் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக இளைஞர் சமுதாயம் இடையறாத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், தொழிலாளர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை நிலையின்றி, குறைந்த சம்பளத்திற்குச் சேவைகளை வழங்கிக்கொண்டு அவற்றின் குறைபாடுகளைச் சீர்செய்து கொள்வதற்குத் தொழிற்சங்கங்களினூடாகப் பாடுபடுகின்றனர். இவ்வனைத்துப் போராட்டங்களையும் ஒன்றுதிரட்டியும் ஒன்றிணைத்தும் "சர்வதேச தொழிலாளர் இயக்கம்" (International Labour Movement), பொதுவாக தொழிற் சட்டங்கள் தொடர்பாக அதன் கவனத்தைச் செலுத்தி, தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒப்பந்தங்களையும் உரிய திருத்தங்களையும் சமர்ப்பித்து, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது தமது பங்காளிகளாகத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முயற்சிக்கின்றது.

அவர்கள் தற்போது கொலம்பியா, பனாமா, வியட்நாம், மலேசியா, ஜோர்ஜியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தொழிற் சட்டத் திருத்தங்கள் சார்பாகத் தீவிர கவனஞ்செலுத்தி, உரிய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, அதன்மூலம் மத்திய அமெரிக்க சுதந்திர வர்த்தக வலய ஒப்பந்தத்திற்கு எதிராக கோத்தமாலாவில் ஒரு முறைப்பாடு கோப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சினைக்கு ஒருங்கமைவாக ஹொந்துராஸ், கொஸ்டாரிக்கா மற்றும் பெரூ ஆகிய நாடுகளிலும் சுதந்திர வர்த்தக வலய ஒப்பந்தங்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றது. இதேவேளை, உலகளாவிய தொழிற்சங்கக் கூட்டமைப்பொன்றின் தேவையை மேலெழுப்பி, புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாகப் பலமான தொழிலாளர் கலந்துரையாடலொன்றின் தேவையும் எழுப்பப்பட்டு வருகின்றது.

அதன்மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள், முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் இன, நிற, முன்னேற்றமடைந்த, முன்னேற்றமடையாத எனும் பாகுபாடுகளின்றி முழு உலகிலுமுள்ள ஒட்டுமொத்தத் தொழிலாளர் சமுதாயத்தினாலும் பொதுவில் சகல தொழிற் சங்கங்களினாலும் அனுபவிக்கக்கூடியதாக இருக்குமென்பது எமது நம்பிக்கை. அதன்படி ஒட்டுமொத்தத் தொழிலாளர் சமுதாயத்திற்கு வெற்றி கிட்டுமானால் அது பொதுவாக மனித குலத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமையுமென்பதில் சந்தேகமில்லை. ■

**கலாநிதி புஷ்பா ரம்லனீ**

மூலங்கள்:
http://www.aflcio.org/learn-aboutunions/international.labor-movement
http:/www.theguardian.com/world/2010/jan/20/asian-women-trade-union-grunwick



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கும் பெண்களைச் சந்தித்த வேளையிலே...



பெண்கள் கல்வி கற்க வேண்டுமா? ஆம், அறிவு பெருக அவள் கற்க வேண்டும். பெண் வேலைக்குச் செல்ல வேண்டுமா? ஆம், அவள் பெற்றுக் கொண்ட கல்வி அறிவைப் பயன்படுத்த வேண்டும். குடும்ப பொருளாதாரச் சுமையைத் தாங்க ஆண் ஒருவனின் உழைப்புப் போதாதே. எனவே, பெண் தொழில் பார்க்க அனுமதிக்கப்பட்டாள். ஆண்-பெண் சமத்துவமற்ற இச்சமுதாயத்தில், பணி இடங்களில் பெண்கள் பல்வேறு இம்சைகளுக்கு ஆளாகும் இடர் தொடர்ந்து கொண்டே இருப்பதை உணர்ந்து படித்து வேலை பார்க்கும் பெண்கள் நால்வரைச் சந்தித்துப் பேசினேன். தொழில் அதிபரின் செயலாளராகக் கடமையாற்றும் திருமதி ராஜேஸ்வரி ரவிகுலராஜன், சட்டத்தரணியான செல்வி எழில்மொழி, ஊடகவியாலாளரான திருமதி விஜிதா பஸ்நாயக்கா, பல்கலைக் கழக விரிவுரையாளராகவும், கவிஞருமான திருமதி லறீனாஹக் ஆகியோரிடம் அவர்கள் தொழில் பற்றியும், அத்தொழிலை அவர்கள் தேர்ந்தெடுத்த நோக்கம் பற்றியும் அதில் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், மேன்மேலும் அத்தொழில்களில் இணைய விரும்புவோர்க்கு அவர்கள் தரக்கூடிய அறிவுறுத்தல்கள் எனப் பல விசயங்களை பற்றியும் மனம் திறக்கும்படி நான் கேட்டுக் கொண்டதற்கான அவர்களுடைய பதில்கள் இவைகளாகும்.

- பத்மா

பொருளாதார சுதந்திரமற்று சார்ந்து வாழும் நிலையில் இருந்த பெண்களுக்கு கல்விக்கான கதவுகள் திறக்கப்பட்டதும், ஏராளமான பெண்கள் கல்வி கற்றுத் தமக்கேற்ற தொழில்களைத் தேடிக்கொண்டனர். பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் பெண்களைச் 'சொல்'சஞ்சிகைக்காக நேர்கண்ட விடயங்களையும் அவர்கள் தந்த பதில்களையும் கீழே பார்க்கலாம். எல்லோரிடமுமே அவர்கள் வேலை சம்பந்தமாக, அவர்கள் செய்யும் தொழிலின் விபரம், அதனை விரும்பி அவர்கள் தேர்ந்தெடுத்ததன் நோக்கம், அவர்கள் ஆற்றும் பணிகளோடான அனுபவங்கள், வேலையை மையப்படுத்திய சங்கடங்கள், சவால்கள், சிக்கல்கள், சுரண்டல்கள் பற்றியும் இனிமேலும் இத்தகைய பணிகளை மேற்கொள்ள இருக்கும் புதியவர்களுக்கு அவர்கள் கூறக் கூடிய அறிவுரைகள் வழிகாட்டல்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இச்சந்திப்பின் பெறுபேறு அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம். நான் மூன்று நிறுவனங்கள் ஒன்றிணைந்த தனியார் நிறுவனமொன்றின் நிர்வாக அதிபருக்கு (CHAIRMAN) செயலாளராகக் கடமையாற்றுகின்றேன். இது ஒரு கணக்காய்வு நிறுவனம் (Auditors).

இந்நிறுவனம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி உதவுவதோடு, பல்வேறு தரப்பட்ட நிறுவனங்களை ஆரம்பித்து வைக்கவும், அவற்றின் தொடர்ச்சியான இயக்கத்துக்குரிய ஆவணங்களையும், படிவங்களையும் தயாரித்து சமர்ப்பித்தல், கணக்கறிக்கைகளைத் தயாரித்தல் என்பன நாம் வெகு அவதானமாகச் செய்யவேண்டிய பணிகளாகும். இதுமாத்திரமன்றி வர்த்தகத் துறையின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணல் போன்ற சேவைகளை நடாத்தும் இன்னொரு நிறுவனமும் இவற்றுள் அடங்கும்.

இவை மிகவும் பொறுப்பு வாய்ந்த கனதியான வேலைகள் என நீங்கள் கருதுவது எனக்குத் தெரிகிறது.

இவற்றை நான் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு செய்வதனால் ஓரளவு நிதானமாகவும் சரியாகவும் நிறைவேற்ற முடிகிறது. அத்தோடு கடிதங்கள் ஆவணங்கள் தயார்செய்தல், வங்கி தொடர்பான வேலைகள் ஆகியவற்றை நிர்வாக அதிபரின் அறிவுறுத்தல்கள் ஆலோசனைகளுடன் ஆற்றுவோம். இத்தகைய வேலைகளையே நான் கடந்த 27 ஆண்டுகளாகக் கையாண்டு வருவதனால் இவற்றில் எனக்கு போதிய பயிற்சியும் அனுபவமுமுண்டு. வாடிக்கையாளர்கள் வெவ்வேறு தரத்தினராகவும், பல்வேறு தளங்களைச் சார்ந்தவர்களாகவுமிருப்பதனால் இவ்வேலையில் எவ்வித சலிப்புமின்றி சந்தோசமாகவும் உற்சாகமாகவும் தொழிற்படுகின்றேன் என்றேகூறவேண்டும்.

பெண்களைக் குறைத்து மதிப்பிடாத பண்பாடு, இன்றைய காலகட்ட நிதி நிலைமையில் பெண்களும் உழைத்தால்தான் குடும்பநிலையைச் சீராக்கமுடியுமென்ற விளக்கமுள்ள மேலதிகாரியுடன் வேலை பார்ப்பது சுமுகமாகவே இருக்கின்றது.

குடும்பச் சுமைகளோடு அலுவலக வேலைச் சுமைகளும் பெண்களை நெருக்கடிக்குள்ளாக்கும் நிலைமையிலிருந்து விடுதலை பெறவும் நேரச் சிக்கனத்தை ஒட்டியும் சில விசயங்களை நான் குறிப்பிடலாம்.

பெண்கள் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வையோடு தேவையான அறிவினையும் பெற்றுக் கொண்டவளாக எதிர்நோக்கும் சவால்களைச் சளைக்காமல் கையாளும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் இத்தகையோரால் பெண் இனத்துக்கே பெருமை சேர்க்க முடியும்.

## செல்வி எழில் மொழி

நான் ஒரு சட்டத்தரணியாகத் தொழில் புரிகிறேன். இத்தொழில் மூலம் நான் பலதரப்பட்டவர்களையும் சமூகத்தின் பல்வேறு தளங்களில் உள்ள மக்களையும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கூட அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இத்தோடு நம் சமூகத்தில் நிலவுகின்ற அவலங்கள் இவற்றுள் மக்களுடையும் பாதிப்புக்கள், பிரச்சினைகள் போன்ற பல விசயங்களையும் அறிவதோடு, இந்த அவலங்களில் இருந்து மக்களை மீட்டெடுக்க, பாதுகாக்கக் கூடிய வழிவகைகளையும் கண்டு உதவுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

நீங்கள் யாவரும் எதிர்பார்ப்பது போல நேரம் போதாமை போக்குவரத்துப் பிரச்சினைகள் என்பன எமது காலத்தை எமது தொழிலைப் பெரிதாகப் பாதித்துவிடுமென்று நான் கருதவில்லை. காரணம் ஒரு நாளில் 24 மணிநேரத்தில் எவ்வளவோ நேரத்தை வீணடிக்கிறோம் எதற்கும் ஒரு நேரசூசி வைத்து வேலை செய்தால் நமது நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துதல் இலகுவாக இருக்கும். அல்லாமலும் எந்த வேலையையும் என்ன? எப்படி எனத்திட்டமிட்டு செய்வதால் சுமுகமாக வெற்றிக் கம்பைத் தொட்டுவிடலாம். போக்குவரத்துச் சிரமங்களைக் களையவும் கூட இந்த முறையையே கையாள்வதால் மன அழுத்தங்களிலிருந்து விடுபடவும் பிரச்சினைகளைச் சீர் செய்யவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நாம் தொழில் செய்யும் சுற்றத்துடன் சமூகமாகவும் நட்போடும் நடந்து கொள்வதே வரவேற்கக்கூடியது. ஆண்களாயினும் பெண்களாயினும் ஒருவருக்கொருவர் நட்புறவுடனும் தோழமையோடும் பழகினால் நாம் தடுமாறும் வேளைகளின் அவர்கள் நிச்சயம் உதவிக்கரம் நீட்டுவாாகள். என்னதான் பொறுமையையும் அன்பையும் கடைப்பிடித்தாலும் வேலைப்பழு நெருக்கும் போது குறுகிய காலத்துள் குறித்த வேலையை நிறைவு செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படும் போது எரிச்சலும் கோபமும் தலைதூக்கும் சூழல் ஏற்படுவதுமுண்டு.

**ஆரம்பத்தில் தொலைக்காட்சியில் குறிப்பிடப்படும் காட்சிகளைக் காண்பிப்பதற்கு அதன் தயாரிப்பாளர் என்ற பொறுப்பிலுள்ள நாம் அதுவும் பெண்கள் முகம்கொடுக்கும் சவால்களோ ஏராளம்.**

இத்தொழில் மூலம் நாம் சமூகத்திற்கு ஆற்றும் பங்கு கணிசமானது என்பதே எனது கருத்து. காரணம் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வகையில் சிரமங்களுக்கு ஆளாவதுண்டு. அவற்றை ஆழ்ந்து நோக்கும் போது பிரச்சினைகளைச் சுமப்பவர்கள் தம் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பொருத்தமற்றவர்களிடம் முறையிட்டு அவற்றிற்கான சரியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. அதிலும் குறிப்பாகப் பெண்கள் தங்களது பிரச்சினைகளைப் பெண்களுடன் பகிரும் போது மனம் விட்டுப் பேசும் வாய்ப்பு அதிகம் எனவே, ஏனையவர்களைவிடப் பெண்களது பிரச்சினைகள் அதுவும் குறிப்பாக இன்றைய நிலையில் ஆண்களைவிட அதிகம் பாதிப்புக்குள்ளாகும் பெண்களுக்கு பெருமளவில் உதவுவதாக இத்தொழில் உள்ளது. வருமானத்தை நோக்கிய பார்வையைவிட பெண்களிற்கு உதவ முடிவதால் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படித் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு பெண்களும் தமது குடும்பமென்ற குழுவுக்குமட்டுமன்றி, இப்படிப் பல குழுக்கள் நிறைந்த சமுதாயத்தினையும் தனது சொந்தக் குடும்பமாக எண்ணி , வீட்டைவிட்டு வெளியேவந்து சமூகத்துக்கான பிரத்தியேக சேவை செய்யாவிட்டாலும், தான் மேற்கொண்டுள்ள தொழில் மூலம் ஒரு விசேட பதிவினை ஏற்படுத்த வேண்டுமென்பதே எனது பெரும் எதிர்பார்ப்பாகும்.

"நான் **விஜிதா.** ஊடகத்துறையில் சுமார் 15 வருடங்களுக்கு மேல் பணி செய்கின்றேன். தகவல் தொடர்பாடல் கல்வி செய்திதொழில் நுட்பம் என்பன எனது துறை அல்லது நான் ஈடுபட்டுள்ள விசயங்கள் எனக் கூறலாம். இன்னும் திங்கட் கிழமைகளில் பெண்ணிற்கான சஞ்சிகையோடு கவிதா ஆற்றல், உயர் கல்வி பல்கலைக்கழகக் கல்வி இவற்றோடு தொடர்பான போட்டிகள், கிராமிய நிகழ்ச்சிகள் மெல்லிசை, நடனங்கள், தனி, குழு எனப் பல்வேறு விடயங்கள் தொலைக்காட்சியில் காண்பிப்பதற்கு எமது உழைப்பை அர்ப்பணிக்கின்றோம்.

ஆரம்பத்தில் தொலைக்காட்சியில் குறிப்பிடப்படும் காட்சிகளைக் காண்பிப்பதற்கு அதன் தயாரிப்பாளர் என்ற பொறுப்பிலுள்ள நாம் அதுவும் பெண்கள் முகம்கொடுக்கும் சவால்களோ ஏராளம். இத்தகைய பணியில் தொடர்ந்து ஒரு தமிழ்ப் பெண் சுமார் பதினைந்து வருடங்களாக வேலை செய்வதென்பது இலகுவான காரியமல்ல. குறிப்பாக இப்படி நான் கூறுவது ஆச்சரியமாக இருக்கலாம். காரணமென்னவெனில் இத்தகைய பணியில் இருப்போருக்கு நேரகாலம் குறிப்பிட்டுக் கொள்ள முடியாது. இரவு அகால வேளைகளிலும் சிலவேளைகளில் பணி தொடர வேண்டும். தொலைதூர இடங்களுக்கு பயணித்தும் பல விடயங்களை ஒழுங்கு செய்ய வேண்டும். எம்முடன் ஒருங்கிணைந்து வேலை செய்வோரின் மொழி அதாவது ஆங்கிலம், சிங்களம் என மும்மொழிகளையும் பயன்படுத்தும் ஆற்றல் வேண்டும். அப்போது தான் இவ்விசயத்தைச் சரியாகவும் பயனுறவும் அரங்கேற்ற முடியும். நாம் கற்பனையில் எண்ணுவதை வேற்று மொழியே தெரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது உணவு, குடும்பம், உறவு கொண்டாட்டங்கள் என்ற எமது தனிப்பட்ட விடயங்களும் குடும்பச் சுமைகளும் பொறுப்புக்களும் கூட ஒரு வகையில் கழுத்தை நெரிக்கும்.**

கலைநுட்பத் தொழிலாளர்களுக்கு விளக்கி அவர்களுடைய உதவியோடுதான் எமது நிகழ்ச்சிகளைப் பூரணப்படுத்த முடியும். எனவே, அதற்கேற்ற வகையில் மொழியறிவு காலநேரங்கள், கவித்துவத்தோடிணைந்த காட்சி அமைப்புக்கள் இவற்றையும் மீறி ஒரு இளம்பெண் இவர்களோடு இணைந்து பழகும் முறைமைகள் எனப் பல்வேறு இடர்பாடுகள் நிறைந்த விடயங்கள் இப்பணிகளோடு புதைந்து கிடக்கின்றன. அத்தோடு எமது உணவு, குடும்பம், உறவு கொண்டாட்டங்கள் என்ற எமது தனிப்பட்ட விடயங்களும் குடும்பச் சுமைகளும் பொறுப்புக்களும் கூட ஒரு வகையில் கழுத்தை நெரிக்கும். இவற்றையெல்லாம் தள்ளிவிட்டு எனது கடமையில் கண்ணும் கருத்துமாகச் சமாளித்துச் செல்கின்றேனென்றால் ஒன்று எனக்கு மும்மொழிகளிலும் பேசக்கூடிய வல்லமை உண்டு. அடுத்து இத்தொழிலை நான் மிகவும் நேசிக்கின்றேன். அதனைத் திருத்திகரமாக நிறைவேற்ற வேண்டுமென்பதில் எனக்குள்ள துணிச்சலும் பெருவிருப்பும் அல்லாமலும் முக்கியமாக இங்கு நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது எனக்கு வாய்த்த கணவன். அவர் இத்துறையில் பணிசெய்யும் ஒரு தயாரிப்பாளர். அவர் பெயர் பஸ்நாயக்க அவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். இருவரும் ஒரே துறையில் பணியாற்றுவதால் நான் எனது கருமங்களை இலகுவாக முன்னெடுக்க முடிகிறது.

என்னதான் நாம் எமது பணியைப் பெரும் கஷ்டத்தின் மத்தியில் மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டாலும், நாமும் சாதாரண மனிதர்கள் தானே! எம்மிலும் சில பலவீனங்கள் இருக்கலாம். சிலவேளைகளில் சில விமர்சனங்களுக்கு ஆளாகும்போதோ அல்லது வேலை நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாதபோதோ பெரும் பதற்றமும் ஆத்திரமும் ஏற்படத்தான் செய்யும். மனதைக் கல்லாக்கி கொண்டும் பல்லைக் கடித்துக் கொண்டும் பணியைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தங்களுமுண்டு என்பதை மறைப்பதற்கில்லை. சிலவேளைகளில் பிறர் தரும் ஒத்துழைப்புகளில் இவற்றையெல்லாம் நாம் மறந்துவிடுவதுண்டு.

எனது குழுவில் சுமார் 8, 9 பேர் இருப்பார்கள். இவர்களோடு பலகாலம் நான் இணைந்து வேலை செய்வதால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து வைத்திருக்கிறோம். அந்தப் புரிதலினால் சிறு சிறு முரண்பாடுகள் தலையெடுக்கும் போது விட்டுக்கொடுத்தும் அனுசரித்தும் பேசப் பழகிக் கொண்டதால் எம் பணி தொடர்கிறது. இங்கு வேலைக்கமர்ந்த ஒரு சில வருடங்களில் பாரிய பிரச்சினைகள், கரைச்சல்கள், போன்றவற்றிற்கு முகம் கொடுத்தது உண்மைதான். இப்போ எம்மிடையே நல்ல புரிந்துணர்வு இருப்பதால் பலரது ஒத்துழைப்பும் எனக்கு இருக்கிறது. அதில் நான் திருப்தியாக இருக்கிறேன்.

நான் தயாரிக்கும் நிகழ்ச்சிகளிலும் பெண்களென்றால் 'மேக்கப்', சமையல் என்பன மட்டுமே என்றில்லாமல் புதிய புதிய விடயங்களை உட்புகுத்த விளைகின்றேன். இதற்கான ஆலோசனைகளை உங்களிடமும் கேட்டிருக்கின்றேன். இதுவரை ஏனையோரால் கையாளப்படாத புதிய செய்திகளை கலந்துரையாடல்களை அறிமுகப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் எனக்குண்டு. கலைஞர்கள், எழுத்தாளர்கள், சாதனையாளர்கள், அறிஞர்கள் ஆகியோரது உருவாக்கம் மற்றும் ஆரம்ப காலங்கள் பற்றியெல்லாம் மக்களுக்கும் சொல்ல வேண்டும் போன்ற பல கற்பனைகள் கனவுகள் எனக்கு உண்டு. எதிர்வரும் காலத்தில் இன்னுமின்னும் சிறப்பான விடயங்களைக் காட்சிப்படுத்த உங்களது ஒத்துழைப்பும் ஊக்கமும் தேவை" என்று கூறினார். ■

**பத்மா சோமகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் வீட்டுத்துறை உழைப்பு

## கண்ணுக்குப் புலப்படாதிருப்பதன் பின்புலம்

### ஓர் பால்நிலைக் கண்ணோட்ட விவாதம்



பெண்நிலை வாதம் (Feminism), பெண்நிலைச் சிந்தனைகள் (Feminist Thoughts) என்பன மேலைத்தேய இறக்குமதி விவகாரம் என்கிற கோசங்களுக்கும் அப்பால், நமது வாழ்வியல் சமூக வெளியினுள் பெண்களின் பிரச்சினைகளை, சவால்களை, அசமத்துவ நிலைமைகளை நமது பாரம்பரியப் பார்வைப் புலத்தில் நின்றும் நோக்கலாம் - நோக்க முடியும் என்று ஓரளவு சமூக மட்டத்தில் மனப்பாங்கு மாற்றம் கனிந்த ஒரு சமுதாயச் சூழல் இன்று உருவாகி வருகிறது.

பெண்நிலைவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற பன்மைத்துவ ஆய்வுச் சங்கமப் பார்வைகள், அதன் - அதாவது பெண்நிலைவாதத்தின் தீவிர ஆய்வுப் புலமையினையே எடுத்துக் காட்டுவதாகும். இன்று பெண்நிலைவாதக் கோட்பாடானது வரலாறு, மானுடவியல், பொருளியல், சட்டவியல், மொழி, இலக்கியம், கலை வடிவங்கள், சமூகவியல், மெய்யியல் என்று பல துறைகளையும் தனக்குள் ஈர்த்துக் கொண்டு ஓர் ஆழமான, செழிப்பான பல்தளப் புலமைச் சங்கமக் கற்கைத் துறையாக (Multi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– Disciplinary academic approach) பரிணமித்து வருவது புலமையாளர்களாலும் சுட்டி உணர்த்தப்படுகிறது.

இச்சூழலில் பெண்நிலைவாதம் தழுவிய பொருளியல் (Feminist Economy) பார்வையின் வழியே, பெண்களின் வீட்டுத்துறை சார் உழைப்பு (Domestic Work), அதன் சமூக இருப்பு, பொருளியலாளர்கள் / கொள்கை வகுப்பாளர்கள் / பணிக்குழுவாட்சியினர் (Economists / Policy Makers / Bureaucrats) மத்தியில் இவ்விடயம் சார்ந்து நிலவும் தந்தையாதிக்க மனோபாவங்கள், இது தொடர்பிலான சமூகவியல் யதார்த்தங்களை மிகச் சுருக்கமாக உரிய சான்றாதாரங்களோடு கட்டுடைத்துப் பரிசீலிக்கவே இக்கட்டுரை முற்படுகிறது.

### வீட்டுத்துறை உழைப்பு எனும் எண்ணக்கரு

வேலை மற்றும் உற்பத்தித் துறை பற்றிய சமூகவியற் சிந்தனைகளின் விரிவாக்கமாக வேலைத்துறை சார் விடயங்களைப் பால்நிலை நின்று விளக்குகின்ற, வியாக்கியானிப்புச் செய்கின்ற வகையில் புலமைத்துவமான ஆய்வுகளும், எழுத்துக்களும் பெருமளவில் வெளிவருகின்றன. அதன் வழி பொருளாதாரத்தையும், பால்நிலையையும் இணைத்தவாறான ஆய்வுப் பார்வையினூடு, பார்க்கப்படாத பக்கங்களும் பார்க்கப்படுவதனை அவதானிக்கலாம்.

"மனிதக் கரங்களோடு தொடர்பு கொண்ட செயற்பாடாகவும், உலகத்தோடு புறவயமான தொடர்புகளை ஏற்படுத்துவதாக அமையும் செயற்பாடே வேலை, அதன் விளைவுகள் கட்புலன் சார்ந்ததாக அமையும்" என்று வேலை பற்றிய ஓர் ஆரம்ப வரைவிலக்கணத்தினை, ஹன்னாஹரன்ட் மேற்கொண்டுள்ளார் நில மானியச் சமூகமுறை உடைவுற்று, கைத்தொழில் புரட்சியின் விளைவுகள் பெருவாரியாக இடம்பெற்ற கட்டத்தில், பெண்களின் உழைப்புப் பற்றிய கருத்துக்களும், சமூகநிலைமைகளும் மாற்றமுற்றன.

எவ்வாறாயினும், நீண்டகாலமாகவே, பெண்கள் வீட்டுத்துறை உழைப்புச்

**“நீண்டகாலமாகவே, பெண்கள் வீட்டுத்துறை உழைப்புச் செயற்பாட்டுடன் பிணைக்கப்பட்டவர்களாய் காணப்படுகின்றனர். இந்நிலைமை உருவானமை தொடர்பாக, மனிதகுல வரலாற்று அம்சங்களைப் “பால்நிலைப் பார்வையில்” மீள் கட்டவிழ்ப்புச் செய்வோரும், தந்தையாதிக்க நிலைப்பட்ட வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வோரும் ஆழமானதும், விவேகமானதுமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.”**

செயற்பாட்டுடன் பிணைக்கப்பட்டவர்களாய் காணப்படுகின்றனர். இந்நிலைமை உருவானமை தொடர்பாக, மனிதகுல வரலாற்று அம்சங்களைப் 'பால்நிலைப் பார்வையில்' மீள் கட்டவிழ்ப்புச் செய்வோரும், தந்தையாதிக்க நிலைப்பட்ட வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வோரும் ஆழமானதும், விவேகமானதுமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

பொருளாதாரத் துறையிலான கணிப்பீடுகள், மதிப்பீடுகள், புள்ளிவிபர ஆய்வுகள், அளவீடுகள் என்பன நீண்டகாலமாகவே ஆண்களினாற் கையாளப்பட்டு வந்திருக்கும் நிலையில், பெண்களின் வீட்டுத்துறை ஊழியமானது அலட்சியப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அது, பொருளாதார ரீதியிலான பெறுமானம் இல்லாத, தேசிய வருமானத் துறைக்குப் பங்களிப்புச் செய்யாததாக, பொருளாதார அசைவியக்கங்களுக்கு உட்படுத்தப்படாத ஒன்றாகப் பார்க்கபபட்டுள்ளது. அபிவிருத்தி என்னும் எண்ணக்கருவை வெறும் எண்மயமான விருத்திச் செயன்முறையாகவும், பௌதீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலான வளர்ச்சியுமாகவே கணிப்பிட்டுக் கொண்ட மரபுவழிப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் இவ்விடயத்தில் ஒரு குருட்டுத்தன்மையினை வெளிப்படுத்தி வந்திருக்கக் காணலாம்.

**பெண்நிலைவாதம் சார் பொருளியல் :**

சென்ற நூற்றாண்டின் எழுபதுகளுக்குப் பின்னர் பெண்நிலை நோக்கிலான பொருளாதாரத்துறை கட்டியெழுப்பப்பட்ட நிலையில், சமூக மத்தியில் பேசப்படாதிருந்த இத்துறை சார் விடயங்கள் விவாதங்களாக, மீள எழுதப்படும் வரலாறுகளாக, ஆய்வுக் கண்டுபிடிப்புக்களாக, விரிவார்ந்த சொல்லாடல்களாக வெளிப்பட்டன. இதன்வழி வீடு சார்ந்த விடயங்கள் பெண்களுக்குரியனவாகக் கொள்ளப்பட்ட கருதியல் முறையின் வரலாற்றுப் பின்புலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இயற்கையுடன் உயிர்நிலையான பிணைப்பினைப் பூண்டு, மனிதகுலம் பரிமாணப் படி நிலைகளில் தவழ் நடை பயிலத்தொடங்கிய தொல்குடிச் சமுதாயக் காலகட்டத்திலேயே "வேட்டையாடும் ஆண், உணவு சேகரிக்கும் பெண்" என்றவாறான உழைப்புச் செயன்முறையில் பால் நிலை அடிப்படையிலான பிரிப்புமுறை ஆரம்பமாகிவிட்டது. இதனது தொடர்ச்சி நிலையாகவே வீட்டுத்துறை பணிகள் பெண்களுக்கே உரித்தானவை என்னும் சித்தாந்தம் நிலை நிறுத்தப்பட்டு, அதனை நியாயப்படுத்தும் காரணங்கள், பண்பாட்டுத்தளத்தில் இருந்து பெறப்பட்டு சமூக அங்கத்தவர்களிடையே கருத்தேற்றம் செய்யப்படுகின்றன.

இந்த இடத்தில் பெண்களை மட்டும் வீட்டுப்பணிகளுக்குப் பொறுப்பானவர்களாய் ஆக்குவதற்கும், அவர்களின் உழைப்பினை தொடர்ந்தும் பெறுவதற்கும் பெண்மை, தாய்மை, பண்பாட்டுச் சின்னம் என்ற பலவாறான உணர்ச்சிபூர்வமான கருத்தியற் கட்டமைப்புக்கள் சமூகத்தினால், குறிப்பாக தந்தையாதிக்க முகவர்களாய்த் தொழிற்படும் சமூக நிறுவனங்களினால் உற்பத்தி ஆக்கப்பட்டு எழுதப்படாத நியமமாகத் தொழிற்படுதலையும் அவதானிக்கலாம்.

**சில சமுதாய யதார்த்தங்களும் தந்தையாதிக்கமும்**

பல்வேறு ஆய்வுகளின் பிரகாரம், பாரிய தொழிற்பட்டறைகளில் நாள்முழுவதும் பாடுபட்டு உழைப்புச் சக்தியை வழங்கும் ஆண்களை விட, வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்கள் அதிகளவிலான உழைப்புச் சக்தியை இழப்பதாக அறியவந்துள்ளது. பொதுவில், இவ்வேலைகளின் வகைப்பாட்டினை எடுத்துக் கொண்டால், சமையல், சலவை செய்தல், வீட்டுத்தூய்மை பேணுதல், குழந்தை பெறுதலும், பராமரித்தலும், வயோதிபரைக் கவனித்தல், பிள்ளைகளின் கற்றலை இலகுபடுத்தல், ஒழுங்குபடுத்தல் என்பனவாக அமைகின்றன. இவை வேலைகள் என்பதனை விட ஒரு பெண்ணின் கடமைகளாக, அவளின் திருமணவாழ்கைக் குணாம்சப்படுத்துகின்ற விடயங்களாகவும் கருதப்படுகின்றன. சமூக மத்தியில் பெண்களின் கல்வி, அந்தஸ்து, வர்க்க நிலை, பொருளாதாரம், இனத்துவம், சமயம், சாதியம், வயதுத் தொகுதி, பிராந்தியம் முதலான பல்வேறு படையாக்கங்களுக்கும் அப்பால், அவள் இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டியவளாக இருக்கின்றாள். இங்கு, இவ்வீட்டு வேலைகளில் பரஸ்பர புரிந்துணர்வுடன் பங்கெடுக்கும் ஆட்களும் "பெண்டாட்டி தாசர்களாக" முத்திரை குத்தப்படுகின்ற பண்பாட்டு மேலாதிக்கம் - காலங் காலமாக வீட்டுவேலைகள் பெண்களுக்கே உரித்தானவை என்னும் மாயையினைத் தந்திரோபாயமாகக் கட்டமைத்து விடுவதனை அவதானிக்கலாம்.

தேசிய மட்டங்களில் இடம் பெறும் கணக்கொடுப்புக்கள், புள்ளி விபரத்திரட்டல்கள், அறிக்கைகள் போன்றவற்றிலும் வீட்டு வேலை செய்யும் பெண்கள் - வேலை அற்றவர்களாகவே, கருதப்படுதலின் ஆழமான சமூக, பொருளாதாரத் தாக்கங்கள் விவாதத்திற்குள்ளாக்கப்படுகின்றன. அவ்வாறான விமர்சனங்கள் பெண்களின் வீட்டு வேலைக்கும் பெறுமதி கணிக்கப்பட்டு அவை தேசிய வருவாய்துறையினுள் உள்ளடக்கம் செய்யப்படுதலின் அவசியப்பாட்டினை கோரி நிற்கின்றன. பெண்களின் வீட்டுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு கண்ணுக்குத் தெரியாத ஒன்றாக, கவனிக்கப்படாத விடயமாக இருப்பதன் பாரபட்ச நிலைமைக்கு எதிராக முனைப்பான குரல்கள் உலக அரங்கில் இன்று வெளிப்பட்டு வருகின்றன.

பிரசன்னம் ஆகாத வேலைகளின் சமூகப் பெறுமதி பற்றி மிகத் தாக்கமான வகையிற் பேசும் அம்ரிதாபிரீதத்தின் கவிதை ஒன்று,

*"எனது மனைவி வேலைக்குச் செல்வதில்லை"*

*அப்படி ஆயின் உலகம் ஓயாமற் சுழல்வதற்காய்*

*உழைப்பவர் யார்?*

*சமையல் செய்வதும் துணிகளைத் தோய்ப்பதும்*

*தண்ணீர் சுமப்பதும் யார்*

..........................................

..........................................

*எவரது உழைப்பு கண்ணில் படாதது?*

*எவரது உழைப்பு காதில் விழாதது?*

*சம்பளம் குறைந்ததும், சம்பளம் அற்றதும்*

*எவரது உழைப்பு?*

*எவரது உழைப்பு கணக்கெடுக்கப் படாதது?*

என்ற வகையில் எமது சிந்தனையை அறைவதாய் வரையப்பட்டுள்ளது.

**"வீட்டுத்துறை உழைப்பின் பொருட்டு பெண்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் பெண்நிலைச் சிந்தனையாளர்கள் மத்தியிலே வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன."**

கவிதை மொழியின் வீரியமான கேள்விகளைப் போலவே, மேலை நாடுகளில் இத்துறை பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் எமக்கு வியப்பினை ஏற்படுத்துவனவாய் அமைகின்றன. அங்கு ஆண்களை விடவும் பெண்களே வீட்டு வேலைகளுக்கும் மேலதிகமாக வாகனம் செலுத்துதல், வாகனப் பராமரிப்பு, வீட்டு நிர்மாணம், திருத்தம் வீட்டுப்பாதுகாப்பு என்பனவற்றில் அதிகம் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனைவிட சில புள்ளிவிபரங்கள் இப்பிரச்சினைபால் அனைவரதும் விழிகளைத் திருப்புவனவாய் உள்ளன. அந்த விபரங்கள் பின்வரும் வகையில் காணப்படுகின்றன.

- பாத்திரம் கழுவுதல், சமைத்தல், துணிகளைத் துவைத்தல், அழுத்துதல் முதலான வேலைகள் சார்பில் ஒரு நிமிடத்திற்கு இழக்கப்படும் கலோரிகள்: 2-3
- வீடு பெருக்குதல், படுக்கையை நேர்த்தி செய்தல், முதலான வேலைகளின் போது இழக்கப்படும் கலோரிகள் : 3-4
- துணிகளைச் சலவை செய்தல், நிலத்தை கழுவுதல் என்பனவற்றில் இழக்கப்படும் கலோரிகள்: 5-6

மேற்கு நாடுகள் சார்ந்த இப்புள்ளி விபரங்கள் ஒரு உண்மையைப் புலப்படுத்துகின்றன. அங்கெல்லாம் நவீன புத்தாக்கச் சாதனங்களின் மூலம் வீட்டு வேலைகள் எளிதாக்கப்பட்டுள்ள நிலையில், எமது நாட்டினை ஒத்த விருத்தியுற்று வரும் நாடுகளின் பெண்கள் வீட்டுவேலைகளின் போது இழக்கின்ற கலோரிகள் அதிகமாகவே இருக்கும் என்ற உண்மையே அது.

தென்னாசிய விழுமியங்களில் மிக அதிகமாளவை தந்தையாதிக்க நலச்சார்புகளால் சூழப்பட்டுள்ள பண்பாட்டு மரபுகளில் நின்று சிந்திக்கும் போது, வீட்டுத்துறை வேலையினின்றும் பெண்கள் விடுபடுதல் வேண்டும் என்ற கோரிக்கையோ, அது பெறுமதி உடையதாக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலோ எவ்வாறு நோக்கப்படும் என்பது கேள்விக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பால்நிலையும், தொழிலும்” (Gender and Labour) என்னும் எண்ணக்கருவின் கீழ் இன்று ஏராளமான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐ.நா. அமையத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட பெண்கள் சமவாயத்திலும் இவ்விடயம் அதாவது பெண்களின் வீட்டுத் துறைசார் உழைப்பு தேசிய வருமானக் கணக்கெடுப்பினுள் உள்ளீர்க்கப்படுதல் அவசியம் என்ற கருத்து கொள்ளை அளவில் பல்லேறு வாத விவாதங்களை ஏற்படுத்தி இருப்பதனை அவதானிக்கலாம்.

வீட்டுத்துறை உழைப்பின் பொருட்டு பெண்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் பெண்நிலை சிந்தனையாளர்கள் மத்தியிலே வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. அவ்வாறு கொடுப்பனவு வழங்கும் நடைமுறையானது எவ்வழி முறைகளில் அமுலாக்கப்படும்? அவ்வாறு அமுலாக்கப்பட்டாலும் அச்செயன்முறை மனிதாபிமான உணர்வுகளை அந்நியமாக்கி, குடும்பக்கட்டமைப்பின் சமூகக் கட்டொருமைப்பாட்டினைச் சீர்குலைத்து விடாதா? மனிதர்களைப் பொருள்மயமாக மதிப்பிறக்கம் செய்து, ஒருவகையான பணிக்குழு ஆட்சியின் இயந்திரப் போக்கினை குடும்பக் கட்டமைப்பில் ஏற்படுத்தாதா? என்றவாறான பல கேள்விகளும் சில மரபு நிலைச் சிந்தனையளர்களால் முன் வைக்கப்படுகின்றன.

**பெண்களை வாட்டும் இரட்டைச்சுமை :**

இந்த இடத்தில் ‘இரட்டைச்சுமை’ என்கிற விடயமும் இணைத்துப் பார்க்கப்படுதல் அவசியம். மாறிவரும் பொருளாதாரக் கோலங்களின் விளைவாக, சமூக, பண்பாட்டு நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு இன்று அதிகளவான பெண்களும் தொழிற் துறையில் ஈடுபடுகின்றனர். அலுவலக வேலைகளுக்கும் அப்பால் வீட்டுவேலையின் சுமைகளும் அவர்களை அழுத்துகின்றன. பொருளாதாரத் தேவைகளின் நிர்ப்பந்த நிலைமைகளின் அழுத்தம் காரணமாக பெண்களை அலுவலகங்களுக்கும், பொதுத்தளங்களுக்கும், விற்பனை மையங்களுக்கும் அனுப்ப அனுமதிக்கும் தந்தையாதிக்கம் தனது கருத்தியல் நெகிழ்ச்சியையும் தனது நலன் சார்ந்தே மேற்கொள்ளும் என்றவாறு, பெண்களின் வீட்டு வேலையினின்றும் அவர்களை ஆசுவாசப்படுத்தும் எந்தவொரு நியாயமாற்றங்களையும் மேற்கொள்ளாதிருப்பது சிந்திக்கற்பாலது.

மறுதலையாக நகரமயவாக்கம், பொருளாதார நெருக்கடி என்பனவற்றின் விளைவால் மேற்கிளம்பிவரும் ஓரலகுக் குடும்ப முறையினுள், பெண்கள் இன்னும் அதிகளவான பழுவைத் தோள்களில் ஏற்க நேரிடுகின்றது. பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, ஹங்கேரி, செக்குடியரசு, போலந்து, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா முதலான பல் படித்தள சமூக, பொருளாதார அமைப்புக்களைக் கொண்ட பன்னிரு நாடுகளில் முன்னெடுப்பட்ட ஓர் ஆய்வின் பிரகாரம், வீட்டுக்கு வெளியிலும் அலுவலகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள், ஒரு வாரத்திற்கு 35 மணி நேரமளவுக்கு வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். வெளியில் வேலை செய்யாத பெண்ணோ வீட்டுவேலைகள் சார்ந்து ஐம்பது மணிநேரத்தைச் செலவிடுகின்றாள்.

இந்திய நிலைமைகளை எடுத்துக் கொண்டால் சராசரியாக ஐம்பது வருட வாழ்க்கைக் காலத்தைக் கொண்ட பெண் 8.33 வருடங்களை அல்லது தன் வாழ்க்கைக் காலத்தில் 16.66 வீதத்தைச் சமையலறையில் செலவழிப்பதாக தெரிவிக்கப்படுகின்றன. எனவே, இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகக் கோலங்களுக்கும் பொருந்துவதாகவே இது உள்ளது. எனினும், அரசாங்கமோ, வேறு சமூகப் பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களோ இவ்விடயத்தின் மீது கரிசனை செலுத்துவதைக் காண முடியாதுள்ளது.

அமர்த்தியா சென் முதலான பெண்நிலை நோக்கிலான பொருளியலாளர்கள் பெண்களின் உழைப்பு, பொருளாதாரத்துறைக்கான அவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு என்பன தொடர்பில் இன்று உலகின் கவனிப்பை ஒருங்கு திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களின் உழைப்பு வீட்டுத்துறையினுள் முடக்கப்படுவதனால், அவர்களின் ஆளுமைப் பண்பு வெளிப்பாடும், வெளி உலகு தழுவிய அறிவாற்றலும் மழுங்கடிக்கப்படுவது பற்றி எவரும் அலட்டிக் கொள்வதாக இல்லை. அத்துடன் ஓவியம், இசை, எழுத்து, மரபுக்கலைகள், நாடகம் முதலான கலை வல்லமையும், தேர்ச்சியும் பெற்ற பெண்களின் படைப்பாற்றல் சிந்தனைக்கும் வீட்டு வேலை அவர்களைச் சமூகத்தினின்றும் தனிமைப்படுத்தி விடுகின்றது. பதிலாகப் பெண்ணுக்குச் சோர்வையும், களைப்பினையும், வாழ்தலில் சுவராசியமின்மையையும் பெருக்கி அவர்களின் வாழ்க்கைக் காலத்தை நெரிக்கின்றது.

எனவே, பண்பாட்டுத்தளம் என்ற பூசிமெழுகுதலில் இப்பிரச்சினையின் தீவிரபரிமாணத்தை ஒடுக்கி வினைத்திறன் மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இப்பிரச்சினை பற்றி சமூக அக்கறையை ஒன்று குவித்து வீட்டுவேலை என்ற விடயத்தை பால்நிலைப் பிரிப்பு முறைக்கும், மேலாதிக்க விழுமியங்களுக்கும் அப்பால் - இன்றைய சமூகமாற்றங்களுக்கு இசைவாக - எப்படி ஒரு நேரியற்போக்கில் "பால் நிலைச் சமத்துவத்திற்கான" ஆக்கக் கூறாக அதனைக் கொள்ளலாம் என்பது முதன்மையான விடயமாகிறது.

"அம்மா வீட்டில் சும்மா இருக்கிறா" என்னும் பதத்தின் பின்னால் உறைந்திருக்கும் அபத்தம், இருட்டடிப்பு, அதிகார நலனின் அரசியல் பற்றி பள்ளிச் சிறாரும் உணரத்தலைப்படும் வகையில் எமது செயற்பாடுகள் வலுவாக்கம் பெறும் போதே இப்பிரச்சினை பற்றிய சமூக உணர்திறனும் எய்தப்படும்.

## "கட்புலனாக வேலைகளைக் கண்களிற்படச் செய்வோம்"

"பால்நிலையும், தொழிலும்" (Gender and Labour) என்னும் எண்ணக்கருவின் கீழ் இன்று ஏராளமான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐ.நா. அமையத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட பெண்கள் சமவாயத்திலும் இவ்விடயம் அதாவது பெண்களின் வீட்டுத் துறைசார் உழைப்பு தேசிய வருமானக் கணக்கெடுப்பினுள் உள்ளீர்க்கப்படுதல் அவசியம் என்ற கருத்து கொள்ளை அளவில் பல்வேறு வாத விவாதங்களை ஏற்படுத்தி இருப்பதனை அவதானிக்கலாம்.

மானுடப் பெறுமதி உள்ளார்ந்த பாசப்பிணைப்பு, உணர்வெழுச்சி சார் குடும்ப வாழ்வினை அல்லது வீட்டுத் தளத்தினை பொருளாதாரப் பெறுமதி ஏற்றுவதன் ஊடாக அலுவலகமாக மாற்றுவது மனித விழுமியத்திற்கும், பண்பாட்டு நியமங்களுக்கும் உகந்ததாக அமையாது என்றொரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இதுவும் புறக்கணிக்கத்தக்க சிந்தனையன்று.

எவ்வாறாயினும், பெண்ணின் வேலை என்பது இரண்டாம் தரமாக அல்லது சமூகப் பெறுமதியில் தாழ்ந்ததாகக் கொள்ளப்படும் ஆணாதிக்கப் பார்வையையும் நாம் நீடித்து, நிலைக்க அனுமதிக்க இயலாது.

எனவே, சமூகத்தின் சம அங்கம் என்ற வகையில் ஆண்கள், பெண்கள், அரசினர், பொருளியலாளர்கள், சட்டவாதிகள், அமைச்சர்கள் சார்பான உயரதிகாரிகள், பெண்நிலைச் சிந்தனையாளர்கள், சமூக ஆர்வலர்கள் யாவரும் நிதானமாகவும் அதேவேளை பால்நிலைக் கூருணர்வுடனும் ஆற, அமர கலந்துரையாடி, வீட்டுத்துறை உழைப்பு தொடர்பான ஒரு நேர்த்தியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியது சமகாலத்தின் தேவையாகிறது. ■

சந்திரசேகரம் சசிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலை செய்கின்ற பால் ஊட்டும் தாய்க்காக

## "தாய்ப்பால் ஊக்குவிக்கப்படுதல்"

"உங்கள் குழந்தைக்கு ஆறு மாதங்களாகும்வரை உங்கள் பாலை மட்டுமே கொடுங்கள்!"

இது அண்மைய நாட்களில் ஊடகங்களின் வாயிலாக நிதமும் ஒளி, ஒலிபரப்பாகின்ற ஒரு விளம்பரத்தின் சுருக்கமாகும். தாய்ப்பால் பற்றிய ஊடகப் பிரச்சாரம் திடீரெனக் களத்திற்கு வந்தது ஏனென்பதை இன்று நாடே அறியும் என்பதில் சந்தேகமில்லை. நியூசீலாந்திலிருந்து இறக்குதி செய்யப்படுகின்ற பால் மாவில் மனித உடலுக்குப் பாதகமான DCD எனும் விஷ இரசாயனப்பொருள் உள்ளடங்கியிருப்பதாக ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் விளைவாக நாட்டில் சடுதியாகப் பரபரப்பான சூழல் உருவாக்கப்பட்டமை சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பின்புலமாக அமைந்தது (தற்போது நியூசீலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் விஷ இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதையும், நேரடியாகத் தெரிவிக்கப்படாத சிற்சில காரணங்களின் அடிப்படையில் பரபரப்பான நிலைமை மறைக்கப்பட்டுள்ளதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது). எவ்வாறாயினும், இங்ஙனம் எமது நோக்கமானது மேற்படி சம்பவத்தினை ஆய்வு செய்வதோ அல்லது தாய்ப்பாலின் சிறப்புத் தொடர்பாக வர்ணிப்பதோ அன்றி, தாய்ப்பாலை ஊக்குவித்தல் மற்றும் பிரச்சார வேலைத்திட்டம் இலங்கையின் வேலைசெய்யும் தாய்மார்கள்மீது ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் அது அவர்களுக்கு முக்கியமாக அமைவது எவ்வாறென்பதை ஆராய்ந்து பார்ப்பதாகும்.

### தாய்ப்பாலின் தேவை

இவ்வுலகில் பெறுமதி வாய்ந்த பலவும் சூரிய ஒளி மற்றும் தாய்ப்பாலின் சக்தி என்பன மூலம் உருவாகியுள்ளதென்பது பிரபல்யமான ஒரு கூற்றாகும். மனித உடலினதும் மூளையினதும் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், கொழுப்பு, கலோரி, விற்றமின் வகைகள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி ஆக்கக்கூறுகள் உள்ளடங்கியிருப்பதால் பிறந்தவுடனான முதல் 06 மாத காலப்பகுதியில் குழந்தைக்குத்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாயின் முலைகளில் சுரக்கும் பால் மட்டும் போதுமானது (சிறுவர் நோய் மருத்துவ நிபுணர் சனத் லமாபதுசூரிய, தொரமடலாவ, சுயாதீன ரூபவாஹினி சேவை, 2013.08.19) என்பது மருத்துவ விதப்புரையாகும். இருப்பினும், அவசரமான ஒரு சந்தர்ப்பத்தில், அதாவது தாய் மரணித்த ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது தாயிடம் சுரக்கும் பால் போதுமானதாக அமையாத சந்தர்ப்பத்தில், பதிலீடாகக் குழந்தைப் பால்மா வழங்கப்படுவது நெடுங்காலந்தொட்டு இடம்பெற்று வந்தாலும், இடைக்கிடை உலகை ஆட்டிப்படைக்கும் விஷ இரசாயனங்கள் பற்றிய சம்பவங்கள் (நியூசீலாந்து DCD சம்பவம், சீனாவின் மெலமைன் சம்பவம்) காரணமாகப் பதிலீட்டுப் பால்மா வகைகளை விடைபெறச்செய்து, வேறு மாற்றுவழிகளை நோக்கிச் செல்ல வேண்டுமென்பது சுகாதாரத் துறையினரின் கருத்தாகும்.

இதற்கு மிகச்சிறந்த மாற்றுவழி பாலூட்டும் வேறொரு தாயின் பாலைப் பெற்றுக்கொள்வதென்பது (தொரமடலாவ, சுயாதீன ரூபவாஹினி சேவை, 2013.08.19) மேலதிகமாகவும் குறிப்பிடப்படுகின்றது. தாய்ப்பால் ஊட்டும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டுமென்பதும் மருத்துவக் கருத்தாகும் (சிறுவர் நரம்பியல் நோய் மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய, தொரமடலாவ, சுயாதீன ரூபவாஹினி சேவை, 2013.08.19).

இதன்மூலம் பால் குறைவாகச் சுரப்பதன் காரணமாகத் துன்பப்படுகின்ற தாய்மார்களுக்குத் தீர்வுகள் கிடைக்கும். இவற்றைத் தவிர தனது குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டவேண்டிய தேவையை நன்கு புரிந்துகொண்ட, அதற்கான சகல உயிரியல் காரணிகளையும் கொண்ட, வேலை செய்கின்ற பால் ஊட்டும் ஒரு தாய் இந்த நிலைமைக்கு முகங்கொடுக்கும் விதத்தை ஆராய்வது இங்கு முக்கியமாகும்.

## வேலைசெய்யும் பெண்களுக்கான பிரசவ விடுமுறை

இலங்கையில் நிரந்தர, தற்காலிக மற்றும் அமய அடிப்படையில் பணிபுரிகின்ற ஒரு பெண் சட்ட ரீதியான திருமணத்தின் மூலம் பிரசவிக்கின்ற ஒவ்வொரு பிள்ளைப்பேறுக்கும் 84 அரசாங்க வேலை நாட்கள் முழுமையான சம்பளத்துடன்கூடிய விடுமுறையும், அரசாங்க விடுமுறை நாட்கள், சனி, ஞாயிறு தினங்கள் உள்ளடங்கலாக மேலும் அரைச் சம்பளத்துடன்கூடிய 84 நாட்களிலான விடுமுறையும், சம்பளமின்றி மேலும் அத்தகைய 84 நாட்களிலான விடுமுறையையும் பெற்றுக்கொள்ளலாம்.

குழந்தைக்கு ஒரு வயது பூர்த்தியாகும்வரை கடமை நேரங்கள் ஒரு மணித்தியாலயம் பால் ஊட்டும் மணித்தியாலமாகப் பெற்றுக்கொள்ளலாம். இருப்பினும் இந்தச் சகல சிறப்புரிமைகளையும் அரச துறையைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் மட்டுமே பெறுவதுடன் தனியார் துறையில் பணியாற்றுகின்ற பாலூட்டும் தாய்மார்களால் சம்பளத்துடன்கூடிய முதல் 84 நாட்களிலான விடுமுறையை மட்டுமே பெறமுடிந்துள்ளது. தனியார் துறையைச் சேர்ந்த சில நிர்வாகத்தினர் பெண்கள் பிள்ளைகளைப் பிரசவித்து விடுமுறையில் செல்கின்றனரென்ற ஒரேயொரு காரணத்தினால் பெண்களுக்குத் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கத் தயங்குகின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அரசசார் துறை சேவை நிலையங்களும் நிறுவனத் தலைவரது தீர்மானத்தின்படி பிரசவ விடுமுறையைப் பெரும்பாலும் முதல் 84 நாட்களுடன் முடிவுக்குக் கொண்டுவருவதுடன், வேலை செய்கின்ற பெரும்பாலான பாலூட்டும் தாய்மார்கள் அச்சந்தர்ப்பங்களில் 4 மாத வயதைக் கொண்ட தமது பச்சிளங் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த மாற்றுவழியாகப் பதிலீட்டுக் குழந்தைப் பால்மா வகைகளையே அக்காலந்தொட்டுப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். மேற்கூறப்பட்ட விடயங்களுக்கமைய, பதிலீட்டுக் குழந்தைப் பால்மா சம்பந்தமாக இடைக்கிடை எழுகின்ற அபாயகரமான நிலைமைகளின் காரணமாக இத்தகைய தாய்மார் உளரீதியாகப் பாரிய துன்பங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இவ்வாறான பின்புலத்தில் மருத்துவர்கள் வழங்கும் தீர்வு யாதெனில், "தாய்ப்பாலைக் கறந்து களஞ்சியப்படுத்திப் பின்னர் அதனைக் குழந்தைக்கு ஊட்டுவது" ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை செய்கின்ற தாய்ப் பாலூட்டும் தாய் மற்றும் பால் சுரத்தல்

இலங்கையில் வேலைசெய்கின்ற பெண்ணின் தினப்பணிகள் வழக்கமாக அதிகாலை 3 அல்லது 4 மணிக்கு ஆரம்பமாகின்றன. அதன் பின்னர் வழக்கமாக இரண்டு உணவுவேளைக்கான சமையல் வேலை செய்யும் அவள், கணவனுக்கான பணிகளையும் மூத்த பிள்ளைகள் இருப்பின் அவர்களது பணிகளையும் நிறைவேற்றி, வேலைக்குச் சென்று அக்கடமைகளையும் நிறைவேற்றி, மீண்டும் வீட்டுக்குத் திரும்பிவரும்போது நேரம் பொழுதுசாயும் 18:00 மணித்தியாலமாக (பி.ப. 6.00மணி) இருக்கும். இரவு உணவுவேளையும் பெரும்பாலும் அவளாலேயே தயாரிக்கப்படும்.

தாய்ப்பாலூரட்ட வேண்டிய ஒரு குழந்தை வீட்டிலிருக்கும்பட்சத்தில் வீட்டுக்கு வந்தவுடனேயே அவளது கவனம் அக்குழந்தைமீது செலுத்தப்பட வேண்டியதுடன் (குழந்தையைப் பகல் நேரத்தில் கவனிப்பது தனியான ஒரு பிரச்சினையாகக் கலந்துரையாடப்பட வேண்டும்) குழந்தையும் தாய்ப் பாலுக்காக முலைக் காம்புகளை எதிர்பார்த்திருக்கும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாலை உறிஞ்சிக் குடிப்பதற்கு பிள்ளைக்கு இடமளிக்கப்படும். பாலைக் கறப்பது நடைமுறையில் சிரமமானது மற்றும் அது ஒரு வெற்றிகரமான முறையுமல்ல. அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட காலப்பகுதியில் முலைகளிலிருந்து பால் அகற்றப்படாவிட்டால் பால் வற்றிச்செல்லும் என்பது வெளிப்படையான ஒரு விடயமாகும். அதாவது, மதிய நேரத்தில் ஆகக்குறைந்தது இரண்டு அல்லது மூன்று தடவைகள் முலைகளிலிருந்து பால் வெளியேற்றப்படுதல் அல்லது கறந்து வைக்கப்படுதல் கட்டாயம் செய்யப்படுதல் வேண்டும். இது இவர்களைப் பொறுத்தமட்டில் அலுவலகத்தில் அல்லது வேலைத் தளத்தில் அல்லவா மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## வேலைத் தளத்தில் தாய்ப்பாலைக் கறத்தல்

வேலைத் தளங்களில் பிள்ளைகளைப் பராமரிக்கும் இடங்களை அமைக்கவேண்டுமெனவும் பாலைச் கறந்து வைக்கக்கூடிய வசதிகள் வழங்கப்படவேண்டுமெனவும் போசாக்குப் பற்றிய மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்றார் (தொரமடலாவ, சுயாதீன ரூபவாஹினி சேவை, 2013.08.19). இன்று அலுவலகத்தில் கறக்கப்படும் பாலை நாளைய தினம் பிள்ளையின் உணவு வேளையில் சேர்த்துக்கொள்ளலாமென்பது அவரது கருத்தாகும். உண்மையிலேயே மருத்துவர்களின் மேற்படி விதப்புரைகள் இந்நாட்டுத் தொழில் நிலையங்கள் மற்றும் அவற்றின் கட்டமைப்புகளினுள் பொருத்தமாக உள்ளனவா என்பது சந்தேகமே. சேவை நிலையங்களை அண்டியதாகப் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் என்பது இடையறாது கலந்துரையாடப்பட்டு வருகின்ற, இருப்பினும் இதுவரை முழுமையடையாத ஒரு தேவையாகும். இன்றைய "முலைப்பால் எடுத்தல் " தேவையை அலுவலகங்களை அண்டியதாகத் தீர்த்துக்கொள்ள முடியுமா என்பதை ஓரளவு புரிந்துகொள்வதற்காகச் சில திறந்த உதாரணங்களை இங்கே குறிப்பிட வேண்டும்.

ஒருசில காலம் அரசாங்கத்துடன் தொடர்புபட்ட பல வசதிகளைக் கொண்டமைந்த ஊடக நிறுவனமொன்றில் பணிபுரிந்த நான் அங்கு அனுபவ ரீதியாகக் கண்டுகொண்ட உண்மை யாதெனில், “பெண்கள் ஓய்வு அறைகள்” பெரும்பாலும் துறைத் தலைவர்களிடமிருந்து தப்பித்துத் தூங்குவதற்கும், ‘மேக்கப்’ செய்வதற்கும், தலைமுடியை வடிவமைப்பதற்கும், ஆடைகளைச் சரிசெய்துகொள்வதற்கும் மட்டும் பயன்படுத்தப்படுகின்ற பெண்களின் களங்களாக மாறியுள்ளன. அங்கு அமைதியாக இருந்து முலைப்பால் எடுப்பதற்கு பொருத்தமான சுற்றுச்சூழல் கிடையவே கிடையாது. ஒரு பெண் வந்து, “பால் போதாது அல்லவா?”, “பிள்ளை நன்கு பால் குடிக்கின்றதா?”, “பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதடையமாட்டாதா?" என்றவாறான கேள்விக் கணைகளைத் தொடுப்பார்.

தற்போது அரசாங்கப் பாடசாலையொன்றில் ஆசிரியையாகக் கடமையாற்றும் நான் ஆசிரியர் ஓய்வு அறைகள் தொடர்பாக மிகவும் கசப்பான அனுபவங்களைப் பெற்றுவருகின்றேன். ஆண்-பெண் மலசலகூடங்கள் ஒன்றுக்கொன்று அருகில் அமைந்துள்ள, உணவு மேசை மலசலகூடத்துக்கு நேராகக் காட்சியளிக்கின்ற, தொடர்ச்சியாக நீர்க்குழாயிலிருந்து நீர், வடிந்தோடுகின்ற, நான்கு பக்கங்களும் திறந்த சுற்றுச்சூழலில் அமைந்துள்ள அத்தகைய ஓய்வறையில் இருந்துகொண்டு, ஒவ்வொருவரின் உடலிலும் மோதிக்கொண்டு, நெருக்கடிக்கு மத்தியில் முலைப்பால் எடுப்பதென்பது நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத ஒரு விடயமென்பதை உறுதிபடக் குறிப்பிடுகின்றேன்.

அரச துறைகளில் பெற்றுக்கொண்ட அனுபவங்களுடன் இப்பிரச்சினை தொடர்பாக நாட்டில் பெயர்பெற்ற தலைசிறந்த வசதிகளைக்கொண்ட தனியார் துறையொன்றில் பணியாற்றும் தாய்ப்பால் ஊட்டுகின்ற எனது நண்பி ஒருத்தியிடம் பகிர்ந்துகொண்டேன். "முலைப்பால் எடுப்பதற்கு" ஓர் இடம் இல்லாததுதான் பிரச்சினை. சாப்பாட்டு அறையில் எல்லா இடங்களிலும் சாப்பாடு கொட்டிக்கிடக்கின்றது. ஈக்கள் அதிகமாகவுள்ளன. பைலிங் ரூம் (கடிதக்கோப்பு அறை) தான் உள்ளது. அதில் ஏ/சி எவ்வாறு இருக்கும்? ஒரு காற்றாடிகூடக் கிடையாது. வியர்த்துக் கொட்டிக் கொண்டு முலைப்பால் எடுப்பது எவ்வாறு?" சம்பந்தப்பட்ட உதாரணங்களை இங்கு முன்வைத்ததற்கான காரணம் இந்நாட்டுச் சேவை நிலையங்களில் முலைப்பால் எடுப்பதற்கு பொருத்தமான இடம் இல்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கேயாகும்.

இவற்றைத் தவிர, நிறுவனத் தலைவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவி, அதற்காக நேரத்தை ஒதுக்கித்தருதல் என்பன இச்சிக்கலின் நீடிப்புக்களாகவே உள்ளன. அதேவேளை, பாலைக் கறந்த பின்னர் அதனை அறை வெப்பநிலையில் 06 மணித்தியாலங்கள் மட்டுமே வைத்திருக்க முடியும். எனவே, வீட்டுக்குச் செல்லும்வரை குளிரூட்டி வைத்திருப்பதற்குக் குளிரூட்டி வசதிகளும் வழங்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் விரைவில் பூர்த்திசெய்துகொள்வதற்குக் கவனம் செலுத்தப்படும்வரை தாய்ப்பாலை ஊக்குவித்தல் என்பது வெறுமையான விதப்புரையாக மட்டுமே இருக்கும். வைத்திய கலாநிதி ரேணுகா ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்ற வகையில் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் தாபித்துள்ள "தாய்ப்பால் வங்கி"களை முன்னுதாரணமாகக் கொண்டு, நகரப் புறங்களில் முடியாவிட்டாலும் கிராமப்புறங்களை அண்டியேனும் "தாய்ப்பால் வங்கி"களைத் தாபிப்பது இந்த நாட்டின் வேலைசெய்யும் பெண்களுக்கு மாற்றுத் தீர்வுகளைப் பெற்றுத்தரும்.

ஐரோப்பிய நாடுகள் ஏற்கெனவே தாய்ப்பாலைச் சந்தைப்படுத்தும் கட்டம்வரை தமது தாய்ப்பால் ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளனவென்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் தாய்ப்பால் முகாமைத்துவ அலகுகள் ஆஸ்பத்திரி மட்டத்தில் தோல்வியடைந்துள்ளதெனவும், தாய்ப்பால் ஊட்டும் தொழில்நுட்பத்தை மேற்கொண்டும் முன்னேற்றவேண்டுமெனவும், வதிவிடப் பயிற்சி மருத்துவர்கள், பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவர்கள், சிறுவர் நோய் மருத்துவர்கள், தாதிமார் என்போர் இதன்பொருட்டுப் பயிற்றுவிக்கப்படவேண்டுமெனவும் டாக்டர் அனுருத்த பாதெனிய தெரிவிக்கின்றார் (தொரமடலாவ, சுயாதீன ரூபாவாஹினி சேவை, 2013.08.19).

தாய்ப்பால் ஊக்குவிப்பானது பாலூட்டும் சகல தாய்மார்களுக்கும் முக்கியமான ஒரு விடயமாக இருப்பினும், வேலைசெய்யும் பாலூட்டும் தாயை இலக்காகக்கொண்டு இதன் ஒரு பகுதியையேனும் நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான காரணம், அவரைச் சூழ்ந்து சமூக, தொழில்சார் மற்றும் குடும்பப் பிரச்சினைகள் பல காணப்படுவதாலாகும். ஏனெனில், மேற்படி குழந்தைகளைக் கவனித்துப் பார்த்துக்கொள்ளுதல் அல்லது தாய்ப்பாலை வழங்குதல் என்பன சிக்கலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களாக அமைந்துள்ளமையினால் தற்போதைய இலங்கைப் பெண்கள் பிள்ளைகளைப் பெறுவது சம்பந்தமாகச் சுய தணிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். கல்வி, தொழிலின்மை அல்லது பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக, திருமண வயதைத் தள்ளிப்போடுகின்ற இலங்கை யுவதிகள் குறைந்த கருவளத் தன்மையால் பீடிக்கப்படுகின்ற அதேவேளை, சமூகம் பெண்கள்மீது மேற்கொள்ளும் "மலட்டுப்பெண்" எனும் மிலேச்சத்தனமானதும் மரபு ரீதியானதுமான நிந்தனைக்குப் பயந்தும் வெட்கப்பட்டும் ஒரு பிள்ளையையேனும் பெற்றெடுக்க முயற்சிக்கின்றாள். அதன் பின்னர் அவள் குழந்தையைக் கவனித்துப் பார்த்துக் கொள்ளுதல், அதற்குப் போசாக்கான உணவை வழங்குதல் (06 மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டும் வழங்கப்படுவது உள்ளடங்கலாக) போன்ற சிக்கல்களுக்கு முகங் கொடுக்கின்றாள். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகவன்றி, மரபுரீதியான அவமானத்துக்குப் பயந்து பெற்றெடுத்து வளர்க்கும் பிள்ளைகளினுள்ளும் உருவாவது இதே உளரீதியான தூண்டல்களேயாகும்.

இந்தப் பூமியை நிர்வகிக்கும் மன்னர்கள் மனித உயிரினத்தின் பிறப்பு, வளர்ப்புத் தொடர்பாகக் கரிசனை கொள்ளவேண்டியதற்கான காரணம், அது ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு முக்கியமானதென்பதனாலாகும். குடும்பத்தைப் போலவே நாட்டின் பொருளாதாரத்திற்குமாகச் சுமைதாங்கும் இந்நாட்டு வேலைசெய்யும் பெண்ணைப் பாதுகாக்கும்பொருட்டு வேலைத்தள அல்லது அலுவலக மட்டத்தில் ஆரம்பிக்கப்படவேண்டிய பல நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மத்தியில் "தாய்ப்பால் ஊக்குவிப்பு" என்பதனையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், அது எதிர்காலத்தில் தேசத்தின் சக்திக்குக் கூடிய பலத்தையும் ஏற்படுத்தும். ■

**வத்சலா கமகே**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலையகத்திலே பிறந்து அங்குள்ள சமூகப் பிரச்சினைகளை தினமும் பார்த்து வளர்ந்துள்ள துணிகரமான பெண்

# சரஸ்வதி சிவகுருநாதன்



**அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் நான் பெண்களோடு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே வேலை செய்தேன். இந்தக் குறுகிய காலப்பகுதியில் என்னால் முடிந்த சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன்.**

சரஸ்வதி சிவகுருநாதன் மலையகத்திலே பிறந்து அங்குள்ள சமூகப் பிரச்சினைகளை தினமும் பார்த்து வளர்ந்துள்ள துணிகரமான பெண். ஆரம்பத்தில் மலையகத்திலுள்ள பிரபல தொழிற்சங்கம் ஒன்றில் மகளிர் சங்க இணைப்பு அதிகாரியாக செயற்பட்ட இவர், சில நிர்ப்பந்தங்கள் காரணமாக அதிலிருந்து விலகி தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து மாதர் சங்க தலைவியாக செயற்பட்டுள்ளார். இவரின் திறமை மற்றும் ஆற்றிய பணிகளுக்காக மாகாண சபைத் தேர்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிடும் வாய்ப்பு கிட்டியது. 2013ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெற்ற மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு 29,000 வாக்குகளைப் பெற்று கட்சியின் மூன்றாவது நபராக வெற்றி பெற்றுள்ளார்.

மலையகப் பெண்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அவற்றிற்குத் தீர்வுகாண பல செயற்பாடுகளை முன்னெடுக்கும் மலையகப் பெண்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.

*1. மலையகத் தோட்ட தொழிலாளப் பெண்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியம் தொடர்பான உங்கள் கருத்து என்ன?*

தற்போது மலையகத் தோட்டத் தொழிலாளப் பெண்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளமானது மிகக் குறைவாகும். வருகை ஊக்குவிப்பிற்கு ஒரு தொகை வழங்கப்பட்டாலும் இன்றைய வாழ்க்கைச் செலவிற்கு அது போதுமானதாக அமையவில்லை. உதாரணத்திற்கு இன்றைய நிலையில் பால்மா பைக்கற் ஒன்றை வாங்குவதற்கான வசதிகள்கூட அவர்களுக்கு இல்லை. மலையகத்தில் மிகப் பிரதான காலை உணவு ரொட்டி ஆகும். இதுவே அங்கு காணப்படும் காலநிலைக்கு உகந்ததும்கூட. ஆனால் இன்று வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளதால் உணவு முறையைக்கூட மாற்றி காலை ஆகாரத்திற்கு சோறு உட்கொள்கின்றனர்.

மேலும், எத்தனை சதவீதமான பெண்களுக்கு இச்சம்பளம் என்ன அடிப்படையில் வழங்கப்படுகின்றது, என்ன கட்டளைகள் (conditions) காணப்படுகின்றன போன்றவை தொடர்பாக போதிய விளக்கம் இருக்கின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாகும். அதேபோல பெறும் சம்பளப் பணம் முழுவதையும் தங்கள் கணவன்மாரின் கையிலே வழங்கிவிட்டு கஷ்டப்படும் பெண்களையே பார்த்திருக்கின்றோம்.

இன்று மலையகத்திலிருந்து அதிகளவான பெண்கள் கொழும்பு போன்ற நகர்ப்புறங்களுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக படையெடுக்கின்றமைக்கு சம்பளப் பற்றாக்குறையே காரணமாகும். எனக்குத் தெரிந்த வகையில் சில நேரங்களில் வீட்டுப் பணிப் பெண்களுக்கு ரூபா 20,000 வரையில் வழங்கப்படுவதனால் அங்கு வேலைக்குச் செல்கின்றனர். ஆனால் எல்லோராலும் இவ்வாறு சென்று சம்பாதிக்க முடியாது. எனவே நியாயமான சம்பளம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

*2. முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தோட்ட சேவையாளர் சங்கத்திற்கும் இடையிலான சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் கடந்த 12 ஆம் திகதி பங்குனி மாதம் (2014) கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது மலையகப் பெண்களுக்கு எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தும்?*

இந்த 25 சதவீதமான சம்பள அதிகரிப்பை நான் சாதகமானதாகவே பார்க்கின்றேன். ஏனெனில் தோட்ட சேவையாளர் சங்கத்தில் பிள்ளை பராமரிப்பு உத்தியோகத்தர்கள் (Cr-che Attendants), தோட்ட நிர்வாக காரியாலயத்தில் பணிபுரிகின்ற எழுதுவினைஞர்கள் (clerks) போன்றோரும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் அதிகமானோர் பெண்களே யாவர். எனவே, பெண்கள் இதில் நன்மை அடைகின்றார்கள். இருந்தபோதிலும் இப்பதவிகளுக்கு மேலும் மலையகத் தோட்டப்புறப் பெண்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

*3. சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தங்களின்போது மலையகப் பெண்களின் கருத்துக்கள் எந்தளவிற்கு உள்வாங்கப்படுகின்றன?*

இங்கு கூட்டு ஒப்பந்தக் கமிட்டிகள் காணப்படுகின்றன. ஆனால் இக்கமிட்டிகளில் இதுவரை பெண்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. முற்றுமுழுதாக பெண்கள் பிரதிநிதித்துவமற்ற கூட்டு ஒப்பந்த கமிட்டிகளே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றன.

பெண்களுக்கு ஒன்றும் தெரியாது, அவர்களால் ஒரு விடயத்தை எடுத்துக்கூற முடியாது, மிகவும் கூச்ச சுபாவமுள்ளவர்கள் என்றெல்லாம் அவர்களை இவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களுக்கு இணைத்துக் கொள்வதில் ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் பின்வாங்குகின்றனர். அதேவேளை, தோட்டக் கமிட்டித் தலைவர்களுக்கு "கோட்டா பணம்" எனப்படுகின்ற சில செயற்பாடுகளை அத்தோட்டங்களில் செய்வதற்கு குறித்த தொழிற் சங்கங்களால் பெரும்பாலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும். இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போட்டியிலேயே ஆண்கள் இப்பதவியை கைப்பற்றுகின்றனர். அதேபோல இப்பதவியினால் கிடைக்கும் சமூக அந்தஸ்து மற்றும் அதிகாரமும் மற்றுமொரு காரணமாகும்.

ஆனால் நடைமுறையில் பெண்கள் தங்களின் பிரச்சினைகளை சரிவர எடுத்துக்கூறிய பல சந்தரப்பங்கள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு ACL எனப்படுகின்ற மாவட்ட தொழில் திணைக்களத்திற்குச் சென்று தங்களின் பிரச்சினைகளை, எதிர்கொள்ளும் சிக்கல்களை அதிகாரிகளுக்குத் தெளிவாக விளக்கிக்கூறி அதற்கான தீர்வுகளை பெற்றுள்ள பல சந்தர்பங்கள் எனது அனுபவத்தினூடாகப் பாரத்துள்ளேன்.

***3. சட்டங்களில் குறிப்பிடப்படும் தொழிற் பாதுகாப்பு என்ற விடயம் மலையகப் பகுதிகளில் எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது?***

மலையகத்தில் குறிப்பாக பெண்களுக்கு தொழிற் பாதுகாப்பு இல்லை என்றே கூற வேண்டும். இந்த தொழிற் பாதுகாப்பு என்பது தொழில் வழங்குநர்களால் வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும். உதாரணத்திற்கு நாம் ஆடைத் தொழிற்சாலைகளைப் பார்த்தோமானால் அங்கு வேலை செய்யும் பெண்களுக்கு ஆகக் குறைந்தது அவர்களுக்குரிய சீருடை, அருந்துவதற்கு நீர் மற்றும் சில பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு எவ்வித தொழிற் பாதுகாப்பு முறைகளையும் தோட்ட நிர்வாகங்களோ அல்லது பெருந்தோட்டக் கம்பனிகளோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. ஒரு சில பெண்கள் மாத்திரமே "செருப்பு" அணிந்து வேலைக்குச் சென்றாலும், அது அவர்களின் சொந்தப் பணத்தில் வாங்கியதாகும். அநேகமான பெண்கள் செருப்புகூட போடாமல் வேலை செய்து பல சிரமங்களுக்கு உள்ளாகுகின்றனர்.



புகைப்படம் : வேலாயுதம் ஜெயச்சித்ரா

**நுவரெலியா மாவட்டத்தில் எமது தொழிற்சங்கத்தினூடாக மாதர் சங்கங்களை மறுசீரமைக்கும் பணியையும் முன்னெடுத்துள்ளோம். சில தோட்டங்களில் மாதர் சங்கங்கள் காணப்படாதபோது அங்கு புதிதாக சங்கங்களை உருவாக்குவதும், செயற்படாமல் பெயரளவில் மாத்திரம் காணப்படும் மாதர் சங்கங்களை செயற்பட வைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் இதனுள் உள்ளடங்கும்.**

எனக்குத் தெரிந்த வரையில் சில தொழிலாளர் சங்கங்களும் மக்களும் இணைந்து தொழிற் பாதுகாப்புப் பிரச்சினை தொடர்பாக சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO) வரை கொண்டு சென்றிருப்பினும் இதுவரை காத்திரமான மாற்றங்கள் வரவில்லை. எனவே, மீண்டும் மீண்டும் நாம் போராடியே இவ்வுரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

***4. மலையகப் பெண்களின் பிரதிநிதி என்ற வகையில், அவர்களின் தொழில் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தாங்கள் கூறும் யோசனைகள் யாவை?***

முதலாவதாக "தொழிலாளர் கல்வி" மேம்படுத்த வேண்டும். அதாவது தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக தோட்டத்தில் வேலை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் நடைமுறையில் தோட்டக் கமிட்டித் தலைவர்களுக்கு மாத்திரம் இவ்வாறான பயிற்சிகள், விழிப்புணர்வு செயலமர்வுகள் என்பன வழங்கப்படுகின்றன. ஆனால் 99 சதவீதமான தோட்டக் கமிட்டித் தலைவர்கள் ஆண்களாவர். இவ்வாறு பயிற்சிப் பட்டறைகளுக்குச் செல்லும் ஆண்களும் அவ்விடயங்களை ஏனைய பெண்களுக்கு எடுத்துக் கூறுவதில்லை. எனவே பெண்களுக்கு இவ்விடயங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்புகள் காணப்படுவதில்லை.

அண்மையில் நான் ஒரு பயிற்சிப் பட்டறைக்குச் சென்றிருந்தேன். அதில் ஒரு விடயத்தை எவ்வாறு வெவ்வேறு மட்டப் பெண்களுக்குக் கொண்டு செல்லலாம் என்ற பொறிமுறைகளைக் கற்றுக்கொண்டேன். இது செலவு குறைந்ததும் ஆகும். அதேவேளை எம்மால் ஒரு விடயத்தை மற்றவருக்கு கற்றுக் கொடுக்க முடியவில்லையாயின் வெளியிலிருந்து ஒருவரைக் கொணர்ந்து அப்பயிற்சிப் பட்டறையை நடாத்தலாம்.

**6. தொழில் செய்யும் பெண்கள் வேறு துறைகளில் சாதிப்பது தொடர்பாக உங்கள் கருத்து யாது?**

இன்று உலகளாவிய ரீதியில் பல பெண்கள் ஒரே நேரத்தில் பல்வேறு துறைகளில் இவ்வாறு சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் என்னை ஒரு உதாரணமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். நான் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடுகின்ற அதேவேளை அரசியல் வேலைகளையும் செய்கின்றேன். இதைவிட ஒரு குடும்பத் தலைவியாகவும் எனது பொறுப்புக்களைச் சரிவரச் செய்கின்றேன். இதுவே ஒரு பாரிய வெற்றியாக நான் கருதுகின்றேன். ஒரே நேரத்தில் பல துறைகளில் சாதிப்பதற்கு பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எமக்கிருக்கும் திறமை, துணிவு, தன்னம்பிக்கையே இவற்றைச் செய்ய போதுமானதாகும். எனவே மலையகத்தில் தோட்டப்புறங்களில் வேலை செய்யும் பெண்களும் வெவ்வேறு துறைகளிலும் சாதிக்கலாம்.

**7. மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தாங்கள் பெண்கள் தொடர்பாக முன்னெடுத்த நடவடிக்கைகள் யாவை?**

அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் நான் பெண்களோடு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே வேலை செய்தேன். இந்த குறுகிய காலப்பகுதியில் என்னால் முடிந்த சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். முதலாவதாக நுவரெலியா மாவட்டத்தில் பிரதான நகரங்களை மையப்படுத்தி எட்டு பெண் இணைப்பாளர்களை (Women Cordinators) உருவாக்கியுள்ளோம். அதாவது கட்சி மற்றும் தொழிற்சங்கங்களை பார்த்தீர்களானால் குறிப்பிட்ட பிரதேசத்தில் கூட்டங்களுக்கு மக்களை அணிதிரட்டுதல், மக்களின் பிரச்சினைகளை மேல்மட்டத்திற்கு கொண்டு செல்லுதல் போன்ற பிரதான வேலைகளை இவ்விணைப்பாளர்களே மேற்கொள்வர். அவ்வாறே இப்பெண் இணைப்பாளர்களும் எமது சங்கத்தில் தொழிற்படுகின்றனர்.

அத்தோடு நுவரெலியா மாவட்டத்தில் எமது தொழிற்சங்கத்தினூடாக மாதர் சங்கங்களை மறுசீரமைக்கும் பணியையும் முன்னெடுத்துள்ளோம். சில தோட்டங்களில் மாதர் சங்கங்கள் காணப்படாதபோது அங்கு புதிதாக சங்கங்களை உருவாக்குவதும், செயற்படாமல் பெயரளவில் மாத்திரம் காணப்படும் மாதர் சங்கங்களை செயற்பட வைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் இதனுள் உள்ளடங்கும். இதற்கும் இப்பெண் இணைப்பாளர்கள் முக்கிய பங்கு ஆற்றுகின்றனர்.

இதைவிட கடந்த *(08.03.3014)* சர்வதேச பெண்கள் தினத்தன்று நாம் ஹட்டனில் ஒரு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தோம். இதில் சுமார் இரண்டாயிரம் மலையகப் பெண்கள் பங்கேற்றிருந்தனர். நிகழ்ச்சிகள் யாவும் பெண்களாலேயே ஒழுங்கு செய்யப்பட்டு அவர்களாலேயே முன்னெடுக்கப்பட்டன. இது ஒரு காத்திரமான விடயமாகும். ■

**கமலேஸ்வரி இலட்சுமணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைப் பராமரிக்கும் ஆண்களின் பொறுப்பை ஆண்களிடமிருந்து தட்டிக் கழித்து பெண்களுக்கு வேலை வாய்ப்பிற்கான சுதந்திர உரிமையைப் பறிக்கும் விதமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இடம்பெற்ற பாரபட்சத்தை சுட்டிக்காட்டும் விதமாகப் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை

කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective

Established 1984

## *ஊடக அறிவித்தல்*

**வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களின் பிள்ளைகளைக் கவனித்துப் பார்த்துக் கொள்வதற்காக நீண்டகால வேலைத்திட்டமொன்றில் அரசாங்கம் துரிதமாக ஈடுபடுதல் வேண்டும்.**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் தொழிலின் நிமித்தம் வெளிநாடு செல்கின்ற சகல பெண்களும் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்கள் கட்டாயமாகத் தமது குடும்பப் பின்னணி பற்றிய தகவல்களையும் தமது பிள்ளைகளைக் கவனித்துப் பார்த்துக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் போதியளவு சாட்சிகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஏற்பாடு சம்பந்தமாகப் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அதிக கவனஞ் செலுத்தியுள்ளது. இச்சுற்றறிக்கையானது ஒரு பெண் தொழிலில் ஈடுபடுவதற்காகக் கொண்டுள்ள உரிமையை மீறுவதுடன், ஆண்களைத் தமது குடும்பத்தின் நலனோம்பல் மற்றும் பிள்ளைகளைக் கவனித்துப் பார்த்துக் கொள்ளல் ஆகிய பொறுப்புகளிலிருந்து விடுவிக்கின்றதெனப் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அடையாளம் காண்கின்றது. இலங்கைப் பெண்களில் 48.3 வீதமானோர் வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். 2011ஆம் ஆண்டு மத்திய வங்கி மதிப்பீடு செய்துள்ளதன் பிரகாரம் இலங்கையைச் சேர்ந்த பெண்களில் அதிகமானவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணியாற்றுகின்ற மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து மட்டும் 335,201 மில்லியன் ரூபாயை அனுப்பியுள்ளனர். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கான அறிக்கைகளின் பிரகாரம் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்களுள் 67 வீதம் பேர் 25 இற்கும் 44 இற்கும் இடைப்பட்ட வயதெல்லையைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் திருமணமாகி, குழந்தைகள் உள்ள தாய்மார்களாவர்.

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி நடவடிக்கையின் மூலம் வேலைசெய்யும் பெண்களுக்கு மட்டுமன்றிப் பொதுவாக ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும், பெண்களின் வேலை செய்வதற்கான உரிமையைச் சுருக்கிக் காட்டுவதற்கு அரசாங்கம் சந்தேகமின்றிச் செயற்பட்டுள்ளதென்ற பாதகமான செய்தி வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி சுற்றறிக்கையின் மூலம் ஒட்டுமொத்தக் குடும்பத்தின் நலனோம்பலையும் பொறுப்பினையும் பெண்கள் சுமக்க வேண்டுமென்ற தந்தையை அடிப்படையாகக் கொண்ட ஆண் ஆதிக்க வழக்கம் மீண்டும் சமூகத்தில் வலுவூட்டப்படுவதுடன் அது தெளிவாகவே குடும்பம் தொடர்பான ஆண்களின் வகைப் பொறுப்பையும் புறக்கணித்துள்ளதாகச் சுட்டிக்காட்டலாம்.

மேற்படி சுற்றறிக்கையானது பெண்களுக்கு மட்டும் ஏற்புடைமையாகவிருப்பது உண்மையிலேயே சிக்கலானது. இத்தகைய நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் "குடும்ப அலகு" எனப்படும் எண்ணக்கருவைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்திருக்கக்கூடுமாகவிருந்தாலும் அத்தகைய ஒழுங்குவிதிகள் குறுகிய கால புலம்பெயர் தொழிலாளர்களாக வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைத் தேடிச் செல்கின்ற ஆண்களுக்கு ஏற்புடைமையாகாதிருப்பது உண்மையிலேயே சிக்கலானது.

மேலும், அது பிள்ளைகளைக் கொண்டுள்ள, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைத் தேடிச் செல்லும் தனித் தாய்மார்களுக்கு, குடும்பம் எனப்படுவது தாய் மற்றும் தந்தை கட்டாயமாக உள்ளடங்கியுள்ள ஓர் அம்சமாகும் எனப்படுகின்ற சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுப் புரிந்துணர்வை வழங்குவதன் மூலம் அவர்களது உரிமைகளைத் திறந்த மட்டுப்படுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாக்கியுள்ளது.

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பானது பெண்கள் தொழில்களில் ஈடுபடுவதை வரையறுக்கின்ற மேற்படி தீர்மானம் தொடர்பாக மீண்டும் பரிசீலிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சிடம் மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்ளுகின்றது. அமைச்சானது வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களது குடும்பங்களின் நலனோம்பல் தொடர்பாகக் கரிசினை கொள்ளுமானால் வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள, கைக்குழந்தைகளும் பிள்ளைகளும் உள்ள ஆண்களுக்கும் இத்தகைய நிபந்தனைகளை அறிமுகப்படுத்த வேண்டுமென நாம் பரிந்துரை செய்கின்றோம். அன்னியச் செலாவணியில் 30 வீதமான அளவினை ஈட்டித்தருவது நீண்டகால அடிப்படையில் பிள்ளைகளைக் கவனித்துப் பார்த்துக்கொள்ளும் உதவியாளர்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களேயாகும். 30 வருடங்களாக அரசாங்கத்திற்குப் பணம் வந்துசேரும் முக்கியமான வழியானது தமது பிள்ளைகளின் வாழ்க்கை நிலைமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் வீடொன்றை நிர்மாணித்துக் கொள்ளல் எனும் நோக்கங்களுடன் வெளிநாடு செல்லும் மேற்படி பெண்கள் ஈட்டும் அன்னியச் செலாவணியாகும்.

மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு கூடிய விரைவில் பெண்கள்மீது விதிக்கப்பட்டுள்ள மேற்படி சட்ட ஒழுங்குவிதிகளை நீக்குமாறு பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரி நிற்கின்றது.

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வேலை செய்யும் பெண்கள்

புகைப்படம் : ஷானி ஜெயவர்தன

# புலம்பெயர் தொழிலாளர்களாக இலங்கைப் பெண்கள்

**எமது நாட்டில் பெரும்பாலான பெண்கள் பிரதான முகவரின் கீழ் செயற்படும் துணை முகவர்களின் உதவியுடன் பிரதான முகவர்களை அணுகுவதாலேயே அதிகளவான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இங்கு துணைமுகவர்கள் கிராமப் புறங்களிலுள்ள பெண்களை நம்பகமான கதைகளைக் கூறி தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனர்.**

## அறிமுகம்

புலம்பெயர் தொழிலாளர்கள் எனப்படுபவர்கள் தொழிலுக்காக சொந்த நாட்டிலிருந்து தொழில் வழங்கும் நாடுகளுக்குச் சென்று தொழில் புரிபவர்கள். இவர்களுள் அதிகமானவர்கள் பெண்களாவர். இந்நிலைமை இலங்கைக்கும் விதிவிலக்கல்ல.

இலங்கையர்களில் மொத்தமாக ஒன்பது மில்லியன் புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிகின்றனர். இது நாட்டின் மொத்த தொழிலாளர் படையில் 24% ஆகும். 2012 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தமாக 282 330 பேர் புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும், புலம்பெயர் தொழிலாளர்களாகச் செல்வர்களில் 49 வீதமானோர் பெண்களாகவும், இவர்களுள் 85 வீதமானோர் வீட்டுப் பணிப்பெண்களும் ஆகும்.

இலங்கையிலிருந்து தொழிலுக்காகப் புலம்பெயர்பவர்களுள் 93 வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே செல்கின்றனர். இதிலும் குறிப்பாக சவூதி அரேபியா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவைட், ஜோர்தான், ஓமான், கட்டார் என்ற நாடுகளுக்கே அதிகமானவர்களும் மிகவும் குறைந்தளவிலானோர் சிங்கப்பூர் மற்றும் மலேசியா என்ற நாடுகளுக்கும் செல்கின்றனர்.

இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி 2012 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மூலம் 7.6 US$ பில்லியன் ரூபாவை அந்நியச் செலாவணியாகப் பெற்றுக்கொண்டுள்ளது. இது மொத்த அந்நியச் செலாவணியில் 48% ஆகும்.

**புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறும் செயன்முறை**

புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறும் செயற்பாடு மூன்று நிலைகளின் மூலம் இடம்பெறுகின்றது. அவை:

இலங்கையின் பிரதான முகவர் இடைத் தரகர் வெளிநாட்டு தூதுவராலய முகவர்

பிரதான முகவர் இலங்கையிலிருந்து அனுப்பி வைக்கும் பெண்களை இடைத் தரகர்கள் உரிய நாட்டின் விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்று அவர்களது நாட்டு தூதுவராலய முகவரிடம் ஒப்படைப்பார். அவர் உரிய வீட்டிற்கு அனுப்பிவைப்பார். இது சட்டப்படி செல்பவர்களுக்கான செயன்முறையாகும்.

எமது நாட்டில் பெரும்பாலான பெண்கள் பிரதான முகவரின் கீழ் செயற்படும் துணை முகவர்களின் உதவியுடன் பிரதான முகவர்களை அணுகுவதாலேயே அதிகளவான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இங்கு துணைமுகவர்கள் கிராமப் புறங்களிலுள்ள பெண்களை நம்பகமான கதைகளைக் கூறி தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

## பெண்கள் புலம்பெயர் தொழிலாளர்களாவதற்கான காரணம் வறுமை

இலங்கையில் கிட்டத்தட்ட 75 வீதமான பெண்கள் வறுமையினாலும் மிகுதி 25 வீதமானவர்கள் ஏனைய காரணங்களாலும் புலம்பெயர் தொழிலாளர்களாக மாறுகின்றனர். அனைத்திற்கும் முக்கிய காரணம் வறுமையே ஆகும். வறுமைக்கு பல உப காரணங்கள் உள்ளன. அவற்றுள் கணவனை இழந்த பெண்கள் (குறிப்பாக வடகிழக்கில் நடைபெற்று முடிந்த போரின் விளைவு பல ஆயிரக்கணக்கான கணவனை இழந்த பெண்களை உருவாக்கியுள்ளது), குடும்பச் சுமை, கடன், கணவர் இருந்தும் அவரால் செயற்பட முடியாமை (தீராத நோய்), கணவரால் கைவிடப்படல், கல்வி கற்காதவர்களுக்கான வேலைவாய்ப்பின்மை, வேலைக்கேற்ற ஊதியம் இன்மை போன்றவற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம்.

**எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

1. புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.
2. புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

## புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

### முகவர்களால் ஏமாற்றப்படுதல்

புலம்பெயர் தொழிலாளர்களாக மாறும் பெண்கள் இலங்கையில் வைத்தே முகவர்களால் ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

அதிகமான பெண்கள் கடவுச் சீட்டு (Pass Port) எடுப்பதற்குத் துணை முகவர்களுடன் கொழும்புக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும் சந்தர்ப்பங்களில் சில பெண்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றனர். சில துணை முகவர்கள் தங்களது விடுதிகளில் வைத்து பாலியல் ரீதியாகவும் தவறாகப் பயன்படுத்துவதும், சிலவேளை கொழும்பிலுள்ள வேறு நபர்களுக்கு பாலியலுக்காகக் குறித்த பெண்களை விற்பனை செய்வதும், கர்ப்பத்தடை ஊசி போடுவதும் அதையும் மீறி சில பெண்கள் கர்ப்பமடைவதும் நிகழ்கின்றது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது குறித்த நாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பெண்களாக செல்லும் பெண்களைவிட, அவ்வாறு செல்லாமல் ஏற்கனவே இருந்த குடும்பச் சுமையை இரட்டித்துக் கொண்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு வீடு திரும்பும் பெண்களே அதிகமாக உள்ளனர்.

## புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

### வேலைத் தளம்

- ஊதியம் கிடைக்காமை அல்லது குறைந்தளவு ஊதியம் : சில பெண்களுக்கு நாடு திரும்பும் போது சம்பளத்தை ஒன்றாகத் திரட்டித் தருவதாகக் கூறிவிட்டு, நாடு திரும்பும் போது சம்பளம் முழுவதையும் வழங்காமை.
- உடல் ரீதியான துன்புறுத்தல்கள் : சிறிய தவறிற்கும் அடித்தல், உதைத்தல்.
- பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் : பணிபுரியும் குடும்பத்திலுள்ள ஆண்கள் உடலுறவு கொள்வதற்கு துன்புறுத்துதல், பெண்ணின் பாலியல் உறுப்புக்களை தவறாகப் பயன்படுத்துதல்.
- அளவுக்கதிகமான வேலைப்பழு, ஓய்வு, நித்திரை இன்மை : 24 மணித்தியாலமும் வேலை கொடுத்தல்.
- நோய் ஏற்பட்டாலும் வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம்.
- மருத்துவப் பிரச்சினை
- போதியளவு உணவு கிடைக்காமை
- ஒப்பந்தம் மீறப்படுதல்: ஒரு வீட்டிற்கு வேலை செய்வதற்காக ஒப்பந்தம் செய்து விட்டு கணவரின் ஏனைய மனைவியர்களின் வீட்டிற்கும் வேலை செய்வதற்குப் பணித்தல்.
- குடும்பத்தினருடன் தொடர்பு இன்மை
- வீட்டுப் பிரச்சினை
- தங்குமிடப் பிரச்சினை
- முகவர்களால் பிரச்சினை : குறித்த வீட்டில் துன்புறுத்தல் மற்றும் ஒப்பந்தம் மீறப்படுதல் அல்லது வீட்டுக்காரர்களால் துரத்தியடிக்கப்பட்ட பெண்கள் எமது நாட்டு முகவரிடம் முறையிடும் போது குறித்த பெண்ணின் ஒப்பந்தக் காலம் முடியும் வரை முகவர்கள் வேறு வீடுகளுக்கு மாற்றி மாற்றி விட்டு வேலை செய்விக்க வைத்து ஊதியம் கொடுக்காமல் நாட்டிற்கு திருப்பி அனுப்புதல். சில சந்தர்ப்பங்களில் முகவர்களிடம் முறையிடும் போது முகவர்கள் உடல் மற்றும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல்.
- சில துணை முகவர்கள் குறித்த பெண்களிடம் வெளிநாடு சென்று தனது வங்கிக் கணக்கிற்கு சம்பளத்தை வைப்பிலிடுமாறும் அதை தான் குடும்பத்தினரிடம் ஒப்படைப்பதாகவும் கூறுவதை நம்பி துணை முகவர்களின் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி அவர்களால் ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

### குடும்பம்

- சில பெண்கள் தாம் உழைப்பதாகவும், கணவர் பிள்ளைகளை வளர்க்கட்டும் என்ற பாலியல் சமத்துவத்தின் அடிப்படையில் வேலைக்காகப் புலம்பெயரும் போது, கணவன்மார் பிள்ளைகளைக் கவனிக்காமல் மனைவியின் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தி வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பதும், வேறு திருமணம் செய்வதும், சில தந்தையர்கள் தமது பெண் பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதும் எம்சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.
- சில நேரம் பணிப்பெண்கள் மரணமடைந்துவிட்டால் அவர்களது உடல் விமான நிலையத்திற்கு வரும்போது அதைச் சரியாகக் கவனித்து உரிய நேரத்திற்குள் உறவினர்களிடம் ஒப்படைக்காமை.
- மரணமடைந்தவர்களது குடும்பங்களுக்கு கிடைக்கவேண்டிய நட்ட ஈடு கிடைப்பதற்கு காலதாமதமாதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் பாரபட்சம்

நாட்டிற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதிலும், நாட்டின் அபிவிருத்திக்கும் அதிக பங்களிப்புச் செய்யும் புலம்பெயர் தொழிலாளர்களான பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை அரசு பல சட்ட திட்டங்களை வகுத்திருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் புலம்பெயர் தொழிலாளர்களான பெண்களைப் பாதுகாப்பதிலும் பாரபட்சமாகவே நடந்துகொள்கிறது.

எடுத்துக்காட்டாக, புலம்பெயர் தொழிலாளராகச் சென்று பணிபுரியும் ஆண்கள் கம்பனிகளுக்கு வேலைக்குச் செல்லும் போது ஊதியம் குறைவாகவோ அல்லது முற்றாக வழங்கப்படாமலோ விட்டால் அவர் குறித்த கம்பனிக்கு எதிராக பணிபுரியும் நாட்டிலுள்ள தொழிலாளர் நீதிமன்றத்தில் (Labour Court) வழக்குத் தாக்கல் செய்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தும் அரசு, வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களுக்கு அவ்வாறான நிலை ஏற்படும் போது என்ன செய்யலாம் என்பதில் கவனம் செலுத்தவில்லை.

பெண் புலம்பெயர் தொழிலுக்காகச் சென்றுவிட்டால் அவர்களது பிள்ளைகள் தொடர்பாக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களோ வேறு அரச அதிகாரிகளோ அவர்களைக் கவனிப்பது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை.

ரிசானாவின் சம்பவத்தைத் தொடர்ந்து புலம்பெயர் தொழிலாளர்களான பெண்கள் தொடர்பில் அரசு கொண்டுவந்துள்ள சட்டங்களானவை மேலும் பெண்களை பாரபட்சப்படுத்துவதாகவும், பக்கச்சார்பான நியாயமாகவுமே அமைந்துள்ளது.

அதாவது, புலம்பெயர் தொழிலுக்குச் செல்லும் பெண்களிற்கு 3 வயதிற்குட்பட்ட குழந்தை இருந்தால் அவள் புலம்பெயர்ந்து செல்ல முடியாது என்றும், 5 வயதிற்கு உட்பட்ட குழந்தை இருக்கும் பெண்கள் கணவரின்

**பெண் புலம்பெயர் தொழிலுக்காகச் சென்றுவிட்டால் அவர்களது பிள்ளைகள் தொடர்பாக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களோ வேறு அரச அதிகாரிகளோ அவர்களைக் கவனிப்பது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை.**

எழுத்து மூலமான அனுமதியை நிரூபிக்க வேண்டும் என்ற சட்டங்கள் ஆண்களைப் பாதுகாத்து பெண்களின் மேல் சுமையை அதிகரிக்கச் செய்வதாகவே அமைந்துள்ளது. இந்தச் சட்டங்களை ஏற்பதாயின் ஏன் அரசு 3 அல்லது 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை உடைய தந்தையர்கள் மது போதைகளைப் பாவிக்கக் கூடாது என்ற சட்டத்தையும் கொண்டு வரக்கூடாது?

எனவே, இலங்கையிலிருந்து புலம்பெயரும் பெண்கள் தொடர்ந்தும் பாரபட்சப்படுத்தப்படுவதற்குக் காரணம் என்ன?

ஆனால், தமது சொந்த மொழியை மட்டுமே பேசத் தெரிந்தவர்களாக வேறு மொழி பேசும் நாட்டினுடைய வீட்டிற்குப் பணிபுரிந்து அவர்களது மொழியையும் அனுபவம் மூலம் கற்றுக்கொண்டு, தமது ஒப்பந்தத்திற்கேற்பவும், ஒப்பந்தத்தை மீறிய அளவுக்கதிகமான வேலைகளையும் செய்து, பல பிரச்சினைகளையும் எதிர்கொண்டவர்களாக தமது குடும்ப வறுமைக்காகப் புலம்பெயர்ந்து தொழில் புரியும், தொழில் புரிய இருக்கின்ற எமது பெண்களது தன்னம்பிக்கை வரவேற்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், பெண்கள் புலம்பெயர் தொழில் தொடர்பான தெளிவான அறிவினைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. அந்த வகையில் புலம்பெயர் தொழிலாளர்களான, புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கின்ற பெண்களின் பாதுகாப்பிற்காக அவர்கள் அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள் பின்வருமாறு:

1. பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்: வயதிற்கு வந்த பிள்ளைகள் குறிப்பாக பெண் பிள்ளைகள் தொடர்பாக பாதுகாவலராகக் கருதுபவர்களில் (கணவர் உட்பட) நம்பிக்கையின்மை காணப்பட்டால் மாவட்டத்தின் சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஊடாக சிறுவர் நன்னடத்தை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தால் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஒவ்வொரு மாதமும் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்து அறிக்கையை நீதிமன்றிற்கு சமர்ப்பிப்பர். இச்செயன்முறை மூலம் பிள்ளைகளின் பாதுகாப்பை சட்ட ரீதியாக உறுதி செய்யலாம்.
2. 25 வயதிற்கு மேற்பட்டவர்களே சவூதி அரேபியாவுக்குச் செல்லலாம்.
3. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஏனைய நாடுகளுக்குச் செல்லலாம்.
4. துணை முகவரின் தலையீடின்றி பதிவு செய்யப்பட்ட முகவர் மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பதிவுசெய்யப்பட்ட முகவர் என்பதை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் 0112864101-105 என்ற இலக்கங்களுடன் அல்லது 24 மணித்தியால சேவை 0112879900 - 902 என்ற இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்வதன் மூலம் உறுதிசெய்யலாம்.
5. கொழும்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் புலம்பெயர் தொழிலுக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னரே வெளிநாடு செல்ல வேண்டும்.
6. புலம்பெயர முன்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நடைபெறும் 21 நாள் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
7. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மூலமான தொழில் வாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொண்டால் மட்டுமே நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு தடவை செய்யப்படும் காப்புறுதி இரண்டு வருடங்களுக்கே செல்லுபடியாகும்.
8. வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்னர் சகல ஆணவங்களின் பிரதிகளையும் (கடவுச்சீட்டின் பிரதி, விசா பிரதி, ஒப்பந்தத்தின் பிரதி, வெளிநாட்டில் வேலை செய்யும் நிறுவனம் மற்றும் இலங்கைத் தூதரகத்தின் விலாசம்) குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
9. தவறுகள் ஏற்பட்டால் 24 மணித்தியால சேவைக்கு 0112879900, 0112879901, 0112879902 என்ற இலக்கங்களுக்கு தெரிவிக்கலாம்.
10. வெளிநாட்டு வேலைவாய்ப்பு விபரங்களுக்கு 011 2864107 என்ற இலக்கத்திற்கும்
11. தொழில் முகவரின் சட்ட ரீதியான அங்கீகாரத்தைத் தெரிந்துகொள்ள 011 2864118 என்ற இலக்கத்திற்கும்
12. மேலதிக பிரச்சினைகளுக்கு 1919 என்ற இலக்கத்திற்கும் அழைப்பை ஏற்படுத்தலாம்.
13. மேலதிக தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அண்மையிலுள்ள பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுகலாம்.

பெண்களாகிய நாங்கள் விழிப்பாக இருக்காத வரையில் எங்களுக்கெதிரான உரிமை மீறல்களும், வன்முறைகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும். ■

**எஸ். சுமித்ரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திர வர்த்தக வலயங்களில் கரைந்துசெல்லும் பெண் தொழிலாளர்களின் உழைப்பு

## அறிமுகம்

பல மூன்றாம் உலக நாடுகள் தமது அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும்போது ஓர் உபாய மார்க்கமாக ஏற்றுமதித் தயாரிப்பு வலயங்களைத் தாபித்தன. இலங்கையானது 1970ஆம் தசாப்தத்தில் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்ததுடன், 1977ஆம் ஆண்டளவில் தொழிலற்றோர் எண்ணிக்கை 10,00,000 இற்கும் அதிகமாகவிருந்தது (டாகிந்து, 1997). எனவே, 1978இல் முதலாவது ஏற்றுமதித் தயாரிப்பு வலயம் கட்டுநாயக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நீண்டகால மற்றும் குறுகியகால வரிச்சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமையினாலும், இலாபமான உழைப்பும் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளும், சட்டரீதியாக முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படும் சுற்றுச்சூழலும் அப்போதைய அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையினால் உலகின் பாரிய சில்லறை வர்த்தகக் கம்பனிகள் தமது முதலீடுகளின் பொருட்டு இலங்கைக்கு வரத் தொடங்கின. திறந்த பொருளாதாரக் கொள்கைகள் வெளிவந்ததன் பெறுபேறாக விவசாயத் துறையும் வீழ்ச்சியடைந்தமையினால் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமைந்திருந்த கிராமங்களைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு ஆடைத் தொழில்துறை தொழில் வாய்ப்புகள் மலிந்த இடமாக அமைந்ததுடன் 18 – 35 வயதுக்குட்பட்ட பெரும்பான்மையை இளம் பெண்கள் பிரதிநிதித்துவம் செய்தனர். இவர்கள் க.பொ.த. சாதாரண தரம் 59 வீதமும், க.பொ.த. உயர்தரம் 19 வீதமும் என்ற வகையில் ஊழியப் படையில் இணைந்துள்ளனர் (ALaRm 2005). நாட்டினுள் புலம்பெயர்ந்து தொழில் புரிய நேர்ந்தமையினால் இவர்கள் விடுதிகளில் தங்கவேண்டியேற்பட்டதுடன் அவர்களுக்குப் 'புலப்படாத' செலவுகளையும் மேற்கொள்ள நேரிடுகின்றது. (நாளாந்தச் செலவுகள், கைவிடப்பட்ட சம்பளம் அல்லது அனுகூலங்கள், மனித அபிவிருத்திச் செலவினம், வேலைத்தளத்தில் அல்லது சமுதாயத்தில் நிகழும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு அல்லது வன்முறைகளுக்குக்கூட முகங்கொடுக்கும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புகைப்படங்கள் : ஏஷென்ஜலின் டி. சில்வா

> **தற்போது சுதந்திர வர்த்தக வலயங்களில் சுமார் 30,000 தொழில் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றின் பொருட்டு 16-17 வயதுகளைக் கொண்ட பெண் தொழிலாளர்களுக்கும் தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதன் அடிப்படையில் கட்டுநாயக்க பிரதேசத்தில் தற்போது இனப்பெருக்கச் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தோன்றியுள்ளன.**

பெண்களின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் ஏற்படுகின்ற தாக்கம் என்பன புலப்படாத செலவுகளாகக் கருதப்படுகின்றன) (ALaRm 2005). இவ்வாறு இவர்கள் மையமாக்கப்பட்டமையினால் பிரதேசத்திலுள்ள சமுதாயத்தினரின் பால் விகிதம் முழுமையான மாற்றத்துக்குள்ளாகியமையும், வரையறுக்கப்பட்ட பிரதேசமொன்றில் அதிகளவான மக்கட் பரம்பல் இடம்பெற்றுள்ளமையின் அடிப்படையில் உப கலாசாரங்கள் உருவாகியிருப்பதும் ஒரு விசேட பண்பாகும்.

தற்போது சுதந்திர வர்த்தக வலயங்களில் சுமார் 30,000 தொழில் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றின் பொருட்டு 16–17 வயதுகளைக்கொண்ட பெண் தொழிலாளர்களுக்கும் தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதன் அடிப்படையில் கட்டுநாயக்க பிரதேசத்தில் தற்போது இனப்பெருக்கச் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

30 வருட காலம் யுத்தச் சூழ்நிலைக்கு முகங்கொடுத்த வட, கிழக்குத் தமிழ்ப் பெண்களும் சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில்புரிவதற்கு வருகைதந்திருப்பது ஒரு விசேட அம்சம் என்பதுடன் கலாசார, பொருளாதார, சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும் அவர்களுக்கு நேர்ந்துள்ளது. சில நிறுவனங்கள் இவர்களது சம்பளப் பட்டியலைக்கூடத் தமிழ் மொழியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்காதிருப்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

துணிகள், ஆடைகள், இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள், தயாரிக்கப்பட்ட உலோகங்கள், போக்குவரத்து உபகரணங்கள், பாதணிகள், அச்சு மற்றும் கடதாசி உற்பத்திகள், இரசாயனப்பொருள் உற்பத்திகள், தோல் பொருள் உற்பத்திகள் போன்றவை சுதந்திர வர்த்தக வலயங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயங்களில் ஆடைத் தொழில் துறைக்கு அதிக பங்களிப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவை தரத்திலும் உயர் மட்டத்தைக் கொண்டுள்ளன. இதன்மூலம் இலங்கைப் பொருளாதாரத்துக்கு வருடாந்தம் கணிசமான அளவு அன்னியச் செலாவணி கிடைப்பதுடன் 2012ஆம் ஆண்டளவில் அது 40.8 வீதமுமாக (3911



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர் மில்லியன்) அமைந்திருந்தது - இலங்கை மத்திய வங்கி அறிக்கை-2012. கட்டுநாயக்கா, பியகம, கொக்கல ஆகிய பிரதான சுதந்திர வர்த்தக வலயங்களிலேயே அதிகளவான கைத்தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான கைத்தொழிற் பேட்டைகளிலும் சில வெளி மாவட்டங்களிலும் கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 270 – 300 இற்கு இடைப்பட்டதாகவுள்ளது.

### சம்பள நிலைமைகள்

இலங்கையின் ஆகக்குறைந்த சம்பளமானது சம்பளக் கட்டுப்பாட்டுச் சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உரிய சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற இணக்கப்பாடுகளுக்கமைவாகத் தீர்மானிக்கப்படுகின்றது (இதற்கு மேலதிகமாகச் சில தனித்துவமான சந்தர்ப்பங்களான அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் அல்லது வரவு செலவுத் திட்டச் சலுகைக் கொடுப்பனவுகள் போன்ற நடவடிக்கைகளின் மூலம் சம்பளம் அதிகரிக்கப்படலாம்).

இதற்கு மேலதிகமாக, முதலீட்டுச் சபையின் கீழுள்ள கைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு வருடாந்தம் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். அதன்படி, 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டச் சலுகைக் கொடுப்பனவு உள்ளடங்கலாக ஆடைத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளியின் ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பளம் 9,625/- ரூபாய் ஆகும். இதன்மூலம் நாளொன்றுக்கு 08 மணித்தியாலச் சேவைக்காலப் பகுதியில் 30 நாட்கள் வாழ்க்கையைக் கொண்டுநடாத்துவதற்காக ஒரு தொழிலாளி நாளொன்றுக்கு 363 ரூபாய் தொடக்கம் 300 ரூபாய்க்கு இடைப்பட்ட தொகையை ஈட்டிக்கொள்ளலாமென்பது வெளிப்படுகின்றது. இது யூ. எஸ் டொலர் 2.39 – 2.72 இற்கு இடைப்பட்ட அளவாகும். இருப்பினும், அரச துறை ஊழியரொருவரது சம்பளத்துடன் ஒப்பிடுகையில் இது மிகக் குறைவானதாகும். அவர்கள் வரவு செலவுத் திட்டச் சலுகைக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உள்ளடங்கலாக 20,839/- ரூபாய் சம்பளத்துக்கு உரிமை கோருகின்றனர்.

### வாழ்க்கைச் செலவு

இலங்கையின் குடிசன மற்றும் தொகை மதிப்புத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி எண் 280 ஆகும். அதன் ஓர் அலகின் பெறுமதியை 180ஆல் பெருக்கும்போது நான்கு பேரைக் கொண்ட குடும்பமொன்று வாழ்வதற்கு 49,240/- ரூபாய் செலவாகின்றதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### குறைந்த சம்பளத்தின் விளைவாக ஏற்புடும் மேலதிக சேவைக் காலம்

தமக்குக் கிடைக்கின்ற சம்பளத்தில் 60 வீதத்திற்கும் அதிகமான அளவை அன்றாடச் செலவுகளுக்காகச் செலவு செய்ய வேண்டியிருப்பதால் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் கட்டாயமாக மேலதிக நேர வேலைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. அது நாளொன்றுக்குத் தொடர்ச்சியாக 12 – 16 மணித்தியாலங்களாக இருக்கலாம். இதேவேளை, வார இறுதி விடுமுறை நாட்களும் வேலை நாட்களாக மாற்றமடைந்திருப்பதனால் ஓய்வுநேரம் இழக்கப்படுகின்றது. இருப்பினும் ஆகக்குறைந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் கூடுதலான மணித்தியாலங்கள் வேலைசெய்ய வேண்டுமென்பதாலும், அடிப்படைச் சம்பளம் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்படுவதனாலும் மேலதிக நேரம், வருகைக் கொடுப்பனவுகள், இலக்குக் கொடுப்பனவுகள், சேவை ஊக்குவிப்புகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றினால் நிறைந்த சம்பளத்துக்கு உரிமைகோர நேர்ந்துள்ளது.

இவ்வாறு ஓய்வின்றி 30 நாட்களும் வேலை செய்தால்தான் அவர்களால் ஓரளவு தமது ஆகக்குறைந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடிகின்றது. மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர வேலை கிடைக்காத சந்தர்ப்பங்களில் தமது சேவைக்காலம், நியதிச் சட்ட உரித்துகளுக்கான பாதுகாப்பு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளாமல் தொழிலாளர்கள் வேறு நிறுவனங்களை நோக்கிச் செல்வதற்கு முயற்சிப்பதற்கான காரணம் தமது அடிப்படைச் சம்பளம் போதாமையேயாகும்.

**வேலைசெய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை சுகாதாரத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கம் - சர்வதேச தொழிலாளர் அமைப்பு - 2003**

- வாரமொன்றுக்கு 48 மணித்தியாலங்களை விஞ்சி நிதமும் வேலை செய்வதானது கணிசமான அளவில் தொழில்சார் களைப்புத் தன்மைக்குப் பங்களிப்பதுடன், தொழில் மீதான திருப்தியைக் குறைத்து ஏனைய அழுத்தங்களுக்கான தாக்கத்தினை அதிகரிக்கின்றது. அதன்படி, உளரீதியான சிக்கல்கள் பற்றிய இடர்நேர்வுத் தன்மையையும் கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்கின்றது.

- வாரமொன்றுக்கு 60 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக இடையறாது வேலைசெய்தல் மற்றும் சில சமயங்களில் வாரமொன்றுக்கு 50 மணித்தியாலங்களுக்கு அதிகமாக வேலை செய்வதனால் இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதெனத் தெரியவருகின்றது.

- தனிப்பட்ட மனோபாவங்களும் ஊக்குவிப்புகளும் வேலை செய்வதன் மூலம் ஏற்படுகின்ற களைப்பினைப் போக்குவதற்குக் காரணமாக அமைவதாகக் காணப்பட்டாலும் அவையோ அல்லது உளவியல் ரீதியான பதிற்செயற்பாடுகளின் மாற்றங்களோ நீண்டகால சுகாதார இடர்நேர்வுகளைக் குறைக்கின்றனவா என்பது இதுவரை போதுமான அளவில் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.

- சுகாதாரத்திற்குப் பாதகமான உடல் ரீதியான நோய் அறிகுறிகள், புகைத்தல் அதிகரிப்பு, உணவு விருப்பின்மை மற்றும் முறையாக உணவு உட்கொள்ளாமை போன்ற நடத்தை ரீதியான சிக்கல்கள் ஏற்படும் போக்கு நீண்ட மணித்தியாலங்கள் வேலைசெய்வதன் மூலம் ஏற்படுகின்றதென்பது தெரியவந்துள்ளது.

- குறிப்பாக வாரமொன்றுக்கு 50 மணித்தியாலங்களை விஞ்சி வேலை செய்யவேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது தமது குடும்பத் தொடர்புகள்மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதெனச் சில ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

- பல மணித்தியாலங்கள் இடையறாது வேலை செய்வதால் காலத்திற்கு முந்திய பிள்ளைப் பேறுகள் மற்றும் தசைகளிலும் எலும்புகளிலும் நோய்கள் என்பன அதிகமாக இடம்பெறுவதற்கான வரையறுக்கப்பட்ட காரணிகள் கிடைத்துள்ளன.

- வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் வேலைத்தளத்தில் ஏனைய உடல் ரீதியான மற்றும் இரசாயன பதார்த்தங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புகளுக்கு அதிகமாக உள்ளாவதால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக உரிய முறையில் ஆய்வுகள் இடம்பெறவில்லை என்பதுடன், அது தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொள்வதும் அவசியமாகும்.

**ஊழியர்களின் சுகாதாரமும் போஷாக்கும்**

வளர்ந்த நபரொருவருக்கு நாளொன்றுக்குச் சுமார் 3000 கலோரிகள் தேவைப்பட்டாலும் சில காரணங்களின் அடிப்படையில் இத்துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அப்போஷாக்குத் தன்மைகள் கிடைப்பதில்லை. ஈட்டப்படும் சம்பளம் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருப்பதால் போஷாக்குமிகு உணவு வேளையைப் பெற்றுக்கொள்ள முடியாமை, அதிக நேரம் தொழிற்சாலையினுள் தங்கியிருக்க நேரிடுவதால் உணவு வகைகளைத் தயாரித்துக் கொள்வதற்கு வாய்ப்பின்மை போன்ற காரணங்களின் அடிப்படையில் அவர்கள் போஷாக்கற்ற உணவு முறைகளுக்குப் பழக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகைப்படங்கள் : ஏவென்குலின் டி சில்வா

பெண் தொழிலாளர்கள் தற்போதுகூட சமூகப் பாதுகாப்பு, சமுதாயச் சுகாதாரம், குடிநீர் உள்ளிட்ட நீர்ப் பிரச்சினைகள், போக்குவரத்து வசதிகள், தரப்படுத்தப்பட்ட தங்குமிட வசதிகள் போன்ற பல்வேறுபட்ட பொதுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

குறிப்பாகச் சுதந்திர வர்த்தக வலயங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் போஷாக்கு மட்டம் வீழ்ச்சியடைவதால் இரத்தச் சோகை, போஷாக்கின்மை போன்ற சுகாதாரப் பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. இந்த நிலைமைகளின் அடிப்படையில், எதிர்காலத் தாய்மார் என்ற வகையில், அவர்களுக்கும் அவர்களின் மூலம் உருவாகும் பரம்பரைக்கும் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகலாம். 2009ஆம் ஆண்டு தொழில் திணைக்களத்தினால் கைத்தொழில் பாதுகாப்புப் பற்றிய கருத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்போது, கட்டுநாயக்கா வர்த்தக வலயத்தைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களுள் 62 வீதமானோர் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

### தொழில்சார் சுகாதாரம்

தற்போது அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களோ தொழில்கொள்வோரோ தொழில்சார் சுகாதாரத்தின்மீது அதிக கவனம் செலுத்தவில்லை. தொழிலாளர்கள் ஒரே நிலையில் அதிக நேரம் தொழிலில் ஈடுபட்டிருத்தல், அதிக உழைப்பினை ஈடுபடுத்தி வேலை செய்வதால் செலவாகும் சக்திக்கு நிகராக உடலுக்குச் சக்தி கிடைக்காமை, மின்னொளியின்கீழ் பணியாற்றுதல், புழுதி அல்லது துணிகளிலிருந்து வெளியேறும் நுண் துணிக்கைகள் என்பவற்றைச் சுவாசித்தல் என்பவற்றினால் அவர்கள் குறுகியகால அல்லது நீண்டகால தொழில்சார் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். இதுவரை அது சம்பந்தமாக விஞ்ஞான ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

### வாழ்க்கை முறை

சுதந்திர வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் 35 வருடங்கள் கடந்திருப்பினும், ஊழியர்கள் வாழ்கின்ற சுற்றுச்சூழலில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக முதலீட்டுச் சபையினதோ அரசாங்கத்தினதோ அல்லது சம்பந்தப்பட்ட நிர்வாக நிறுவனங்களினதோ போதிய கவனம் இதுவரை செலுத்தப்படவில்லை. முதலீட்டாளர்களுக்குத் தமது கைத்தொழில்களைப் பேணிச்செல்வதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மட்டுமே இந்நிறுவனங்கள் இதுவரை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

பெண் தொழிலாளர்கள் தற்போதுகூட சமூகப் பாதுகாப்பு, சமுதாயச் சுகாதாரம், குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட நீர்ப் பிரச்சினைகள், போக்குவரத்து வசதிகள், தரப்படுத்தப்பட்ட தங்குமிட வசதிகள் போன்ற பல்வேறுபட்ட பொதுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

புலம்பெயர் ஊழியர்கள் என்பதால் தங்கியுள்ள பிரதேசத்தில் இவர்களுக்கு வாக்குரிமை இல்லாதமையின் காரணமாக, அனர்த்த நிலைமைகளின்போதுகூடப் பிரதேச அரசியல்வாதிகளின் கவனம் இந்த ஊழியர்கள்மீது செலுத்தப்படுவதில்லை.

### தொழிலுக்கான சமூக வரவேற்பு

வர்த்தக வலயங்களில் பணியாற்றுகின்ற பெண் தொழிலாளர்களுக்கு உரிய சமூக நன்மதிப்பு கிடைக்கப்பெறாமையின் காரணமாக அவர்கள் வேலைத்தளத்தில், பெருந்தெருக்களில், பொது இடங்களில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக நேரிடுகின்றது. இந்தப் பெண் தொழிலாளர்களின் துயர நிலைமையைச் சாதகமாக்கிக்கொண்டு பயன்பெறுபவர்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. சமூகப் பாதுகாப்பு, காதல், திருமணம் என்பவை தொடர்பாக வாக்குறுதியளித்து ஏற்படுத்திக் கொள்ளப்படும் போலியான தொடர்புகளின் பெறுபேறு சட்டரீதியற்ற கருக்கலைப்பு என்பதுடன், அதன் விளைவாக உயிரிழப்புகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களுமுள்ளன.

### ஒழுங்கமைவதற்கான சுதந்திரமும் கூட்டாகப் பேரம்பேசுவதற்கான உரிமையும்

ஊழியர்களுக்குத் தொழிற்சங்கமொன்றை அமைத்துக்கொள்ள முடியுமானால், அதனூடாகப் பேரம்பேசித் தமது சம்பளங்களையும் ஏனைய உரிமைகளையும் உறுதிப்படுத்திக்கொண்டு தமது வாழ்க்கையையும் தொழிலின் நன்மதிப்பையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். இலங்கை அரசியலமைப்பு, 1935ஆம் ஆண்டின் தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம், கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 1999இன் 56ஆம் இலக்கத் திருத்தங்கள் என்பவற்றின் மூலம் ஒழுங்கமைதல் பற்றிய சட்டரீதியான சூழமைவு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உடன்பாட்டு இலக்கம் 87 மற்றும் 98 ஒழுங்கமைவதற்கான உரிமை மற்றும் கூட்டாகப் பேரம்பேசுதல் சட்டவாக்கங்கள் இலங்கை அரசினால் ஒப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் ஆடைத் தொழிற்சாலைகள் பல்வேறுபட்ட ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றன. எனவே, அவர்களது நன்னடத்தை நெறிகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கட்டுப்பட்டிருப்பினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வாழ்வதற்குப் போதுமான சம்பளம், ஒழுங்கமைவதற்கான சுதந்திரம் என்பவை உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாத தன்மை காணப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த GSP+ வர்த்தகச் சலுகை இழக்கப்பட்டமைக்கு இத்தகைய அடிப்படைத் தொழில் உரிமைகள் மீறப்பட்டமையும் ஒரு காரணமாகும். அமெரிக்க GSP வரிச் சலுகை தொடர்பாக மீண்டும் ஆராய்ந்து பார்க்கும்போது இவ்விடயம் தொடர்பாக அவர்களது தீவிர கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

### வாழ்வதற்குப் போதுமான சம்பளம்

ஆடைத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்கள் இச்சேவையினுள் பல்வேறுபட்ட புலப்படாத செலவுகளைச் செய்கின்றனர். இவ்வனைத்தையும் கருத்திற்கொண்டு, துறைக்குத் துல்லியமான 8 மணித்தியால சேவைக் காலத்திற்காக வாழ்வதற்குப் போதுமான சம்பளமாக 12,504.23 ரூபாய் 2005ஆம் ஆண்டு ALaRm மேற்கொண்ட ஆய்வின்போது முன்வைக்கப்பட்டது. இப்பெறுமதியானது 2013ஆம் ஆண்டின் இறுதியில் வாழ்க்கைச் செலவுச் சுட்டியுடன் சீர்செய்யப்பட்ட பின்னர் சாதாரணமாக 27,940 ரூபாயாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிய உழைப்பாளர் படையின் தன்மை யாது?

கடந்த சில தசாப்தங்களில் உலக ஆடைத் தொழிற்துறையில் உற்பத்திகள் வடக்கிலிருந்து தெற்கு வரை பயணித்ததன் பின்னர் ஆடை உற்பத்தியின் உலகளாவிய வழங்கலினுள் ஆசிய வலயமானது தற்போது தனிச்சிறப்பான இடமாக மாறியுள்ளது. உலக ஆடை உற்பத்தியில் 60 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பு இலங்கை, சீனா, வியட்நாம், பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளால் வழங்கப்படுகின்றது. ஆசியா தனிச்சிறப்பான வலயமாக மாறுவதற்குக் காரணம் அதன் விசேடமான காரணியாகிய உழைப்பாளர் படையின் தனித்துவமான நிலைமைகளாகும்.

மேற்படி ஊழியர்களது உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற ஆடைகள் வழங்கல் செயன்முறையினுள் ஆயிரக்கணக்கான மடங்கு பெறுமதி சேர்ந்து அதிக விலைகளுக்கு விற்பனையாகின்றன. அதன் மூலம் உற்பத்தியாளர்கள், வணிகக்குறி உரிமையாளர்கள், பாரியளவு பல்தேசியக் கம்பனிகள் போன்றவை அதிக இலாப மீட்டுகின்றன. அதிலொரு நியாயமான பகுதியேனும் ஊழியர்களின் உழைப்புச் சார்பாகச் செலுத்தப்படுவதில்லை. ஆசிய வலயம் முழுவதிலும் ஊழியர்களுக்குத் தமது உழைப்புச் சார்பாகக் கிடைப்பது உற்பத்தியொன்றுக்கான பெறுமதியில் 1 வீதத்திற்கும் – 3 வீதத்திற்கும் இடைப்பட்ட அளவாகும். (Women Working Worldwiide, 2004 <www.education pack_Garment workers>.)

ஆடைகளுக்கான உற்பத்திச் செலவினம் கப்பல்துறை வரை சுமார் 24 வீதம் எடுப்பதுடன் (ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளடங்கலாக) அவர்களது பகுதியாக 75 வீதம் ஒதுக்கப்படுகின்றது.

இத்துறையில் கொள்வனவாளர்களும் கம்பனிகளும் அதிக இலாபம் ஈட்டிக்கொள்வதுடன் ஆடை உற்பத்தி வழங்கல் செயன்முறையின் இறுதியிலுள்ளதான பிரதான பணியை நிறைவேற்றுகின்ற ஊழியர்களுக்கு அதன் உரிய அனுகூலங்கள் சென்றடையவில்லையென்பது 'ஏஷியன் போலோ வேஜ்' அமைப்பினால் 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பெறுபேறுகள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

- உலக மக்கள் தொகையின் அரைவாசிக்கும் அதிகமானவர்களும் உலகிலுள்ள ஏழைகளில் பெரும்பாலானவர்களும் ஆசியாவில் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான வறுமைக் கோட்டின் கீழ்மட்டத்தில் வருமானம் பெறுகின்ற ஏழைகளாவர். இச்சூழமைவில் மிகக்குறைந்த சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகள்மீது தொழிலாளர்களைச் சேவையில் ஈடுபடுத்த முடிந்துள்ளது.
- 15 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதுடைய செயற்றிறன்மிகு ஊழியர்கள் உழைப்பாளர் படையின் பெரும்பான்மைப் பகுதியாக இருப்பதுடன், அதில் இளம் பெண்களின் அளவு சுமார் 80 வீதம் ஆகும். இவர்களில் அதிகமானோர் புலம்பெயர் பெண் தொழிலாளர்களாவர். (ஏஷியன் போலோ வேஜ், 2006)

இலங்கைப் பொருளாதார வளத்திற்குப் பெரும் பணியை நிறைவேற்றி நாட்டுக்குத் தேவையான அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஆடைத் தொழிற்துறை ஊழியர்கள் இத்தகைய பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். உலகளாவிய ஆடைத் தொழிற்துறையில் காணப்படுகின்ற இடையறாத போட்டித்தன்மை, பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகள், நாட்டில் இடம்பெறுகின்ற மீளமைப்புச் செயற்பாடுகளின் பெறுபேறுகள் என்பவற்றின் காரணமாக மேற்படி ஊழியர்களின் சேவை நிபந்தனைகளும் கிடைக்கப்பெறும் அனுகூலங்களும் மேற்கொண்டும் சவாலுக்குட்பட்டு வருகின்றன. ■

**சமிலா துஷாரி**

உசாத்துணை நூல்கள்

1. இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயங்கள் பற்றிய ஒரு விசாரணை - டாபிந்து, 1997
2. இலங்கை ஆடைத் தொழிற்துறை ஊழியர்களுக்கான துறைக்குத் தனித்துவமான வாழ்க்கைச் சம்பளம் - பிரசன்ன, ஆர்.பீ.ஐ.ஆர்., கௌதமன், பீ.பி. ___ 2005
3. தேசிய தொழிலாளர் அமைப்பு, 2003
4. ஆசியாவுக்குப் பொதுவான சம்பள எண்ணக்கரு, 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த ஊடகவியலாளர்கள்

## மேன்மையான ஊடகவியல்
## விருது விழா 2013



சீதா ரஞ்சனி

தில்ருக்ஷி ஹந்துன்னெத்தி

கெரோல் ரோஹினி அலோசியஸ்

ஹர்ஷா மங்கலா சுகததாச

நிர்மலா கன்னங்கரா

துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை

லக்னா தரிந்து பரணமான்ன

தரீஷா பெஸ்ரியன்

மந்தனா இஸ்மாயில் அபேவிக்கிரம

ஸ்மெரிற் டானியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த ஊடகவியலாளர்கள்...

இருள் நிறைந்த இரவினை ஒளியூட்டுவதற்கு புவியிலுள்ள எமக்கு நிலவை விட்டால் வேறு எது உள்ளது? ஓர் நிலா அல்ல, நிலாக்களின் கூட்டமே இரவில் காய்ந்து வருமானால் - இரவை ஒளியூட்டுமானால் - எவ்வளவு புதுமை! எவ்வளவு ஆனந்தம்! பரவசத்திற்கான ஒரு விடயமல்லவா. அத்தகைய நிகழ்வாக பெண் பத்திரிகையாளர்கள் விருது வழங்கும் இரவொன்றைப் பரவசப்படுத்துவதை நாம் கண்டோம்.

கடந்த ஆடி 30ஆம் திகதி இரவு கல்கிசை ஹோட்டல் வளாகத்தில் ஒன்று கூடிய பெண்களது திறமை விருது வழங்களின் போது வெளிப்பட்டது. 1999ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டுப், பின்னர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்ட, "வெகுசன ஊடக விழா" 14வது தடவையாகவும் மேற்குறித்த தினத்தில் நடத்தப்பட்டது. தற்போது இலங்கையில் பிரதான அச்சு ஊடக விருது வழங்கும் விழாவாக அமைந்திருக்கின்ற "வெகுசன ஊடக விருது வழங்கும் விழா" மூலம் பல்வேறுபட்ட தொனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையிடலுக்காகச் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இச்சாதனையாளர்களுடன் ஒன்றிணையக்கூடிய அளவுக்கு ஆற்றல்களினாலும் தொழில்சார் திறமையினாலும் பூரணத்துவம்பெற்ற பெண் பத்திரிகையாளர்கள் கரண்டி, தொட்டில் என்பவற்றினால் மட்டுமல்ல, பேனாவாலும் புத்திசாதுரியத்தினாலும் பெண்களால் பயணிக்கக்கூடிய தூரம் பற்றிய உண்மையினைக் கண்ணெதிரிலேயே நிரூபித்துக் காட்டினார்கள். இம்முறை வெகுசன ஊடக விருது வழங்கும் விழாவில் கௌரவிக்கப்பட்ட பெண் ஊடகவியலாளர்களில் பெரும்பான்மையினர் இளவயதுப் பெண்களாகவிருப்பது தனிச்சிறப்பாகும். சகல விதமான தடைகளையும் சவால்களையும் கடந்து இவர்கள் நிறைவேற்றும் பணியினை மதிப்பிடுவது அவர்களுக்கான ஊக்குவிப்பாகவும் அமையும்.

குறிப்பாகப் புலனாய்வு அறிக்கையிடல், சுற்றாடல்சார் அறிக்கையிடல், விசேட நிலைமைகளின் கீழான அறிக்கையிடல், பத்தியாக்கம், சிறப்புக் கட்டுரையாக்கம் ஆகிய தொனிப்பொருள்களின் கீழ் கௌரவிக்கப்படவென இம்முறை நடத்தப்பட்ட வெகுசன ஊடக விருது வழங்கும் விழாவில் பத்திரிகைத் துறையைச் சேர்ந்த பெண் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இவர்களைத் தவிர மேர்வின் த சில்வா வருடத்திற்கான வெகுசன ஊடகவியலாளர், டென்சில் பீரிஸ் வருடத்திற்கான இளம் ஊடகவியலாளர், ஊடக சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்பவற்றுக்காகப் பணியாற்றும் ஊடகவியலாளர் ஆகிய விருதுகளை வென்றெடுக்க இம்முறை பெண் ஊடகவியலாளர்கள் சாதுரியம் பெற்றிருந்தனர். ஊடக வாழ்வில் ஒரு தடவை மட்டும் வழங்கப்படுகின்ற தங்க விருதினைப் பெற்றுக்கொண்ட 5 சாதனையாளர்களுக்கு மத்தியில் ஓர் பெண் ஊடகவியலாளரும் இணைந்திருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெரொல் ரோஹினி அலோசியஸ்

* ஊடக வாழ்வில் பெறுகின்ற தங்க விருது

1969ஆம் ஆண்டு ரோஹினி அலோசியஸ் தமது தொழில் வாழ்க்கையைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகத் தகைமையைப் பெற்றுக்கொண்டு ஆரம்பித்தார். லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "ஈவினிங் ஒப்சேர்வர்", மற்றும் "சன்டே ஒப்சேர்வர்" பத்திரிகைகளில் மகளிர் பக்கத்தின் உதவிப் பதிப்பாசிரியராகவும், சிறுவர் மற்றும் சுகாதாரம் எனப்படும் பக்கங்களுக்கான பதிப்பாசிரியராகவும் பணியாற்றிய அவர், பின்னர் மேற்படி இரு பத்திரிகைகளினதும் சிறப்புக் கட்டுரை ஆசிரியர் மற்றும் பிரதி ஆசிரியர் பதவிகளையும் வகித்தார். பிற்காலத்தில் "த நேஷன்" செய்தித்தாளுடன் இணைந்து கொண்ட அவர், மீண்டும் "சன்டே ஒப்சேர்வர்" உடன் இணைந்து கொண்டார். மிச்சிகன் பல்கலைக்கழகம் உள்ளடங்கலாகச் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் பங்கேற்புமுறைப் பயிற்சி அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கெரொலிற்கு முடிந்தது. சுகாதாரம் பற்றிய தகவல்களை அறிக்கையிட்டதற்கான உள்நாட்டு விருதுகளைப் பெற்றுக்கொண்ட அவர், தமது ஊடகத் தொழிலில் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை சார்பாக மேற்கொண்ட பணியினைப் பாராட்டும் வகையில் இவ்வாறு தங்க விருதுக்கும் கௌரவத்திற்கும் உரித்தாக்கப்பட்டார். இம்முறை தங்க விருது பெற்ற சாதனையாளர்கள் ஐவரில் ஒரேயொரு பெண் ஊடகவியலாளராக இவர் உள்வாங்கப்பட்டிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

## சீதா ரஞ்சனி

* சேபால குணசேன இலங்கையின் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் சார்பாக வழங்கப்படும் விருது

இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் ரஜரட்ட சேவையில் 1979ஆம் ஆண்டு இணைந்ததன் மூலம் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த சீதா ரஞ்சனி, 1986ஆம் ஆண்டளவில் அச்சு ஊடகத்துடன் இணைந்து மகளிர் மற்றும் கலாசார அறிக்கையிடலுக்காகப் பங்களிப்பு நல்கினார். கவிஞர், எழுத்தாளர், ஆய்வாளர் என ஒருதுறைக்கு மட்டும் தன்னை வரையறுத்துக் கொள்ளாத ஊடகப் பயன்பாட்டில் ஈடுபட்ட அவர், இலக்கியம், சமாதானம், மகளிர் மற்றும் சமூக நிகழ்வுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சுமார் 15 பிரகடனங்களை அச்சு வடிவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் முன்னோடிச் செயற்பாட்டாளராகப் பணியாற்றிய சீதா ரஞ்சனி பல சந்தர்ப்பங்களில் அதன் அழைப்பாளராகவும் செயலாளராகவும் பணியாற்றியதோடு, தற்போது அதன் நிறைவேற்றுக்குழு அங்கத்தவராகவும் பணியாற்றி வருகின்றார். தொழில்சார் பத்திரிகையாளர்களின் சங்கத்தினதும் தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர்கள் சங்கத்தினதும் தேசிய அமைப்பாளர் அவராவார். இவர் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம், இலங்கை இதழியல் கல்லூரி, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளருமாவார். ஊடகச் சுதந்திரம், மனித உரிமைகள், பால்நிலை மற்றும் மகளிர் உரிமைகள் என்பவற்றுக்கான போராட்டங்களில் முன்னின்று செயற்பட்ட சீதா ரஞ்சனி அதற்காகத் தமது நேரம், உழைப்பு, தனிப்பட்ட வாழ்க்கை என்பவற்றை அர்ப்பணித்தார். ஜனநாயகச் சூழலில் சுதந்திர ஊடகக் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்ட ஊடகப் பயன்பாட்டின் மூலமான சேவைக்காகவும் சுதந்திர ஊடக இயக்கத்தின் மூத்த செயற்பாட்டாளராகவும் அவரைக் கௌரவித்து விருது வழங்குதல் இம்முறை வெகுசன ஊடக விருது வழங்கல் விழாவில் இடம்பெற்றது. 2004ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வெகுசன ஊடக விருது வழங்கும் விழாவில் சமூக அபிவிருத்திக்கான அறிக்கையிடலுக்காக வழங்கப்படும் விருதினையும் சீதா ரஞ்சனி தன்வசமாக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்ருக்ஷி ஹந்துன்னெத்தி

**சிரேஷ்ட பிரதி ஆசிரியர், சிலோன் ருடே**

* மேர்வின் த சில்வா வருடத்திற்கான ஊடகவியலாளர்
* பேராசிரியர் கே. கைலாசபதி, விசேட நிலைமைகளின் கீழான அறிக்கையிடலுக்கான இணைவிருது

"சன்டே லீடர்" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க அவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், அதாவது 2005 தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் புலனாய்வுக் கட்டுரை ஆசிரியராக லீடர் வெளியீடுகளுடன் இணைந்திருந்த தில்ருக்ஷி ஹந்துன்னெத்தி அரசியல் பத்தியாக்கத்திலும் ஈடுபட்டு வருகின்றார். 2010ஆம் ஆண்டு ட்ரான்ஸ்பேரன்சி சர்வதேச நிறுவனத்தில் இலங்கையின் சட்டப் பணிப்பாளராகப் பணியாற்றிய அவர், ஒரு சட்டத்தரணியாவார். மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பாகச் சர்வதேச கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள அவர், சர்வதேச சட்டம், மோதல் சூழல்கள், கலாசாரம், வரலாறு, பால்நிலை பற்றிய அறிக்கையிடலிலும் ஈடுபடுகின்றார்.

சுமார் 10 வருடங்களாக ஊடகத்துடன் இணைந்துள்ள தில்ருக்ஷி புதிய ஊடகம், ஆய்வுகள், ஆக்கபூர்வமான கட்டுரை, மக்கள் தொடர்புகள், இணையத்தள ஊடகப் பயன்பாடு, நிகழ்ச்சித் தயாரிப்பு ஆகிய துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

## ஹர்ஷா மங்கலா சுகததாச

**ஞாயிறு லக்பிம**

* வருடத்திற்கான புலனாய்வு அறிக்கையிடல் விருது

கம்பஹா யசோதரா மகளிர் கல்லூரியில் பாடசாலைக் கல்வியைப் பயின்ற பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பயில்வதற்குத் தகைமை பெற்ற ஹர்ஷா, தமது ஊடகத் தொழிலின் அரிச்சுவடியை இளமாணியாக இருக்கும்போது சுதந்திர ஊடகவியலாளராகச் சேவையில் இணைந்து கொண்டே பயிலத் தொடங்கினார். 1992–1993 காலப்பகுதியில் பந்துல பத்மகுமார, திலக் சேனசிங்க என்போரின்கீழ் "ரெஜின" பத்திரிகையுடன் இணைந்தமை அதன் ஆரம்பமாகும். இதற்கிடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எழுத்தாண்மை மற்றும் தொடர்பாடல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவைப் பயின்று அவர் தமது வெகுசனத் தொடர்பாடல் அறிவினை இற்றைப்படுத்திக் கொண்டார். அதேவேளை அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற "தெசத்திய" எனப்படும் சஞ்சிகைக்குக் கட்டுரைகளை எழுதவும் தூண்டப்பட்டார். பிற்காலத்தில் "சுமத்தி" நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற "தினபதா லக்பிம" பத்திரிகையின் "மாத்ய கவுளுவ"வுடன் இணைந்து ஊடகவியலாளராக அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட ஹர்ஷா, பல்வேறுபட்ட தொனிப்பொருள்களின்கீழ் சிறப்புக் கட்டுரையாக்கத்திலும் ஈடுபட்டார். தீபா மேத்தா எனப்படும் சர்வதேச திரைப்பட இயக்குநரின் படைப்பொன்றாகிய "வோட்டர்" திரைப்படத்தில் நடித்த சரளா காரியவசம் எனப்படும் இலங்கையின் குழந்தை நட்சத்திரத்தை முதன்முதலில் ஊடகத்திற்கு அறிமுகஞ் செய்து எழுதிய கட்டுரை அவரது ஊடக வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அன்று தொடக்கம், அதாவது 2006ஆம் ஆண்டில், "லக்பிம" பத்திரிகையின் முழுநேர சேவையில் ஒன்றிணைந்த அவர், சமூகத்தின் மூலைமுடுக்குகளில் தேங்கிக்கிடந்த விடயங்களைச் சமூகத்தின் கவனம் ஈர்க்கப்படும் வகையில் தமது சிறப்புக் கட்டுரைகளில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தினார். கங்கொடவில சோம தேரரின் பிரேத பரிசோதனை தொடர்பான அவரது ஆய்வுக் கட்டுரை அத்தகையதொன்றாகும்.

விருஜன மன்றத்தினால் வருடந்தோறும் மனித உயிர்களைக் காப்பாற்றுகின்ற உன்னத மனிதர்கள் சார்பாக, விருது வழங்கும் விழாவில் 2009ஆம் ஆண்டுக்கான விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்மலா கன்னங்கரா

**சிறப்புக் கட்டுரை ஆசிரியர் (சன்டே லீடர்)**

* வருடத்திற்கான சுற்றாடல்சார் அறிக்கையிடலுக்கான செயற்றிறன் விருது
* பேராசிரியர் கே. கைலாசபதி விசேட நிலைமைகளின் கீழான அறிக்கையிடலுக்கான செயற்றிறன் விருது

---

நுகேகொட அனுலா கல்லூரியின் மாணவியாகப் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த நிர்மலா கன்னங்கரா, ஆறு மூத்த சகோதரிகளையும் ஒரு மூத்த சகோதரரையும் கொண்ட குடும்பத்தின் கடைசிப் பிள்ளையாவார். ஆரம்பத்தில் தந்தையின் மரணமும் தாயாரின் அகால மரணமும் இடம்பெற்ற பின்னர் அவர் முகங்கொடுத்த உளரீதியான தாக்கத்திற்குத் தீர்வினை "சன்டே லீடர்" செய்தித்தாளுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் மூலம் தேடினார். 2005ஆம் ஆண்டில் "சன்டே லீடர்" உடன் இணைந்த அவர், படுகொலை செய்யப்பட்ட அதன் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க அவர்களினதும், அவரது மனைவியினதும் அதன் முன்னாள் ஆசிரியராக இருந்த சொனாலி அவர்களினதும் ஊடகப் பயிற்சி அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார். குறிப்பாக வெகுசன ஊடகத்தில் மொழிப் பயன்பாட்டினைக் கற்றுக்கொண்டார். பிற்காலத்தில் புலனாய்வு அறிக்கையிடல் துறையில் இணைந்து கொண்ட நிர்மலா அதன் பிரிவுத் தலைவர்களின் கீழும் பணியாற்றினார்.

2012ஆம் ஆண்டு மெனிக் பாம் சம்பவத்துடன் தொடர்புபட்ட அகதிகளை மீளக் குடியமர்த்துதல் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் முகங்கொடுக்க நேர்ந்த உயிர் அச்சுறுத்தல் மற்றும் திகிலூட்டும் அனுபவங்கள் என்பனவும், நிக்கவரெட்டிய பிரதேசத்தில் வாவியொன்றின் நீரை வற்றச் செய்து ஹோட்டலொன்றை நிர்மாணிக்கும் முயற்சி தொடர்பாக அறிக்கையிடும் பொருட்டு அங்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் முகங்கொடுக்க நேர்ந்த மோதல் நிலைமைகளும் புலனாய்வு அறிக்கையிடலில் அவரது நினைவினின்று அகலாத சம்பவங்களாகும்.

தற்போது "சன்டே லீடர்" பத்திரிகையின் சிறப்புக் கட்டுரை ஆசிரியராகப் பணியாற்றுகின்ற அவர், குறிப்பாகச் சுற்றாடல்சார் சம்பவங்களையொட்டிய சிறப்புக் கட்டுரையாக்கத்திலும் ஈடுபட்டுள்ளார். எழுத்திலான மூலங்கள் மற்றும் தகவல்களில் இருந்துகொண்டு சமூகப் பொறுப்பு வாய்ந்த ஊடக அறிக்கையிடலில் ஈடுபடுவதற்கு அவர் நிதமும் ஆர்வமாயுள்ளார்.

## லக்னா தரிந்து பரணமான்ன

**டெய்லி மிரர்**

* டென்சில் பீரிஸ் வருடத்திற்கான இளம் ஊடகவியலாளர்

---

கொழும்பு மியுசியஸ் கல்லூரியில் பாடசாலைக் கல்வியைப் பெற்று, அதன் பின்னர், அதாவது 2007ஆம் ஆண்டு "த நேஷன்" பத்திரிகையுடன் இணைந்து பல சமூக நிகழ்வுகளை எளிமையான சிறப்புக் கட்டுரையாக்கத்தில் வெளிக் கொணர்ந்தமை லக்னாவின் முதலாவது ஊடக அனுபவமானது. பிற்காலத்தில், அதாவது 2010ஆம் ஆண்டில், "டெய்லி மிரர்" பத்திரிகையுடன் இணைந்த லக்னா தற்போது அதன் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராகப் பணியாற்றுகின்றார். தற்போது சர்வதேசத் தொடர்புகள் பற்றிய பட்டப் பாடநெறியொன்றைப் பயின்று வருகின்ற அவர், அதனைத் தமது தொழில்சார் ஊடக வாழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். ஆக்கபூர்வமான திருமண வைபவப் புகைப்படப்பிடிப்பில் ஈடுபடுவது அவரால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய செயற்பொறுப்புகளாகும். இதற்கு முன்னர் நடத்தப்பட்ட வெகுசன ஊடக விழாக்களிலும் டென்சில் பீரிஸ் வருடத்திற்கான இளம் ஊடகவியலாளர் விருதினையும், சுப்பிரமணிய செட்டியார் வருடத்திற்கான சமூக அபிவிருத்தி அறிக்கையிடல் விருதினையும் அவர் சுவீகரித்துக் கொண்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை

* பேராசிரியர் கே. கைலாசபதி விசேட நிலைமைகளின் கீழான அறிக்கையிடலுக்கான இணைச் செயற்திறன் விருது

புனித பிரிஜட் கன்னியர் மடத்தில் அடிப்படைப் பாடசாலைக் கல்வியைப் பெற்றதன் பின்னர் 1990ஆம் தசாப்தத்தின் ஆரம்ப காலகட்டத்தில் சிங்கப்பூரில் வெகுசனத் தொடர்பாடல் பற்றிய பட்டப்படிப்புப் பாடநெறியொன்றைப் பயின்ற துஷ்யந்தனி, 1993ஆம் ஆண்டு "வீரகேசரி" பத்திரிகையுடன் பத்திரிகைச் செய்தியாளராக இணைகின்றார். 1993ஆம் ஆண்டு "யாரிவி" நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட சமாதானம் பற்றிய தொனிப்பொருளைக் கொண்ட நிகழ்ச்சியொன்றின் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்ட அவர், 1999ஆம் ஆண்டு பி.பி.சி சர்வதேச ஊடக வலையமைப்புடன் தயாரிப்பாளராக இணைகின்றார். பி.பி. சி நிறுவனத்தில் கழித்த 8 – 9 வருட காலப்பகுதியில் "ப்ளொக் தள" உருவாக்கத்தில் ஆற்றல்களை மெருகூட்டிக் கொண்ட அவர் உருவாக்கிய ப்ளொக் தளம் 2010இல் 6வது தடவையாகவும் நடத்தப்பட்ட நியூயோர்க் ப்ளொக் ஹிலர் மாநாட்டில் உலகம் பூராவும் ப்ளொக் தளங்களைப் பேணிவருகின்ற ப்ளொக் தளங்களை நெறிப்படுத்தும் ஆயிரம் இளம் பெண்களுக்கு மத்தியில் முதலாம் இடத்தைப் பெற்றுப் பாராட்டுக்குள்ளாகியது. அவரது ப்ளொக் தளமானது கல்விசார் மற்றும் முறைசார் வகையில் நல்லொழுக்க ரீதியான வெகுசனத் தொடர்பாடலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றாக அங்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

தற்போது இந்தோனேசியாவில் ஊடக நிறுவனமொன்றில் வெளிநாட்டு ஊடகவியலாளராகக் கடமையாற்றுகின்ற அவர், புகைப்பட ஊடகவியலாளராகவும் துறையில் பேசப்படுகின்றார். மோதல், கலாசார அம்சங்கள், இயற்கை, சமாதானம், மனிதர்கள், மரபுரீதியான அம்சங்களைக் கொண்ட அவர் எடுத்த புகைப்படங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் வெளியாகின்றன. கமராவுடன் வட கிழக்கு யுத்த வலயத்திற்குத் தனியாக விஜயம் செய்த முதலாவது தமிழ்ப் பெண் ஊடகவியலாளர் இவராவார்.

20 வருடங்களுக்கு அதிகமான ஊடக அனுபவங்களைக் கொண்ட துஷ்யந்தினி, புதிய ஊடகவியலாளர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிச் செயலமர்வுகளில் வளப் பகிர்வாளராகப் பணியாற்றுவதுடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வெளிவாரி விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். பால்நிலை சமத்துவம், மனித உரிமைகள், மகளிர் உரிமைகள் அவரது கவனத்திற்குள்ளாகும் தொனிப்பொருள்களாகும். அபாயம் மற்றும் சவால்களை எதிர்கொண்டு பணியாற்ற விரும்பும் அவர், சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளுக்கு மேலதிகமாகப் பிரெஞ்சு மற்றும் சீன மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

# மந்தனா இஸ்மாயில் அபேவிக்கிரம

**பிரதி ஆசிரியர் - சன்டே லீடர்**

* பீ.ஏ. சிறிவர்தன வருடத்திற்கான பத்திரிகைக்கம் (ஆங்கிலம்) விருது

அண்மையில் தாபிக்கப்பட்ட இலங்கை ஊடகவியலாளர் தொழில்சார் சங்கத்தை ஆரம்பிப்பதற்காகக் கடினமாக உழைத்த மந்தனா அபேவிக்கிரம அதன் முதலாவது தலைவருமாவார். "சன்டே லீடர்" பத்திரிகையின் அரசியல் பத்திக் கட்டுரையை எழுதும் அவர் "யுத்தத்திற்கு எதிரான ஊடகவியலாளர்" எனப் பேசப்படுகின்றார். கடந்த தினங்களில் அவர் வாழ்கின்ற வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட குண்டர்களது தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாகத் தற்போது நாட்டிலிருந்து வெளியேறியுள்ள மந்தனா உயிர் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துள்ள மற்றுமோர் இலங்கைப் பெண் ஊடகவியலாளராவார். 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வெகுசன ஊடக விழாவில் வருடத்திற்கான வியாபாரப் பெண் ஊடகவியலாளருக்கான விருதை அவர் பெற்றுக்கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரீஷா பெஸ்ரியன்

**டெய்லி என்.ரீ.**

* பீ.ஏ. சிறிவர்தன வருடத்திற்கான பத்தியாக்க செயற்றிறன் விருது (ஆங்கிலம்)

பம்பலப்பிட்டி புனித கன்னியர் மடத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற தரீஷா, 2004ஆம் ஆண்டு பயிற்சிபெற்ற ஊடகவியலாளராக "சன்டே லீடர்" பத்திரிகையுடன் இணைகின்றார். அதற்கு முன்னர் சில காலம் பெப்பிடெல் வானொலி நிறுவனத்தில் இலத்திரனியல் ஊடக அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கும் இடையில் போர் நிறுத்தம் நிலவிய காலப்பகுதியில், தனது அச்சு ஊடக வாழ்க்கை கரடுமுரடானதாக இருந்தமையினால், "சன்டே லீடர்" முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் ஆலோசனையின்பேரில் வட-கிழக்குப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து மோதல் அறிக்கையிடல் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார்.

2005ஆம் ஆண்டு "டெய்லி மிரர்" பத்திரிகையுடன் இணைந்த அவர், அரசியல் சம்பந்தப்பட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார். அதனை "பீபள்ஸ் அன்ட் பொலிடிக்ஸ்" எனும் சிறப்புக் கட்டுரையுடன் இணைந்தே பெற்றுக் கொண்டார். 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலும் அரசியல் அறிக்கையிடலுக்கான பயிற்சியை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. 2006ஆம் ஆண்டு "த நேஷன்" பத்திரிகையுடன் இணைந்த தரீஷா அதன் உதவி சிறப்புக் கட்டுரை ஆசிரியராக நியமனம் பெற்றார். அப்போது யுத்தச் செய்தி அறிக்கையிடலில் பிரவேசிப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

"த நேஷன்" பத்திரிகையுடன் பணியாற்றிய 3 ½ வருட காலப்பகுதியில் பத்திரிகைகளைப் போலவே அச்சு ஊடகம் தொடர்பாகவும் பரந்த அறிவினையும் அனுபவத்தையும் அவரால் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதன் பின்னர் ஒருசில காலம் நாட்டுக்கு வெளியில் வாழ்ந்து வந்த தரீஷா மீண்டும் 2011 ஐப்பசி மாதம் "சிலோன் ருடே" பத்திரிகையுடன் இணைந்ததோடு, 2012 புரட்டாதி மாதம் டெய்லி என்.ரீ.யுடன் இணைந்து அரசியல் பத்தி எழுத்தாளராகவுள்ளார்.

தற்போது சர்வதேச தொடர்புகள் பற்றிய பட்டப் பாடநெறியொன்றைப் பயின்று வருகின்ற அவர், 2005 வெகுசன ஊடக விருது வழங்கும் விழாவில் டென்சில் பீரிஸ் வருடத்திற்கான இளம் ஊடகவியலாளர் விருதினையும், 2006இல் உபாலி விஜேவர்தன சிறப்புக் கட்டுரையாக்கம் (ஆங்கிலம்) விருதினையும், 2007இல் மேர்வின் த சில்வா வருடத்திற்கான ஊடகவியலாளர் விருதினையும் பெற்றுக்கொண்டார்.

லண்டனைப் பின்புலமாகக் கொண்ட விஞ்ஞான மற்றும் அபிவிருத்தி வலையமைப்புக்கான தயாரிப்பாளராகவுள்ள அவர், பிரித்தானிய கவுன்சில், கொழும்பு வட்டம், காலி இலக்கிய விழா என்பவற்றுக்காகவும் தமது பங்களிப்பை நல்குகின்றார்.

மேலும் இவர், டிமெரிற் இணையத்தள ஊடகப் பயன்பாடு, ப்ளொக் மற்றும் வெப் தள உருவாக்கம், சிறப்புக் கட்டுரையாக்கம், செய்திப் பதிப்பு, வெளியீடு உள்ளிட்ட விடயங்களில் திறமைகளைக் காட்டிவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்மெரிற் டானியல்

**சிரேஷ்ட சிறப்புக் கட்டுரை எழுத்தாளர்**
**சன்டே ரைம்ஸ்**

* உபாலி விஜேவர்தன வருடத்திற்கான சிறப்புக் கட்டுரையாக்கம் (ஆங்கிலம்)

இந்திய இனத்தவரான ஸ்மெரிற் டானியல் இந்நாட்டில் தங்கியிருந்து பத்திரிகை அறிக்கையிடலில் ஈடுபட்டு வருகின்றார். வெகுசன தொடர்பாடல் பற்றிய கலைமாணிப் பட்டம், ஆங்கில இலக்கியமும் தத்துவமும் பட்டம், ஆங்கில இலக்கியம் பற்றிய முதுமாணிப் பட்டம், சமாதானம் மற்றும் அபிவிருத்தி அறிக்கையிடல் பற்றிய டிப்ளோமா ஆகிய தகைமைகளைக் கொண்ட ஸ்மெரிற், 2009ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் "சன்டே ரைம்ஸ்" நிறுவனத்தில் இணைந்துள்ளார்.

ஸ்மெரிற் "யூரி" சிறுவர் சஞ்சிகையின் முகாமைத்துவ இணைப்பாளராகப் பணியாற்றுவதுடன், இந்தியாவின் முன்னணி வர்த்தக செய்தித்தாளாகிய "மிஸ்ட்", "ரைம்ஸ் ஒப் இந்தியா" ஆகிய பத்திரிகைகளுக்கு மேலதிகமாக "லெஷர் ரைம் மெகசின்", "கோமெற் சர்கிள்", "ட்ரவெல் ஸ்ரீலங்கா" சஞ்சிகைகளுக்காகக் கட்டுரைகளை வரைவதிலும் ஈடுபட்டு வருகின்றார். ■



வத்சலா கமகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெருந்தோட்டப் பெண்களின் தொழில் உரிமை:

# சட்டமும் யதார்த்தமும்

தொழில் செய்யும் மலையகப் பெண்களுக்கு பிரச்சினை இருக்கின்றதா எனக் கேட்டால் அனைவருமே ஆம் என்றே பதிலளிப்பர். ஆனால் அவர்களின் பிரச்சினைகளின் வகை, தன்மை, அதன் ஆழம் மற்றும் அதன் சமூக பரிணாமம் தொடர்பான சரியான புரிந்துணர்வு மலையக மக்களிடத்தும் ஏனைய சமூகத்தவரிடத்தும் காணப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகும். இதிலும் குறிப்பாக தொழில் செய்யும் அப்பெண்களே அவர்களின் பிரச்சினையின் தீவிரத்தன்மை தொடர்பாக சிந்திக்காமல் இருப்பதும், இப்பிரச்சினைகள் அவர்களின் வாழ்க்கையில் ஓர் அங்கம் என்று சிந்தித்து செயல்படுவதும் கவலைக்குரிய விடயமாகும்.

மலையகப் பெண்களை அவர்களின் தொழிலின் அடிப்படையில் பின்வரும் வகையில் நோக்கலாம்.

1. தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து பறிக்கும் பெண்கள்
2. தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள்
3. இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்கள்
4. ஆடைத் தொழிற்சாலையில பணிபுரியும் பெண்கள்
5. வீட்டுப்பணிப்பெண்களாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலை செய்வோர்
6. தொழிற்கல்வியில் ஈடுபட்டுள்ளவர்கள்.
7. சுயதொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ளோர்

எனினும் மேற்கூறிய அடிப்படையில் எத்தனை வீதமான பெண்கள் உள்வாங்கப்படுகின்றார்கள் என்பது தொடர்பான சரியான புள்ளிவிபரங்களோ, ஆய்வுகளோ காணப்படாதபோதிலும், அநேகமாக சுமார் 90 சதவீதமான பெண்கள் தேயிலைத் தோட்டங்களிலும், இறப்பர் தேட்டங்களிலும், ஆடைத் தொழிற்சாலைகளிலுமே பணிபுரிகின்றனர். மறுபுறமாக மலையகத்தில் கல்வி ரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட்டு பல பெண்கள் இன்று தொழிற்கல்வியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்கதான ஒன்றாக இருந்தபோதிலும், தொழில் புரியும் மலையக ஆண்களோடும் ஏனைய சமூக பெண்களோடு ஒப்பிடும்போதும் இவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும்.

எனவே, தொழில் செய்யும் மலையகப் பெண்களின் பிரச்சினை என நோக்கும்போது ஏலவே குறிப்பிட்ட தேயிலைத் தோட்டங்களிலும், தேயிலைத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் பெண்கள் அதிகமாகக் காணப்படுவதால் அவர்கள் தொடர்பாக இக்கட்டுரை ஆராய்கின்றது. இவர்களின் பிரச்சினையை சட்டங்களோடு தொடர்புபடுத்தி ஆராய்வதற்கு முறையான அய்வு முறையியல் ஒன்று அவசியம். இருந்தபோதிலும் ஒரு சமூகத்தவரின் பிரச்சினையை வெளிக்கொணர்வதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் முறையான ஆய்வு ஒன்று அவசியமில்லை என்ற அடிப்படையில் இக்கட்டுரை முன்வைக்கப்படுகின்றது. இப்பெருந்தோட்டப் பெண்கள் முகங் கொடுக்கும் தொழில் உரிமை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை சம்பளம், சுகாதாரம், தொழிற் பாதுகாப்பு, ஓய்வு போன்றவற்றின் கீழ் நோக்கலாம்.

## சம்பளம்

தேயிலைத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் பெண்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆனால் அது உழைப்பிற்கேற்ற ஊதியமா மற்றும் இலங்கையில் இன்று காணப்படுகின்ற வாழ்க்கைச் செலவீனத்திற்கு போதுமானதா என்று ஆராய்ந்தால் இல்லை என்றே கூற வேண்டும்.

தற்போது இலங்கையில் அமுலிலிருக்கும் சம்பள வீதமானது 1982ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க சம்பள சபைச் சட்டத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டதாகும் (http://www.labourdept.gov.lk/). இதன்படி இலங்கையில் வெவ்வேறு துறையில் வழங்கப்படும் சம்பள வீதம் தொடர்பாக கீழே காட்டப்படும் அட்டவணை விபரிக்கின்றது.

**அட்டவணை 01: இலங்கையில் ஆகஸ்ட் 2013 அன் படி குறைந்த பட்ச சம்பள வீதம்**

| தொழிற்துறை | தொழிலாளர் பிரிவு | குறைந்தபட்ச சம்பளம் (இலங்கை ரூபா) |
|---|---|---|
| பெருந்தோட்டத் துறை | | 380 நாளொன்றிற்கு |
| | வருகை ஊக்குவிப்பு | 105 நாளொன்றிற்கு |
| | விளைதிறன் ஊக்குவிப்பு | 30 நாளொன்றிற்கு |
| கைத்தொழிற் துறை | பயிற்சியில்லாத | 6500-7500 மாதமொன்றிற்கு |
| | ஓரளவு பயிற்சியுள்ள | 7000-8000 மாதமொன்றிற்கு |
| | பயிற்சியுள்ள | 7500-9500 மாதமொன்றிற்கு |
| சேவைத் துறை | பயிற்சியில்லாத | 6500-7500 மாதமொன்றிற்கு |
| | ஓரளவு பயிற்சியுள்ள | 7500-8000 மாதமொன்றிற்கு |
| | பயிற்சியுள்ள | 8400-9500 மாதமொன்றிற்கு |

மூலம்: (http://www.salary.lk/home/salary/minimum-wage)

மேற்கூறிய அட்டவணையை மேலோட்டமாகப் பார்க்கும்போது பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுகின்றதென தோன்றும். ஆனால் அது உண்மையல்ல. ஏனைய துறைகளைப்போல் இவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. மாறாக நாள் ஒன்றிற்கான சம்பளமே வழங்கப்படுகின்றது. எனவே வேலை செய்யும் நாட்களைப் பொறுத்தே சம்பளம் கிடைக்கப்பெறும். மேலும் தோட்ட நிர்வாகத்தால் அல்லது பெருந்தோட்ட கம்பனிகளே வேலை நாட்களைத் தீர்மானிக்கின்றன. இதன்போது பல தோட்டங்களில் மாதமொன்றிறற்கு 20 நாட்களை விட குறைவான வேலை நாட்களே வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்டுள்ள வேலை நாட்களில் 80 சதவீத வரவு இருந்தால் மாத்திரமே வருகை ஊக்குவிப்பான 105 ரூபா வழங்கப்படும். இல்லையெனில் அடிப்படை சம்பளமான ரூ 380 இன் படியே சம்பளம் தீர்மானிக்கப்படும். மேலும், தொழிலாளி ஒருவர் சுகயீனம் காரணமாகவோ வேறு எந்த தேவைக்காகவோ விடுமுறை எடுத்தால் அந்நாளுக்கான சம்பளமும் வழங்கப்படமாட்டாது. மற்றும் குறிப்பிட்ட தினத்தில் 8 மணித்தியாலயங்களுக்கு குறைவாகவோ அல்லது இலக்கு நிறைவேற்றப்படாவிட்டால் அரைச்சம்பளமே வழங்கப்படும். இதனையே அம்மக்கள் 'அரைப்பேர்' என்று அழைக்கின்றனர்.

விளைதிறன் ஊக்குவிப்பும் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது. உதாரணமாக நாளொன்றிற்கு இத்தனை கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என வரம்பு இருக்கும்போது அதனைவிட அதிகமாக கொழுந்து பறித்தால் மாத்திரமே அந்த தொகை வழங்கப்படும்.

இதனைவிட இப்பெண்கள் 'Gender pay gap' என்று நாம் கூறகின்ற பால்நிலை அடிப்படையிலான சம்பளம் வழங்கும் முறையினாலும் பாதிக்கப்படுகின்றனர். ஏனைய துறைகளில் ஒரே வேலையை சமமான நேரத்தில் பெண், ஆண் இருபாலாரும் முடித்தாலும் பெண்களைவிட ஆண்களுக்கு அதிகம் சம்பளம் வழங்கப்படும். ஆனால் பெருந்தோட்டத்துறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடிப்படைச் சம்பளம் ஒன்றாக இருந்தபோதிலும் வேலை செய்யும் மணித்தியாலயங்களின் அளவு ஆண்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகும். இந்நிலமையால் பெண்கள் மென்மேலும் பாதிக்கப்படுவதோடு இரண்டாம்பட்ச நிலைக்கே தள்ளப்படுகின்றனர். அவ்வாறே ஆண்களுக்கு குறைவான மணித்தியாலயங்கள் வேலை செய்ய வேண்டி இருப்பதால் அதிக ஓய்வு கிடைப்பது மட்டுமன்றி ஏனைய விடயங்களில் பங்கேற்பதற்கும் தங்களை முன்னேற்றிக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. ஆனால் பெண்கள் திட்டமிடப்பட்டபடி ஒரு வட்டத்திற்குள்ளேயே வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

## சுகாதாரம் மற்றும் தொழிற் பாதுகாப்பு:

இலங்கையின் 1942ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 6இன் பிரகாரம் தொழில் வழங்குனர் தொழிலாளியின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். அதேபோல பிரிவு 32, 51, 53 மற்றும் 58 இன் படி தொழில் வழங்குனர் தொழிலாளிகளுக்கான தொழிற் பாதுகாப்பிற்கான சாதனங்களையும் வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ளார். அதாவது தொழில் புரிபவர்கள் ஈரத்தில் மற்றும் காயங்கள் ஏற்படக்கூடிய சூழலில் வேலை செய்வார்களாயின் அவர்களுக்கு சுவாசப் பாதுகாப்பிற்கான சாதனங்கள், கண்களைப் பாதுகாப்பதற்கான கண்ணாடிகள் மற்றும் கவசங்கள் என்பவற்றை வழங்க வேண்டும். மூலம்: (http://www.salary.lk/home/labour-law/occupational-safety-and-health-laws).

ஆனால், பெருந்தோட்டங்களில் தொழில் செய்யும் பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் தொழிற் பாதுகாப்பு என்பன இல்லையென்றே கூறவேண்டும். மலையகமானது அதிக மழை வீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதேசம் என்தாலேயே தேயிலைப் பயிர்ச் செய்கை சிறப்பாக காணப்படுகின்றது. அதிக மழைவீழ்ச்சி காணப்படுவதால் ஈர நிலத்தின்மீது நின்றவாறும் மழையில் நனைந்தும் கொழுந்து பறிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்பெண்களுக்குக் காணப்படுகின்றது. ஆனால் இவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற்று அத்தொழிலைச் செய்வதற்கான பாதுகாப்பு கவசங்கள் தொழில் தருநரான பெருந்தோட்டக் கம்பனிகளால் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை என்பதே உண்மை. இதனால் இங்குள்ள அநேக பெண்கள் சளி மற்றும் சன்னி போன்ற நோய்களுக்கு உட்பட்டுள்ளனர்.

அவ்வாறே தேயிலைத் தோட்டங்களானவை அவர்களின் குடியிருப்புகளுக்கு மிகவும் தொலைவில் காணப்படுவதால் மலசலகூட பாவனை இல்லாமை, தூய குடிநீர் பெற முடியாமை என்பவற்றாலும் பெண்கள் பாதிப்புறுகின்றனர். வெயிலிலும் மழையிலும் வேலை செய்ய வேண்டிய இவர்களுக்கு இருந்து உணவருந்த ஒரு கூடாரம் கூட நிர்வாகிகளால் அமைத்துக் கொடுக்காததால் நின்றுகொண்டே உணவருந்தும் நிலையிலேயே காணப்படுகின்றனர். சிலவேளைகளில் மரத்திலே தொங்கவிட்டுச் சென்றிருக்கும் உணவுப் பொதிகளை விஷ ஜந்துக்கள் தீண்டிச் செல்லும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இதனைவிட வேலை செய்யும் நேரங்களில் விஷப் பாம்பு கடி மற்றும் குளவி கொட்டு போன்றவற்றிற்கு உட்பட்டு இறந்த சம்பவங்களும் பத்திரிகைகளில் வரக் கண்டுள்ளோம். அவ்வாறே தேயிலைத் தோட்டங்கள் மலைப் பகுதிகளில் அமைந்துள்ளமையால் அங்கு வேலை செய்யுமிடத்து பல விபத்துக்களும் எற்படுகின்றன. இதன்போது எவ்விதமான முதலுதவிக்கான வசதிகள் காணப்படுவதில்லை. அதேவேளை வைத்தியசாலைகளும் வெகு தொலைவில் அமைந்துள்ளமையால் பல சிரமங்களுக்கு இப்பெண்கள் உள்ளாகுகின்றனர்.

தேயிலைத் தொழிற்சாலையை எடுத்து நோக்கும்போதும் அங்கும் தொழிற்சாலை இரைச்சலினாலும், தொடர்ந்து வெளியேறும் புகை மற்றும் தூசுகளினால் அங்கு வேலை செய்யும் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. இந்த தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு முன் பயிற்சி எதுவும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு முன் பயிற்சி இல்லாமல் வேலைக்குச் செல்வதால் பல சமயங்களில் கொழுந்து அரைக்கும் இயந்திரங்களினால் காயங்கள் ஏற்படுவதும் சில சமயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் ஊனமுறுவதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

## ஓய்வு

ஒரு தொழிலாளி விடுமுறை தினத்தன்று வேலை செய்ய வேண்டி ஏற்பட்டால் அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டால் அவருக்கு வழங்கப்படும் சம்பளத்தின் 200 சதவீதத்தை வழங்க வேண்டும் என 1982 ஆம் ஆண்டு சம்பள நிர்ணய சட்டத்தின் பிரிவு 6.1 b குறிப்படுகின்றது. மேலும் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் (24 மணித்தியாலயங்கள்) ஓய்வு வழங்கப்பட வேண்டும் என 2007 ஆம் ஆண்டு தொழிற்சட்டத்தின் பிரிவு 27.2 கூறுகின்றது. (http://www.salary.lk/home/labour-law/leave-and-holidays). இதன்படி பார்க்குமிடத்து ஞாயிறு மற்றும் போயா போன்ற பொது விடுமுறை தினங்களில் வேலை செய்யுமிடத்து அவர்களுக்கு 200 வீதம் சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஆனால் சில பெருந்தோட்ட கம்பனிகள் 150 வீதத்தை வழங்குவதோடு, வழமைக்கு மாறாக அவர்களின் இலக்கையும் அதிகரிக்கின்றன. உதாரணமாக வழமையாக 20 கிலோகிராம் தேயிலை பறிக்க வேண்டும் என்றால், இவ்வாறான பொது விடுமுறைத் தினங்களில் வேலை வழங்கப்படும்போது 30 கிலோகிராம் கொழுந்து பறிக்குமாறும் அப்போதே 150 சதவீதம் வழங்கப்படும் எனவும் கேட்கப்படுகின்றனர். இவை மேற்குறிப்பிட்ட சட்டங்களை மீறுவதாகக் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக பெருந்தோட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் (கூறிக்கொண்டிருக்கும்) தொழிற்சங்கங்கள் கண்டுகொள்ளாமலிருக்கின்றன. இதற்குக் காரணம் தொழிற்சங்கங்களுக்கு இச்சட்டங்கள் தொடர்பான அறிவின்மையா அல்லது முதலாளிமார்களான பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு சாதகமாகச் செயற்படுகின்றனவா என்பது தொடர்பாக கண்டறிய வேண்டியுள்ளது.

மேலும், இவர்கள் ஒரு நாளைக்கு எட்டு மணித்தியாலயங்களுக்கு மேலாகவே வேலை செய்கின்றனர். இடையில் பகலுணவிற்காக மாத்திரம் அரை மணித்தியாலயம் வழங்கப்படும். இந்த நேரத்தில்தான் பெண்கள் தமது குழந்தைகளை பிள்ளை பராமரிப்பு நிலையங்களிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்ல, அவர்களுக்கு உணவூட்டல் என்பவற்றையும் மேற்கொள்கின்றனர். எனவே அப்பெண்களுக்கு ஓய்வு என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

மேற்கூறியவாறான பல்வேறுபட்ட பிரச்சினைகளை பெருந்தோட்டப் பெண்கள் தாம் வேலை செய்யும் இடத்தில் முகங்கொடுக்கின்றமையை நாம் அன்றாடம் காணலாம். இவற்றை முற்றுபெற வைப்பதற்கு அரசாங்கத்தையோ, மலையக அரசியல்வாதிகளையோ அல்லது ஏமாற்றும் தொழிற்சங்கங்களையோ தொடர்ந்து நம்பிக்கொண்டிருக்காமல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் முதலில் செயற்படுவது அவசியமாகின்றது. அவ்வாறு நாம் செய்யக்கூடியவை:

- பெருந்தோட்டத்தில் தொழில் புரியும் பெண்களை அணிதிரளச் செய்து, அவர்களுக்கான ஒரு வலையமைப்பை உருவாக்குதல்.
- தொழிலாளர் உரிமைகள், தொழிற் சட்டங்கள் தொடர்பாக அவர்களை வலுப்படுத்தல்.
- தங்களின் பிரச்சினைகளை தாங்களே முன்வைத்து குறித்த நிர்வாகிகளிடமிருந்து தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சி செய்தல்.
- பெண்கள் தொழிற்சங்கங்களை உருவாக்கலும், ஏற்கனவே உள்ள தொழிற்சங்கங்களில் பெண்களுக்கு பதவி வழங்க பரிந்துரை செய்தல்.
- ஏனைய பிரதேசப் பெண்களுடன் தொடர்பை ஏற்படுத்தலும் அவர்களின் அனுபவங்களூ டாகக் கற்றுக் கொள்ளுதல்.

இவற்றை செய்வதற்கு நீண்டகாலம் அவசியம் எனினும் இவற்றைச் செய்வதால் ஏற்படும் மாற்றத்தினால் எதிர்கால பெருந்தோட்டத்துறையில் வேலை செய்யும் பெண்கள் தொழில் உரிமையை அனுபவிப்பர் என்பது திண்ணம். ■

**கமலேஸ்வரி இலட்சுமணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு கதை

# வரதா வேலைக்குப் போகிறாள்

"டொக்..... டொக்..... டொக்....." கதவை உடைப்பது போன்று கடுமையாகக் கதவை இடிக்கும் ஓசை.

கனடாவிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்த மகனின் தொடர்பை நிறுத்திவிட்டு வீட்டு வாசலை நோக்கி ஓடினேன், கடும் சினத்தோடு.

"யாரது? கதவை ஏன் உடைக்கிறீர்கள்?" என்றேன் கோபத்துடன் உரத்த குரலில்.

"ஐயோ ! நோனா தரஹாவென்ட எப்பா. நீண்ட நேரமாகத் தட்டினேன். உங்களுக்கு கேட்கவில்லையோ என எண்ணித்தான் இறுக்கி அடித்தேன். கோபிக்காதேங்கோ அம்மா" என மிகவும் பணிவாகக் கெஞ்சும் குரலில் தன் சிங்களத்தில் பேசினாள் வரதா.

அவளுடைய கெஞ்சல் வறுமை படர்ந்த தோற்றம் ஏழ்மையின் பிரலாபத்தை அடையாளப்படுத்தும் போக்கு என்பன எல்லாமே ஒன்று சேர்ந்து எந்தக் கருங்கல்லையும் உருகவைக்கும்.

சீற்றத்தோடு கதவைத் திறந்த நான் அவளைக் கண்டதுமே கங்கை நீராகக் குளிர்ந்து போனேன்.

அவள் வழமை போலவே தான் சுமந்து வந்திருந்த கத்தரி, வெண்டி, பாகல், புடோல், போஞ்சி, கரட், இலைக்கறிவகைகள் என ஒவ்வொன்றையும் கூடையிலிருந்து எடுத்து வெளியே வைத்தாள். வழமைபோல அவற்றின் அளவு, விலை என்பனவற்றைக் கூறி "லாபாய், ஹரி லாபாய்" என்று அவற்றின் விற்பனைக்கு சுருதி கூட்டியபடி, கருமமே கண்ணாயினாள்.

> **"சே என்ன நீ இந்தளவு தூரத்திலையிருந்து ஏதோ வேலை செய்து பிழைக்க வந்தனீ. அதுவும் இன்று நேற்றல்ல, நாலைந்து வருடமாக இந்த றோட்டெல்லாம் சுத்துறாய்."**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் நான் விரும்பியவற்றைப் பொறுக்கி எடுத்து விலை கேட்கவும் அவள், பொதுவான விலை ஒன்றையும் எனக்குச் சில ரூபாக்கள் விசேடமாகக் குறைத்துத் தருவதாகவும் தனது வியாபாரக் கலையைக் கச்சிதமாக மேற்கொண்டாள்.

நானும் "பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்" என அரக்கப் பெண்ணை இராமன் நினைத்தது போலவே, ஒரு பெண் — அதுவும் வறுமையும் கொடுமையும் சவால் விட, உடம்பை வருத்தி அதிகாலை எழுந்து சந்தைக்குப் போய் இவற்றைக் கொள்வனவு செய்து பின் பஸ் ஏறி வந்து அவை காய்ந்து வாடிப்போகாமல் அவற்றைக் காசாக்கிச் சின்ன லாபத்தோடு வீடு சேர்ந்தால்தானே அவள் வீட்டில் அடுப்பு எரியும். அக்குடும்பத்தின் பசித் தீ தணியும் என இரக்கம் கொள்வேன்.

இயல்பாகவே எனக்கும், இத்தகைய பெண்களுடைய வாழ்வு, அவர்களின் சூழல், அவர்களுடைய அபிலாஷைகள், எண்ணங்கள், திட்டங்கள், அவர்களைச் சங்கடத்துள் ஆழ்த்தும் சவால்கள், முரண்பாடுகள், நெருக்குவாரங்கள், ஏமாற்றங்கள், பிரச்சினைகள் என்பனவற்றை அறிவதிலும், அதற்கான தீர்வுகள் வழிமுறைகள் பற்றிச் சிந்திப்பதிலும், இவற்றைப் பெண் மேம்பாட்டுக்கான அமைப்புக்கள் அவற்றோடு தொடர்புடையவர்களுடன் கலந்து பேசுவதிலும், மிகுந்த ஆர்வமும் அக்கறையும் உண்டு.

அத்தோடு நான் சிறுமியாயிருக்கும் போதே எமது இல்லத்தில் மதிப்பார்ந்த பெரியவர்களை விருந்திட்டு வரவேற்பதை விட இத்தகைய ஏழை எளிய மக்களுக்கு உணவு, உடைகள், அரிசி, தேங்காய் எனக் கொடுத்து உதவுவதில் என் அம்மா கூடியளவு ஈடுபாடு காட்டுவதைப் பார்த்து வளர்ந்தவள் நான். நான் படித்துப் பெரியவளான பின்னர் சமூகத் தொடர்புகளுள் என்னை அமிழ்த்திக் கொண்டதுமல்லாமல் மேம்பாட்டு அமைப்புக்களில் அக்கறை கொள்ள என்னைத் தூண்டிவிட்ட செல்வி, சாந்தி போன்ற சமூகசேவையாளரோடு நெருங்கிய உறவுள்ளமையாலும் எனக்கு இத்தகைய பெண்களிடம் பெரும் கரிசனை உண்டு.

எனவேதான் காய்கறி விற்கும் வரதா தான் விற்பனைக்குக் கொணர்ந்த பொருட் சுமையை மட்டும் என்னிடம் இறக்கி வைக்காமல் தனது வாழ்வுச் சுமையையும் அன்றாடம் தனக்கும் தன் வீட்டில் இடம்பெறும் பிரச்சினைகளையும் என்னிடம் இறக்கி வைப்பதுபோல் ஒப்புவித்துவிட்டு நான் கொடுக்கும் தேநீரையோ அல்லது மெல்லிய பசிபோக்கும் உணவு வகைகளையோ உண்டு பசியாறிப் போவாள். எனது வீட்டை அவள் பொருள் விற்பனைக்கான இடமாகவன்றி இளைப்பாறிச் செல்லும் நிழலாகவே கருத்தில் எடுத்துள்ளாள். வேலைப்பளு என்னை அழுத்தும் போது நான் அவள் "பாரதத்தைக்" கேட்க உடன்படாது ஏதோ சாட்டுச் சொல்லிக் கலைத்துவிடுவதுமுண்டு. ஆனாலும் அவள் அதைக் கோபமாக எடுத்துக்கொள்ளாமல் அம்மாவுக்கு வேலை கூடிப்போச்சாக்கும், உதவிக்கும் ஆளில்லைத்தானே எனக் கூறி என் மீது பரிதாபம் கொள்வாள். இப்படியே ஓரிரு மாதங்களல்ல பல வருடகாலமாகவே அவள் தொடர்பு நீடிக்கிறது.

வரதா ஹோமாகமவிலிருந்து காய்கறி கீரை பழங்கள் எனப் பலவற்றையும் காவிக்கொண்டுவந்து நாரஹேன்பிட்டி அடுக்குமாடி வீடுகளுக்கு விற்பனை செய்யும் ஒரு அன்றாடங்காய்ச்சி. அவளது குடும்பம் ஊரில் இருந்தபோது போரினால் குண்டுபட்டு முறிவுற்ற கால் நடக்க முடியாத இளவயது தங்கை, வயதான தாய்.. இவர்களைத் தனியே தவிக்கவிட்டிட்டுக் குடிக்காரனாயிருந்த தகப்பன் மரணித்துவிட இவர்களும் குடிபெயர்ந்து இங்கு குடியமர்ந்து விட்டனர். இவளோடு சேர்ந்த அந்தக் கையாலாகாத இரு பெண் பிறப்புக்களுக்கும் இவளே சோறிட்டு வருகிறாள். சிலவேளைகளில் இவள் காலதாமதமாகிப் போய் உலை ஏத்த நேரமாகிவிட்டால் பசியால் மற்ற இருவரும் போடும் சண்டமாருதம், அற்ப விஷயங்கள், பேச்சு வார்தைகளால் அண்டை அயலவருடன் ஏற்படும் மனக்கசப்புக்கள், கொதிப்புக்கள், வாக்குவாதங்கள் எல்லாம் கூட என் வீட்டுவாசலில் பதிவு செய்யப்படும்.

நானும் பொழுதுபோகாத வேளைகளில் இவ்வடித்தட்டு மக்களின் வாழ்க்கைப்போக்குகள், வார்த்தைப் பிரயோகங்கள், பேசும் பாணிகள், உணர்வுகள், மனநிலைகள், அவர்கள் முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் சிக்கல்கள் போன்றவற்றை ஒரு சிறுகதையோ, நாவலையோ வாசிப்பது போல வரதா சொல்லும் கதைகளைச் சம்பவக் கோவைகளை அவதானிப்பேன். இப்படித்தன் கஷ்டங்களைக் கொட்டித் தொலைப்பதால் நான் கவனிக்கிறேனோ இல்லையோ தீர்வு காண்கிறாளோ இல்லையோ நிச்சயம் அவளுடைய மனச்சுமை தளர்வடையும் என்பதே உண்மை.

தினம் தினம் புதுப்புதுச்சண்டைகள், கோபதாபங்கள், எதையுமே சரியாக விளங்கிக் கொள்ளாத முட்டாள்தனங்கள், பேதமை என்பவற்றினால் ஏற்படும் வேதனைகள், அத்தியாவசியமான தேவைகள் எனக் கேட்டுக் கேட்டே மனம் சலித்துப் போய்விட்டது.

நாள்தோறும் சுமக்க முடியாத பாரத்தைத் தலையில் சுமந்து வந்து கழுத்து நோவாக இருக்கிறது! முதுகு உழைவு தாங்க முடியவில்லை அம்மா. தலை சுற்றுகிறது! தலை அம்மலாக இருக்கிறது என்றெல்லாம் வரதா குறைப்படுவது சகஜம்.

பாவம் இந்த நிலையில் இவளைப் பாதுகாக்க யாரும் இல்லையே! என்ற உணர்வு உந்த ஏதாவது சுடுபானமோ உணவோ கொடுத்து உதவுவதும் அவளது சில வாடிக்கையாளர் அவளுக்கு செய்யும் மாபெரும் உதவியாக அமையும்.

இப்படி வீடு வீடாகக் காய்கறி சுமந்து விற்று வந்தவளை அவளோடு இப்படிச் சில்லறை வியாபாரம் செய்யும் கீரைக்காரன் வசதி படைத்த ஒரு பெரிய வீட்டில் வேலைக்கமர ஒழுங்கு செய்து விட்டான்.

பார்க் வீதியிலுள்ள பணக்கார வீடொன்றில் வேலை கிடைத்த பின் ஒருநாள் என்னிடம் வந்தாள். நல்ல இடம்போல் தெரிகிறது. காரணம் அவள் நடையிலும் உடையிலும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவளோ என மட்டிடக் கூடியளவில் அவள் வெளிப்பாடு பெரும் எடுப்புச் சாய்ப்பாகத் தோற்றம் தந்தது.

உடை மாறினாலும் நிலை மாறினாலும் அவளது பழைய வெகுளித்தனம் மாறவேயில்லை. கண்டதும் அம்மா என்று கத்திக்கொண்டு ஓடோடி வந்தாள். போதாதற்குக் கையிலே ஒரு அழகான பை,

> “நாள்தோறும் சுமக்க முடியாத பாரத்தைத் தலையில் சுமந்து வந்து கழுத்து நோவாக இருக்கிறது! முதுகு உழைவு தாங்க முடியவில்லை அம்மா தலை சுற்றுகிறது! தலை அம்மலாக இருக்கிறது என்றெல்லாம் வரதா குறைப்படுவது சகஜம்.”

உடம்பிலும் முன்பிருந்ததைவிட சற்றுக் குளிர்மையும் மினுமினுப்பும் ஓரளவு கையில் பணம் புழங்குவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இருந்தாலும் வரதாவின் மனதில் ஒரு அமைதியின்மை நிழல் படிந்த சோகமொன்றும் அவளைத் துரத்தியபடியே வருத்தியது.

என்னிடம் வந்து நான் காய்கறி விற்பனையைக் கைவிட்டு விட்டேன் அம்மா. இப்போது பெரிய பணக்கார வீடோன்றில் வேலைக்காரியாக இருக்கிறேன். காலை ஏழு மணிக்கு வந்து கூட்டிப் பெருக்கி, துணி தோய்த்து, சமையல் பண்ணி மாலை வரை வேலை செய்துவிட்டு ஐந்தரை ஆறு மணிக்கே வீட்டிற்குக் கிளம்பிவிடுவேன். இரண்டு மாதமாக இதேவேலைதான். நல்ல சம்பளம், சாப்பாடு என இதுக்கெல்லாம் ஒரு குறையுமில்லை. ஆனால் இப்போ நாலைந்து நாட்களுக்கு முன் வீட்டுக்கார அம்மாவும் குழந்தையும் வெளிநாடு போய்விட்டனர். ஐயா தனியவேதான் இருக்கிறார். முன்னர் போல எனக்கு அந்தளவு வேலையில்லை. சமையல் கூட எனக்கும் ஐயாவுக்குமென இருவருக்கும்தான். வீட்டிலும் சின்னவன் இல்லாததால் பொருட்கள் எல்லாம் அப்படியே ஒழுங்காக எந்தவித குழ்றுபடியுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக இருக்கும். நான் லேசாகத் தூசுதட்டிச் சுத்தமாகக்குவது தவிர வேறு ஏதுவுமில்லை. ஆனாலும் அம்மாவும் இருக்கும் போது எனக்கொரு பிரச்சினையுமிருக்கவில்லை. எல்லாம் நல்ல சந்தோசமாகவே போனது. ஆனால் இப்போ...... இப்போ..... என்று ஏதோ விக்கிவிழுங்குவதுபோலச் சொல்லக் கஷ்டப்பட்டாள்.

என்ன வரதா? என்ன நேர்ந்தது? ஏன் கடுமையாக யோசிக்கிறாய்? வீட்டில் அம்மா, சகோதரிக்கு ஏதாவது சுகமில்லையா? நீ நல்லாய்த்தானே அழகாக நீற்றாக இருக்கிறாய்.. உனக்கேதாவது வருத்தமா?...... என்ன....... இவ்வளவும் சொல்லி வந்த உனக்கு இடையில் என்ன தடை..? என்று கேள்விக்கு மேல் கேள்விகேட்டு வரதாவை உலுக்கினேன் எதையும் அறியும் ஆதங்கத்துடன்.

அவள் சொண்டுகள் படபடத்தன் கண்கள் நீரை உகுத்தன. வரதா சொல்ல முடியாமல் அவதிப்படுவதைப் பார்த்த நான் என்ன? என்ன? ஏதாவது பிரச்சினையா? என்ன சொல்லு. ஒன்றும் யோசிக்காதே என அவளை ஆசுவாசப்படுத்தினேன்.

அவள் தன்னை ஒரு மாதிரிச் சுதாரித்துக் கொண்டே, அம்மா ஒன்றுமில்லை. அந்த ஐயாதான்... சே.... எனக்கு வேண்டாம்..... பிடிக்கவேயில்லை என்று மென்று விழுங்கினாள்.

"ஓகோ ! அந்த ஐயா என்ன குடிப்பவரா....? என்றேன்.

"குடிக்கிறவர்தான் ! ஆனால் பெரிதாக வெளியே காட்டிக் கொள்ள மாட்டார். அவர் குடிப்பது பற்றி எனக்குப் பிரச்சினையில்லை...."

என இழுத்தாள்.

"அப்ப எது பிரச்சினை...? அதைத்தான் விளக்கமாகச் சொல்லேன்?" என்றேன் கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்தபடி.

அவள் கைகளில் இருந்த கைப்பையின் வாரை மாறிமாறி விரல்களில் சுற்றியபடி, மெதுவாக, "எனக்கு அந்த ஐயாண்டை போக்கு பிடிக்... கே...ல்.....லை" என்று விக்கினாள்.

"ஐயான்ரை...... எந்தப்போக்கு உனக்கு பிடிக்கேலை என்ன? உன்னை ஏதாவது.....? கரைச்சல்ப்படுத்துறாரா?" என்றேன் கண்களைக் கோபமாக படபடவென்று இமைத்தபடி.

"...ம்....ம்....ம்.."என்று தலையாட்டியபடி விக்கத்தொடங்கினாள்.

சே என்ன நீ இந்தளவு தூரத்திலையிருந்து ஏதோ வேலை செய்து பிழைக்க வந்தனீ. அதுவும் இன்று நேற்றல்ல, நாலைந்து வருடமாக இந்த றோட்டெல்லாம் சுத்துறாய். ஐயா, ஏதோ மாதிரி என்றதும் ஏன் பயந்து சாகிறாய். என்னதான் நடந்தது? நீ என்ன பிழை செய்தாய்? என்று விபரமாகச் சொன்னால்தான் எனக்கும் உன்ரை நிலை விளங்கும். அதை விட்டிட்டு நீ விக்கிவிக்கி முக்கிக் கொண்டிருந்தால் எப்படி...? என அவளை விநயமாகத் தூண்டி விட்டேன்.

"நான் வேலைக்கு, சம்பளத்துக்கு வந்தவள்தான். பிழைக்க வந்த என்னைப் பிழையான முறையில் பயன்படுத்தப்பாக்கிறாங்களம்மா." என்று வெடித்து அழத்தொடங்கிவிட்டாள்.

"என்ன பிழையான முறை...? ஒருவருக்குக்கீழ் வேலை செய்வதில் என்ன பிழையிருக்குது. வேலை சொன்னால் செய்யத்தானே வேணும். அதுக்குத்தான் சம்பளம் தாறாங்களே. இப்ப பார் முன்னரைவிட இப்ப என்ன மாதிரி நல்ல உடுப்பு, செருப்பு.... என்றெல்லாம் கிடைக்கும்போது அவர்கள் சொல்லும் வேலையைச் செய்யத்தானே வேணும்...." என்றேன் மெதுவாக அவளிடம், அவள் கூறத் துடிக்கும் விஷயத்துள் அவளை இட்டுச் செல்ல,

"ஊ...கூ.....ம் வேலையாம் வேலை. கண்டறியாத வேலை" என்றாள் சினத்துடன்.

"ஏய் ! மூலஸ்தான மூர்த்தியைப் பார்த்து ஐயர் மந்திரத்தை முணுமுணுப்பது போல ஏதோ உன்னுக்குள் போட்டு விக்கிவிழுங்கினால் அதனை நாம் புரிந்து கொள்வதெப்படி? என எனது கேள்விப் பாதைக்கு விடை காண அவளது எண்ணங்களோடு பயணித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் எனது தொலைபேசி "கணீர் கணீரென" அலற வரதாவுடனான கதையை நிறுத்திப் பேசியைக் கையிலெடுத்துத் தொடர்பு கொண்டேன்.

இடையிடையே இவள் மணிக்கூட்டையும் கையையும் காட்டி அபிநயித்துத் தான் போகவேண்டுமென்ற அவசரத்தை எனக்குத் தெரிவித்தாள்.

நான் எனது தொலைபேசி செய்தியைச் சுருக்கமாக முடித்துக் கொண்டு வரதாவிடம் வந்தேன்.

"சரி சரி, நீ ஏதோ சொல்ல வந்ததைச் சொல்லித் தொலை" என்று அவளை முடுக்கினேன்.

"அம்மா அந்த வீட்டை இனிமேல் நான் வேலைக்குப் போகப்போவதில்லை. வேறெங்கேயாவது பார்த்துப் பேசி எனக்கொரு வேலை ஒழுங்குபண்ணித்தாங்கோம்மா என்று கெஞ்சும் குரலில் கைகளைக் கூப்பிக் கும்பிட்டபடி கேட்டாள்.

அவள் நிலையைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த நான் ஏன் முன்னர் நீ வேலை செய்த வீட்டில் ஒழுங்காகச் சம்பளம் தந்தார்கள்தானே ! உன்னையும் நன்றாகக் கவனித்தார்கள். நீயும் அங்கே சந்தோஷ மாக இருந்தாய்தானே் இப்போ வந்த பிரச்சினை என்ன? பணம் தரவில்லையா? ஏதாவது ஏசிக் கொடுமைப்படுத்தித் தண்டித்தார்களா? திட்டினார்களா? சம்பளம் தர மறுத்தார்களா? என்ன நடந்ததென்று விபரமாகச் சொன்னால்தானே ஏதாவது நல்ல புத்திமதியைச் சொல்லலாம். அல்லது அந்தக் குறைபாட்டைத் தீர்ப்பது பற்றி யோசிக்கலாம். அல்லது தவறு உன் மேல் தானோ எனவும் அறியலாம்" என்றேன் மெதுவாக.

விம்மி விம்மி முனகிக் கொண்ட வரதா தன் துயரத்தை அவிழ்த்துக் கொட்டினாள்.

*** *** ***

வீட்டில் எசமானும் வேலைக்காரியுமான இருவரும் தனித்தே இருந்தனர். வீட்டு எசமான் தன் மனைவி இல்லாத வேளைகளில் வேலைக்காரியின் கன்னத்தைக் கிள்ளுவது, கைவிரல்களைப் பிடிப்பது, முதுகில் தட்டுவது, தற்செயல் போல மார்பில் இடிப்பது, கால்களை மிதிப்பது, கண்ணடிப்பது என்றெல்லாம் வம்புத்தனங்களில் ஈடுபடும் எசமானின் கொடுமைகளை வேண்டா வெறுப்பாகப் பொறுத்துக் கொண்டு, தாயையும், சகோதரியையும் பேணி அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் என்பதற்கான செலவுகளைத் தாங்க வேண்டுமே என்ற சுமையில் இந்த அசிங்கங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டேயிருந்தாள் வரதா. சில வேளைகளில் எல்லாவற்றையும் தூக்கியெறிந்து போட்டுக் கண்காணாமல் எங்காவது ஓடிப் போவோமா என அவள் எண்ணுவதுமுண்டு. பின்னர் பஞ்சத்தால் ஒட்டிய வயிறும் தோய்ந்த கன்னங்களும் குழியான கண்களும் ஏங்கி நிற்கும் தாய், நடக்க முடியாமல் நத்தை போல் அரக்கி அரக்கி ஊர்ந்துவரும் தங்கை ஆகியோரின் நினைவுகள் இக்கொடுமைகளையெல்லாம் மறக்கப்பண்ணிவிடும்.

வீட்டுக்கார ஐயா குளிப்பதற்குப் போய்விட்டார். மூடிய கதவை மெல்ல திறந்து "ஏ வரதா சோப்பையும் டவலையும் எடுத்து வா" என்றார்.

அவர் கேட்ட இரண்டையும் எடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்த வரதாவின் சோப் இருந்த கரங்களை இறுகப் பற்றி உள்ளே வா என இழுத்து கதவை இறுக்கிப் பூட்டிக் கொண்டார். வரதாவுக்குப் பயத்தால் உடம்பு நடுங்கியது. ஐயா என்னை விடுங்கள் ஐயா! எனக் கதறினாள்.

"சே சும்மா அழாதே! ஷவரை திறந்து என்னைக் குளிப்பாட்டி விடு. இந்தா சோப்பைப் போட்டுவிடு. வேலைதானே! சும்மா இல்லையே இதற்கெல்லாம் சம்பளம் தானே!" என வலோற்காரமாய்....

தனக்கு நேர்ந்த அவமானத்தை அசிங்கத்தை..... கத்தி.... குழறி..... விம்மி விம்மி அழுகையாக வெளிப்படுத்தினாள் வரதா.

நான் இடித்து போய் ஒன்றும் பேச முடியாது பிரமித்து நின்றேன்.

இது வரதாவுக்கு மட்டுமல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“வேலைக்கொரு பிரச்சனையுமில்லையே. சம்பளமெல்லாம் ஒழுங்காகக் கிடைக்குதுதானே. பிறக்கென்ன பிரச்சனை”**

ஏழ்மை, வறுமை எப்படி எமது சமூகத்தில் பந்தாடப்படுகிறது....? இப்படியான துன்பங்கள் கொடுமைகள் பல. ஆனால் ஒரு வரதாவின் செய்திதான் எமது காதுக்கு எட்டியுள்ளது நிதர்சனமாக.

அழும் வரதாவை ஒருவாறு தேற்றி அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்தேன்.

வரதா என் கண்முன் இல்லை.

பல வரதாக்கள் இப்படிப் படையெடுத்துக் கண்ணீரும் கம்பலையுமாக எம் சமூகத்தில் ஊசலாடுகிறார்கள்.

*** *** ***

திடீரென ஒரு நாள் வரதா என்னிடம் வந்தாள். வறுமை பிடுங்கித் தின்பதாகவும் கடலோ, கயிறோதான் இறுதியில் தஞ்சமென நம்பியிருக்க ஒரு ஒளிக்கீற்றுப் போல வேலையொன்று கிட்டியிருக்கிறதென்றாள். அதனையும் ஏற்றுக்கொள்ளலாமா? என்று புத்திமதி கேட்கவே என்னிடம் வந்ததாகக் குறிப்பிட்டாள். எப்படியான வேலை? சம்பள விபரமென்ன? எந்த இடத்தில்? என்றெல்லாம் விளக்கமாகக் கேட்டேன்.

ஒருவர் நடாத்தி வந்த சலூனில் வேலைக்கு இடமிருக்கிறது. அதாவது முடி திருத்தும் தொழில். ஆண்கள்தான் வாடிக்கையாளர்கள். மறைவாக உடல் சுகம் பெறும் வீட்டுவேலை என்ற போர்வையில் இருப்பதைவிட வெளிப்படையாக இப்படியொரு தொழிலை அதுவும் பெண்கள் ஈடுபடாத துறையில் இதனை மேற்கொள்வது நல்லதென வாழ்த்தி அனுப்பினேன். அந்தச் சலூனை மகனும் வயதான தந்தையும் நடத்தினர். விபத்தொன்றில் மகன் மரணமடையவே தந்தையார் தனியே அதனை நடத்த முடியாமல் தள்ளாடினார். நானே இதனை அறிந்து அங்கு வேலை செய்ய ஒப்புக்கொண்டேன் அம்மா... அதுதான் உங்களிடம் ஒரு யோசனை கேட்க வந்தேனென்றாள். பெண்கள் மாத்திரமல்ல யாருமே பாரம்பரியத் தொழிலை மட்டும்தான் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றில்லை. புதிய புதிய தொழில்களுக்கான கதவுகளையும் பிறர் திறந்துவிடுவார்களென்று காத்திராமல் நாமே நமது சிந்தனைகளை யுக்திகளைப் பயன்படுத்திப் புதிய வாசல்களைத் திறக்க வேண்டுமெனக் கூறி வரதாவை உற்சாகப்படுத்தி அனுப்பினேன்.

மறைவாகப் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்செயல்களைக் கண்டுகொள்ளாத சமூகம் சலூனில் பெண் ஆணுக்கு முடி திருத்துவதற்கும் பல சொட்டைகள் சொல்லும். எதற்கும் தயங்காதே! துணிச்சலுடன் வேலையைத் தொடங்கு என வாழ்த்தி ஊக்குவித்தேன்.

ஆண்கள் முடிதிருத்தும் சலூனில் ஒரு பெண்ணும் வேலை செய்கின்றாள் என்ற செய்தி அவ்வட்டாரம் முழுதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. சலூனும் ஓகோவென்று நல்ல வருவாயுடன் தொழிற்பட்டது. சலூன் பெரியவரும் வரதாவை மரியாதையாகவே நடாத்தினார்.

பெண் முடிதிருத்துகிறாளென்றதும் ஆண்களைவிட அழகுக்கலையில் பெண்களே விஞ்சி நிற்பர் என்ற கருத்துமட்டுமல்ல, பெண்களைக் கவரும் வகையில் ஆண்களின் அழகை ஆணை விடப் பெண்ணே சிறப்பாக வடிவமைப்பாள் என்ற நம்பிக்கையிலும் கூடப் பல ஆண்கள் இச்சலூனை முற்றுகையிட்டனர். வருவாய் பெருக, சலூன் தளபாடங்களும் தேவைகளும் பெருகின. ஓய்ந்து கிடந்த சலூனுக்கு ஒரு பொற்காலம் பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயத்திற்கு இரு பக்கங்கள் என்பது போல சில கருத்துக்களுக்குப் பலவிதமான பார்வைகள், சிந்தனைகள், முடிவுகளுண்டு.

உலகில் பல்வேறுவகையான மாற்றங்கள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் புதுப்புதுச் சிந்தனைகள் தலைதூக்குகின்றன. இவை பலருக்கு நன்மையையும் மகிழ்வையும் பெருமிதத்தையும் அள்ளித் தெளிக்கின்றன. தேவையே புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்குக் காரணமாயிருக்கிறது என்பது போல பாரம்பரியமற்ற பெண்களுக்கான தொழிலாக சலூனின் முடிதிருத்தும் வேலையில் வரதா அமர்ந்தாலும் அவளுடைய குடும்பத்தின் வறுமைக்கு அத்தொழிலே ஆப்பு வைத்ததினால் அவள் மகிழ்வாகவே அத்தொழிலில் காலூன்றிக் கொண்டாள்.

நாட்கள் வாரங்களாகி மாதங்களைப் பிரசவித்தன.

பெண்கள் முன்னேற்றம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் பங்கு கொண்டு பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அம்மா அம்மா என்றொரு குரல் வீதியின் மறுபக்கத்திலிருந்து ஒலித்தது.

பட படவென்று என்னிடம் ஓடிவந்தாள் வரதா.

அடே! வரதா! நல்லாயிருக்கிறியே. புதிய தொழில் போக்குவரத்து எல்லாம் எப்படி என்றேன்.

"அதையேன் கேட்கிறீர்கள் அம்மா? நல்லவேலை எனக்குப் பிடித்ததுதான். சம்பளமும் எனக்கு நிறைவைத் தருகிறது. ஆனால்.... ஆனால்.... என்று இழுத்தாள்.

"என்ன ஆனால்........ சந்தோஷமாய் இருக்கிறேனென்று மனம் நிறைவாகச் சொல்லேன்." என்றேன்.

"இல்லையம்மா. அங்கும் எனக்கு நிம்மதி இல்லை. நான் இருக்கும் வீட்டைவிட்டு வேறிடம் போகலாமெனப் பார்க்கிறேன்." என்றாள்.

"வேலைக்கொரு பிரச்சனையுமில்லையே. சம்பளமெல்லாம் ஒழுங்காகக் கிடைக்குதுதானே. பிறக்கென்ன பிரச்சனை" என்றேன் அவளுடைய நிலையைக் கணிப்பிட்டுப் பார்க்க.

பணம் வேலை பற்றி எனக்கொரு குறையோ கஷ்டமோ கரைச்சலோ இல்லை. சம்பளமும் சுமாராகத் தருகிறார்.

"அப்ப நல்லதுதானே! இதற்கு மேலை உனக்கென்ன கஷ்டம்?" என்றேன்.

"அதையேன் கேட்கிறியள்? அண்டை அயலெல்லாம் என்னை ஒரு கேடு கெட்டவளாக, மானங்கெட்டவளாகப் பார்க்கிறார்கள். கண்டகண்ட ஆம்பிளையெல்லாம் வாற இடத்தை அவங்களுக்கு ஷேவ் எடுத்து முடிதிருத்துறதென்பது பொம்பிளை செய்யுற வேலையா? அவனைத் தொட்டு கன்னத்தைப் பிடித்து...... சே...ச்....சே... என்னம்மா சொல்ல. மெதுவாக இந்த வேலையையும் கைவிட்டு வேறு ஏதாவது பார்க்கலாமோ எனத் தேடித்திரிகிறேனென்றாள்.

ஆனாலும் தற்போது அவளுடைய தோற்றம் நடை, நாகரீகமெல்லாம் அவளுடன் பேசுவதே ஒரு புதினமாக இருந்தது.

"நீ என்ன தொழிலைத்தான் மேற்கொண்டாலும், நமது பெரியவர்கள் கூறி வைத்தது போல, செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமைதான் நமது செல்வம், ஈட்டும் பணமல்ல, தொழிலில் வல்லமைதான் நமக்கான சொத்து என மனதில் இருத்தி வேலையைச் செய்" என்றேன். சரி அம்மா நான் போய் வருகிறேன் என்று வணக்கம் கூறி விடைபெற்றாள்.

வறண்ட தரையில் வானம் பொழிய பட படவென்று பயிர் பச்சைகள் முளைத்தெழுவது போல பெண் முடிதிருத்துனர்களைக் கொண்ட பல சலூன்கள் ஊரின் பல பாகங்களிலும் இயங்கத் தொடங்கின. ■

***　　***　　***

**பத்மா சோமகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பெண்களின் வேலை உலகிற்கான வகிபங்கு

இலங்கையானது உலகின் முதற் பெண் பிரதமரை உருவாக்கிய அரசு என்ற வகையில் முடி சூடிக்கொண்டதை நாம் இன்றைக்கும் பெரும் கௌரவத்துடனேயே நினைவுகூருகின்றோம். அதேவேளை, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவிக்கும் ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாக நாம் உலக அரங்கின் முன் பெருமிதமடைவது, இந்நாட்டுப் பெண்களுக்குத் தாம் விரும்பும் எத்துறையிலும் ஈடுபடுவதற்குள்ள வரையறையற்ற பிரவேசங்கள் தொடர்பான ஓவியத்தை எடுத்துக்காட்டியேயாகும். எவ்வாறாயினும் அந்த ரம்மியமான ஓவியத்தின் பின்னால் மறைக்கப்படுள்ள இலங்கைப் பெண்களின் தற்போதைய வேலை உலகம் பற்றிய யதார்த்தம் அல்லது அவலட்சணமான ஓவியமும் உண்மையிலேயே பரந்ததோர் சொல்லாடலைக் கட்டியெழுப்ப வேண்டிய ஒரு விடயப்பொருளாகும். ஏனெனில், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடையறாத போராட்டத்தில் மேற்கூறப்பட்ட விடயப்பொருளும் ஒரு முக்கியமான தோற்றப்பாடாக இருப்பதேயாகும்.

பெண்ணுடன் தொடர்புபட்ட வேலை உலகின் சிக்கல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கு முன்னர் அத்தொழில்சார் உலகத்திற்குப் பிரவேசத்தினைப் பெற்றுக்கொள்ளும்போது இந்நாட்டுப் பெண்கள் கடந்துவந்த முக்கியமான மைல்கற்களையும் அவற்றுடன் பின்னிப் பிணைந்த கலாசார ரீதியான பின்னணியையும் முதலில் ஆராய்ந்து பார்ப்பது முக்கியமானது. அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் ஒரு சாதாரண வீட்டுப் பெண்ணாகப் பெண்ணால் ஈடேற்றப்படுகின்ற பெரும் பணிகளுக்கு விசேடப் பெறுமதி கிடைக்காமையும், அவை பெண்களால் தமது வீட்டுக்கும் குடும்பத்துக்கும் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் என்று எடுத்துக் காட்டுவதுமான கலாசாரப் பின்னணியைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் நாம் தொழில்சார் உலகின் எல்லைகளை அடையாளமிட முயற்சிப்பதும் இத்தகைய பாதகமான மனோபாவங்களை முதலாகக் கொண்டேயாகும் எனக் குறிப்பிடுவதில் தவறில்லை.

எவ்வாறாயினும், இலவசக் கல்வியெனும் பெறுமதி வாய்ந்த ஔடதம் இந்நாட்டுச் சமூகச் சட்டகத்திற்குள் உட்செலுத்தப்பட்டவுடன் பெண்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டிருந்த வேற்றுமையானதும், பல்தரப்பட்டதுமான பல பழைமைவாத சமூகக் கருத்தியல்கள் கலைந்துசெல்ல ஆரம்பித்தது. இது அதுவரை காலமும் பெரும்பாலும் வீட்டிலேயே தடுத்து வைத்துக்கொண்டு திருமணம் நடைபெறும்வரை வீட்டு வேலைகளுக்குப் பழக்கப்படுத்தப்பட்ட பெண் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பெற்றோர் கொண்ட ஊக்கத்தின்மூலம் தெளிவாகின்றது. கல்விக்கு அத்தகைய இலவசப் பிரவேசம் பெற்றுக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்டுள்ள ஒரு தருணத்தில், ஆண்-பெண் பாகுபாடின்றித் தமது பிள்ளைகளுக்கு அது கிடைக்காமலிருப்பதற்கு இடமளிப்பது முட்டாள்தனமானதெனப் பெரும்பாலான பெற்றோர்கள் சிந்தித்தமை அதற்குக் காரணமாகிய எளிமையான காரணியாக இருக்கலாம்.

அக்காலத்தில் பிள்ளைகளின் கல்விக்காக விசேடமான மேலதிகச் செலவினை மேற்கொள்ளக்கூடிய வசதியான பொருளாதாரப் பின்னணியைக் கொண்டிருக்காத இந்நாட்டுச் சாதாரண மக்களுக்கு இலவசக் கல்வியென்பது கைவிடலாகாத ஒரு கொடையெனத் தென்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், அதன் இறுதிப் பெறுபேறு இந்நாட்டுப் பெண்களுக்கு இலவசக் கல்வியினூடாகத் தொழில்சார் உலகிற்குள் பரந்தளவு பிரவேசம் உருவாகியமையாகும். இதனூடாகச் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்மட்டப் பதவிகளை வகிப்பதற்குப் பெண்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தமையின் மூலம் மரபுரீதியான சட்டகத்தினுள் வடிவமைக்கப்பட்டதான வீட்டு வேலைகளுக்கும் குடும்ப நடவடிக்கைகளுக்கும் மட்டும் அர்ப்பணிப்புச் செய்யப்பட்ட பின்பற்றத்தக்க குடும்பப் பெண்ணின் ஓவியம் ஓரளவு மங்கலாக்கப்பட்டது.

இருப்பினும், இங்குள்ள முக்கியமான விடயம் யாதெனில், இன்னமும் எமது சமூகத்தில் பெண்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள கருத்துருவம் ஏற்கெனவே கூறப்பட்ட பின்பற்றத்தக்க குடும்பப் பெண் என்பதாகவே அமைந்திருப்பதனால் வேலை உலகில் பிரவேசித்துள்ள பெண்கள் சமுதாயத்திற்கும் பொதுச் சமூகத்தின் மனோபாவ ரீதியான பின்புலத்திற்கும் இடையில் நிதமும் இடம்பெறுகின்ற மோதல் பாரியதாக அமைந்திருப்பதாகும்.

இவ்வாறு முறையாக மரபு ரீதியான சட்டகத்திலிருந்து விடுபட்டுத் தொழில்சார் உலகில் அடியெடுத்து வைத்ததன் மூலம் இலங்கைப் பெண்கள் சமுதாயம் தமக்கெதிராக இடம்பெறுகின்ற பாகுபாடுகளுக்கெதிராக மேற்கொள்ளும் அமைதிப் போராட்டத்தில் தமது உரிமைகளுக்காகப் போராடும் வீச்சு குறுகுவதற்குப் பதிலாக அதன் மறுபுறமே இடம்பெற்றுள்ளது. அது ஏனெனில், தொழில்சார் உலகில் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற முறைகேடுகள் மற்றும் உரிமை மீறல்கள் பல புதிய வடிவங்களில் உருவாகியமையுள்ளமையினாலாகும். தமது வேலைத் தளங்களில் உடல் மற்றும் உளரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகுதல், உழைப்பாளர் படையினுள் தகைமைகளுக்குப் பொருத்தமான சம்பளத்தைக் கொண்ட தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்படாதமை, முறைசாராத் துறையில் பெண்கள் மயமாக்கத்தில் நிலைகொண்டு குறைந்த விலையிலான ஊழியர்களாக உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாதல், புலம்பெயர் பெண் தொழிலாளர்களாகப் பணியாற்றும்போது குடும்பச் சூழலில் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு முகங்கொடுத்தல் ஆகிய பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு மத்தியில் பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தின் வீச்சு மென்மேலும் விரிவடைந்திருப்பது தெட்டத் தெளிவாகவுள்ளது.

இதன் காரணமாகத் தொழில்சார் சூழலில் இந்நாட்டுப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான பொறுப்பு சமூகத்திடமும் ஒப்படைக்கப்படுகின்றது. ஏனெனில் மேற்படி உரிமைகளின் பாதுகாப்புத் தன்மையானது ஜனநாயக சமூகச் சட்டகத்தின் பண்புகளை உலகிற்கு எடுத்தியம்புவதேயாகும். அதேவேளை, தாம் முகங்கொடுக்கின்ற உரிமை மீறல்களுக்கும் ஏனைய முறைகேடுகளுக்கும் எதிராக எழுவதற்குப் பெண்களிடம் காணப்படுகின்ற பின்னடைவான தன்மையுடன் உருவாகியுள்ள பாதகமான பின்புலத்தில் இத்தகைய விடயங்கள் தொடர்பாகச் செயற்படும்போது இந்நாட்டு மக்கள்மீது இயல்பாகவே அதிக சுமையை ஏற்றுவதற்கு அது காரணியாக அமைந்துள்ளது.

தமது தொழில் நிலையங்களில் முகங்கொடுக்க நேரிடுகின்ற பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு எதிராக எழுவதற்குப் பெண்களிடம் காணப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்டுள்ள பின்னடைவுத் தன்மைக்குப் பல காரணங்கள் உள்ளதால் அவை தொடர்பாகவும் கவனஞ்செலுத்துவது முக்கியமானது. அவற்றுள் பிரதான காரணி யாதெனில், போட்டித்தன்மைமிகு தொழில் சந்தையில் ஆண்-பெண் பாகுபாடின்றித் தாம் ஈடுபட்டுள்ள தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சகல தொழில்வாண்மையாளர்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற பெரும் முயற்சியின்போது எத்தகைய அழுத்தத்திற்கு மத்தியிலும் மௌனமாகப் பார்த்திருக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் உருவாகியிருப்பதாகும். அப்பாதகமான போக்கானது பெண்கள் சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் அழுத்தம் பாரியதாக உள்ளதுடன், தொழில்சார் சூழலில் இந்நாட்டுப் பெண்களின் உண்மையமான ஓவியம் திரைநீக்கம் செய்யப்படாதமைக்கும் அது ஒரு காரணமாகும்.

எவ்வாறாயினும், இந்நாட்டில் நடத்தப்படுகின்ற சகல மேதின ஊர்வலங்களிலும் சிவப்புத் தொப்பிகளை அணிந்து தொழில் சுலோகங்களை வாசித்து, கொழும்பு ஹைட் மைதானத்திற்கோ, கெம்பல் மைதானத்திற்கோ, நகரசபை மைதானத்திற்கோ ஊர்வலம் வந்து ஒன்றுதிரளும் பெண்களைக் காண்கின்ற சிலர் தொழில்சார் உலகில் நாம் பேசுகின்ற விதத்திலான அமைதி உண்மையிலேயே நிலவுகின்றதா என ஐயம் கொள்ளலாம்.

இருப்பினும், வருடத்தில் எஞ்சியுள்ள 364 நாட்களில் இந்நாட்டுப் பெண்கள் தொழில்சார் சூழலில் முகங்கொடுக்கும் சவால்கள் மற்றும் சிக்கல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவோமாயின் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப்போன்ற அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள துரதிஷ்டவசமான நிலை பற்றிய விடயம் உண்மையென்பது எவருக்கும் தெட்டத் தெளிவாகப் புலப்படும்.

தமக்கு எதிராக இடம்பெறுகின்ற அழுத்தங்களுக்கு மத்தியில் அமைதியாக இருக்கின்றதான, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட நிலைமையினுள் பெண்களுக்கு எதிராக தொழில் சூழலில் இடம்பெறுகின்ற பாலியல் ரீதியான அழுத்தங்களும் அதிகரித்துள்ளன. தொழில்சார் சூழலில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு மட்டுமல்ல, சில பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அலுவலகங்களுக்கு வருகை தருகின்ற பெண்களும் இந்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பது நாளாந்தப் பத்திரிகைகளை வாசிக்கின்ற எவரும் நன்கறிந்த விடயமாகும். இதேவேளை, இலங்கையில் இருக்கின்றதான சுதந்திர வர்த்தக வலயங்களில் பணியாற்றும் ஆடைத் தொழில்துறைப் பெண் ஊழியர்கள் தொழில்சார் சூழலைப் போலவே அதன் வெளியிலும் பல்வேறுபட்ட பாலியல் அழுத்தங்களுக்குள்ளாகின்றனர் என்பது வெளிப்படை என்பதால், வேலை உலகில் அவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது மிக முக்கியமானது.

இவற்றைத் தவிர, இலங்கையில் பெண்கள் தமது சேவைகளைப் பெற்றுத்தரும் வேலை உலகமானது அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்ற இடமாகவும் மாறியுள்ளதை நாம் விசேடமாகக் கருத்திற்கொள்ள வேண்டும். இதனால் பெண்கள் பெரும்பாலும் ஒருவகையில் ஓரங்கட்டப்படுகின்ற நிலைமைகள் உருவாகியிருப்பதால் தொழில்சார் சூழலில் நல்ல மன நிலையுடன் சேவையில் ஈடுபடுகின்ற தொழில்வாண்மையாளர் ஒருவரிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற உச்சமட்ட ஆக்க விளைவினை இந்நாட்டுப் பெண்களிடமிருந்து பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது. அது ஏனெனில், தாம் சேவையை வழங்குகின்ற இடத்திலுள்ள காரணிகள் நல்ல மனநிலையுடன் சேவையில் ஈடுபடுவதன் பொருட்டு பெற்றுத்தருகின்ற உந்துசக்தியானது தொழிலாளியின் ஆக்கவிளைவினைத் தீர்மானிக்கும் பிரதான அளவுகோலாக அமைந்திருப்பதேயாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தெரிகின்ற பிரதான விடயம் யாதெனில், தொழில்சார் உலகில் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதும், அதிக ஆக்க விளைவுடன் கூடியதாகச் சேவையில் ஈடுபடுவதற்கான மனநிலையைப் பேணிச்செல்லக்கூடியதுமான சூழலைக் கட்டியெழுப்பும் செயற்பொறுப்பு இந்நாட்டு மக்கள் சமூகத்திலுள்ள எம்மனைவரினதும் பொறுப்பென்பதாகும். அதேவேளை, பெண்கள் சமுதாயம் தொழில்சார் உலகில் முகங்கொடுக்கும் சிக்கல்கள் அரச கொள்கை ரீதியாகவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காலம் பிறந்திருப்பது சீடோ சமவாயத்தில் வருகின்ற விதப்புரைகளை நேரடியாகவே அரச மற்றும் தனியார் துறைகளில் நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையென்பது தெளிவாகக் காணப்படுவதனாலாகும். இறுதியாகத் தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அளப்பரிய வீட்டு வேலைகளை விலைமதிப்பின்றி நிறைவேற்றுகின்ற இந்நாட்டுப் பெண்களுக்கு ஆகக்குறைந்தது தொழில்சார் சூழலிலேனும் உரிய வரவேற்பும் சம உரிமைகளும் கிடைக்கப் பெற்றாலன்றி, இந்நாட்டுப் பெண்கள் பிரதமர், ஜனாதிபதி பதவிகளை வகித்தார்கள் எனப் பெருமை பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ■

டபிள்யு. சச்சிந்த துலங்சன
H3-Foundation – Hearts and hands of Humanity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ. 50/-